விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 தை 05 திங்கட்கிழமை (19.01.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 031

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

## இருதரப்பு விவகாரம் சுஸ்மா - மங்கள சந்திப்பு

### ஜெனிவா கூட்டத் தொடருக்கு ஆதரவு திரட்டும் முயற்சி



புதுடில்லிக்கு விஜயம் செய்துள்ள புதிய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

23 ஆம் பக்கம் பார்க்க...

### பிரதம வேட்பாளராக நிமால் போட்டி



(கொழும்பு)

பொதுத்தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் பிரதம மந்திரி வேட்பாளராக எதிர்க்கட்சி தலைவர் நிமால்சிறிபால டி சில்வாவே போட்டியிடுவார் என்று தெரிவிக்

24 ஆம் பக்கம் பார்க்க...

## இடைக்கால பட்ஜெட்டுக்கு 20 ஆயிரம் கோடி ஒதுக்கீடு

### ஜனவரி 30 முதல் சம்பள அதிகரிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசாங்கத்தின் இடைக்கால பட்ஜெட் எதிர்வரும் 29-ம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதில் 100 நாள் வேலைத்திட்டங்களுக்காக 20 ஆயிரம் கோடி ரூபாய ஒதுக்கப்படவுள்ளதாக நிதியமைச்சு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த இடைக்கால பட்ஜெட் அமைச்சரவையின் அனுமதிக்காக வரும் 29-ம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இது குறித்து நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க கருத்து வெளியிடுகையில்,

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் இடைக்கால பட்ஜெட்டில் நிறைவேற்றப்படும். ஆனால் முன்னைய அரசாங்கம் திறைசேரியை காலியாக்கி விட்டது. இதனால் வருமானத்தை இனித்தான் தேட வேண்டும்.

23 ஆம் பக்கம் பார்க்க...

### கே.பியை கைது செய்யக் கோரி நீதிமன்றில் இன்று மனுத்தாக்கல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் சர்வதேச பொறுப்பாளர் கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதனுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்படவுள்ளது.

ஜே.வி.பி இந்த மனுவைத் தாக்கல் செய்யவுள்ளது.

இன்றைய தினம் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத்தினால் இந்த மனு தாக்கல் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குமரன் பத்மநாதன், கடந்த 2009-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் மலேசியாவில் வைத்து கைது செய்யப்பட்டு இலங்கைக்கு அழைத்து வரப்பட்டார்.

எனினும் அவருக்கு எதிராக இது வரையில் சட்ட நடவடிக்கை எவையும் மேற்கொள்ளப்படவில்லை.

அவர் இலங்கையில் புனர்வாழ்வளிக்கப்பட்டு கிளிநொச்சியில் உள்ள

23 ஆம் பக்கம் பார்க்க...

### அரச பணத்தில் 2 பில்லியன் விளம்பரத்திற்காகச் செலவு

#### முன்னாள் ஜனாதிபதி செலவிட்டாராம்

(கொழும்பு)

கடந்த 8ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது விளம்பரங்களுக்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச 2 பில்லியன் ரூபாய் அரசாங்கப் பணத்தைச் செலவிட்டுள்ளதாக நிதி அமைச்சின் அதிகாரிகளை மேற்கோள் காட்டி கொழும்பு ஆங் கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தத் தேர்தலின் போது அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் பரப்புரை மற்றும் விளம்பரங்கள் செய்வதற்காக மகிந்த ராஜபக்ச 2 பில்லியன் ரூபாயை செலவு செய்திருந்ததாக இவ்வூடகம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் இந்த ஊடகம் குறிப்பிடுகையில், தொலைக்காட்சிகளில் விளம்பரங்கள் செய்வதற்காக ஒரு பில்லியன் ரூபாயையும்,

23 ஆம் பக்கம் பார்க்க...

### கோவில் கேணியில் இளைஞனின் சடலம்

(கரணவாய்)

ஆலயத்தின் கேணியிலிருந்து இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றிரவு 10 மணியளவில் புற்றளை பிள்ளையார் கோவில் பகுதியில் இடம்பெற்றது.

மாமுனை செம்பியன்பற்று பகுதியைச் சேர்ந்த விஜயகுமார் விஜயேந்திரன் (வயது 22) எனும் இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

புலோலி தெற்கு புற்றளை பிள்

23 ஆம் பக்கம் பார்க்க...

### பாதுகாப்பை ஏற்க மறுத்த பாதுகாப்பு அமைச்சர்



(கொழும்பு)

மைத்திரி அரசின் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள ருவண் விஜேவர்த்தன தனக்கான விசேட பாதுகாப்பு அதிகாரிகளை மறுத்துள்ளார்.

பொதுவாக பாதுகாப்பு அமைச்சின அமைச்சர் மற்றும் பிரதியமைச்சர்களுக்கு விசேட கமாண்டோக்கள் பாதுகாப்புடன் இரண்டு அடுக்கு பாதுகாப்பு வழங்கப்படுவது வழக்கமாக உள்ளது.

24 ஆம் பக்கம் பார்க்க...

## பொலிஸார் அதிரடி


## இருபது கொள்கலன்களில் ஆயுத தளபாடங்கள் மீட்பு

### மகிந்த ராஜபக்சவுக்கு சொந்தமானதா?

(கொழும்பு)

காலி துறைமுகத்தில் இருந்த கப்பல் ஒன்றில் இருந்து ஆயுதங்களை கொண்ட பல கொள்கலன்கள் பொலிஸாரினால் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

முஹனுவர என்ற குறித்த கப்பல எவன்காட் என்ற தனியார் பாதுகாப்பு சேவையினால் குத்தகைக்கு எடுத்து நடத்திச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.



காலி பிரதி பொலிஸ் மா அதிபருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றினை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது ரி - 56 ரக துப்பாக்கிகள், தானியக்கி துப்பாக்கிகள், 84 எஸ் ரைபர் ரக ஆயுதங்கள் மற்றும் அரை தானியக்கி துப்பாக்கிகள் சுமார் மூவாயிரம் என்பன மீட்கப்பட்டன.

24 ஆம் பக்கம் பார்க்க...

### மோடியை சந்திக்கிறார் மங்கள சமரவீர

(புதுடில்லி)

இந்திய பிரதமர் நரேந்திர மோடியை இன்று பிற்பகல் 12.30 மணியளவில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தவுள்ளார்.

அத்துடன், இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் மற்றும் காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி ஆகியோரையும் அவர் சந்திக்க நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

புதிய அரசாங்கம் பொறுப்பேற்ற ஒருவார காலத்திற்குள், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர புதுடில்லிக்கு மேற்கொணடுள்ள

23 ஆம் பக்கம் பார்க்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# முன்னாள் ஜனாதிபதியிடமிருந்து நாட்டை காத்தவன் நானே!

## சோதிடர் சுமணதாச பெருமிதம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கு கயிற்றை கொடுத்து தேர்தலை முன்கூட்டியே நடத்த வைத்தது தான் எனவும் அப்படி தேர்தல் நடக்காமல் இருந்தால், அவர் வசிய மந்திரத்தை உச்சரித்து கொண்டு 2017ம் ஆண்டு வரை அலரி மாளிகையில் இருந்திருப்பார் என மகிந்த ராஜபக்ஷவின் ஆஸ்தான சோதிடர் சுமணதாச அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் அவர் இதனை கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல் ஆணையாளரையும் பொலிஸ் மா அதிபரையும் புகழ்ந்து அவர்களால் நாடு காப்பாற்றப்பட்டது என பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக எழுதுகின்றனர்.

நான் இல்லாவிட்டால் அவர்களுக்கு பணியாற்ற தேர்தல் ஒன்று வந்திருக்குமா?. தேர்தல் 2017-ம் ஆண்டே நடைபெறவிருந்தது.

முன்னாள் ஜனாதிபதிக்கு கயிற்றை கொடுத்து தேர்தலை நடத்த நானே அவரை இணங்க வைத்தேன். அப்படியில்லை என்றால், அவர் வசிய மந்திரத்தை உச்சரித்து கொண்டு 2017-ம் ஆண்டு வரை அலரி மாளிகையில் இருந்திருப்பார்.

இவற்றை நாங்கள் பகிரங்கமாக கூற முடியாது. எவரும் இதனை தமது அறிவை கொண்டு புரிந்து கொள்ள வேண்டும்.

நாடு பயணிப்பதை பார்த்த போது, முன்னாள் ஜனாதிபதி தொடர்ந்து இரண்டு வருடங்கள் ஆட்சியில் இருந்தால் எமக்கு நாடு என்று ஒன்று மீதமிருக்காது என்பதை நாம் உணர்ந்தோம். அந்த எண்ணத்திலேயே நாங்கள் இதனை செய்தோம்.

ராஜபக்ஷ ஆட்சியில் இருந்தால் எமக்கு நல்லதாக இருந்திருக்கும், ஆனால் அது நாட்டுக்கு கெடுதியாக முடிந்திருக்கும்.

யார் என்ன கூறினாலும் எமது வயிற்றை விட நாங்கள் எமது நாட்டை நேசிக்கின்றோம். உண்மையில் கடந்த 9 ஆண்டுகள் நாட்டை நாங்களே நிர்வகித்தோம் எனவும் சுமணதாச அபேகுணவர்த்தன குறிப்பிட்டுள்ளார். (எ)

# புலமைப்பரிசில் பரீட்சையில் இவ்வாண்டு மாற்றம் இல்லை

## தேசிய கல்வி ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

5-ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் இந்த ஆண்டில் மாற்றங்கள் செய்யப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

5-ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள்களில் திருத்தம் கொண்டு வர திட்டமிடப்பட்டிருந்து. பகுதி ஒன்று பகுதி இரண்டு என வழங்கப்பட்ட பரீட்சை வினாத்தாள்களை ஒரே வினாத்தாளில் வழங்க உத்தேசிக்கப்பட்டிருந்தது.

எனினும் இந்த உத்தேச திட்டம் இந்த ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட மாட்டாது என தேசிய கல்வி ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஒன்றரை மணித்தியாலத்திற்கு காலத்தை வரையறை செய்து ஒரு வினாத்தாள் வழங்குதவற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்தன. எனினும் பரீட்சை முறைமையில் காணப்படும் சில பிரச்சினைகள் குறித்து சுட்டிக்காட்டப்பட்டதனைத் தொடர்ந்து இந்த புதிய திட்டத்தை அமுல்படுத்தும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

ஒன்றரை மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக பரீட்சை எழுதுவது மாணவர்களுக்கு சிரமமானது எனவும் சிறிய இடைவேளை வழங்கப்பட வேண்டுமெனவும் ஆசிரியர்கள் பரிந்துரை செய்துள்ளனர்.

இந்தப் பரிந்துரை உள்ளிட்ட ஏனைய சில விடயங்கள் குறித்து ஆராய்ந்து திருத்தங்களுடன் அடுத்த ஆண்டில் புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# வடக்கிற்கு வருவதில் தொடரும் சிக்கல்கள்

வெளிநாட்டுப் பயணிகள் வட மாகாணத்திற்கு வருவதற்கு விதிக்கப்பட்டிருந்த பயணத்தடை நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையிலும், தொடர்ச்சியாக வெளிநாட்டுப் பயணிகள் வடக்கிற்கு வருவதற்கான சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியிருப்பதாக தெரியவருகின்றது.

புதிய ஜனாதிபதி ஆட்சி பொறுப்பேற்றதன் பின்னர் வடக்கிற்கான பயணத்தடை நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இலங்கைக்கு வந்த சில வெளிநாட்டுப் பயணிகள், தாம் வடக்கிற்கு வருவதற்கு பல சிக்கல்களை எதிர்கொள்வதாக சுட்டிக் காட்டியிருக்கின்றனர்.

இதேவேளை வவுனியா- ஓமந்தை சோதனைச் சாவடியில் நடைமுறையில் இருந்த கடவுச்சீட்டு பதிவு நடவடிக்கை தற்போதும் அமுலில் இருப்பதுடன், கடவுச் சீட்டுடன் வந்த சிலர் பதியப்பட்டே அனுப்பப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இந்நிலையில் இவ்வாறான தொடர் நடவடிக்கைகள் வெளிநாட்டவர்கள் இலங்கைக்குள்ளும், வடக்கிற்கும் வருவதற்கான அச்ச நிலைகளை மேலும் அதிகரிப்பதாகவே உள்ளது. (எ)

# தேசத்தின் மகுடம் கண்காட்சி இல்லை

தேசத்தின் மகுடம் (தெயட்ட கிருள) எனும் கண்காட்சி 2015-ம் ஆண்டு நடத்தப்படமாட்டாது என்று உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த கண்காட்சி, சுதந்திர தினத்துக்கு பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கத்தினால் கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டுவரையும் நடத்தப்பட்டது.

2007, 2008 மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம் மற்றும் வளாகத்திலும் 2010 ஆம் ஆண்டு கண்டியிலும் 2011ஆம் ஆண்டுமொனராகலையிலும்2012ஆம்ஆண்டு அநுராதபுரத்திலும் 2013ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்திலும் 2014ஆம் ஆண்டு குளியாப்பிட்டியவிலும் நடத்தப்பட்டது.

2015ஆம் ஆண்டு மாத்தறையில் நடத்துவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கம் ஏற்கெனவே தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (எ)

# வாமதேவனின் மணிவிழா இன்று

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய அதிபர் சண்.வாமதேவனின் மணிவிழா இன்று காலை பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

ஆசிரியர், உப அதிபர், அதிபர் என்ற பதவிகளில் கடந்த 23 ஆண்டுகள் மேற்படி பாடசாலையில் கடமையாற்றிய சண்.வாமதேவனின் மணிவிழாவில் முக்கிய பிரமுகர்கள் உரையாற்றவுள்ளனர். (நு)

# விபத்தில் சிக்கி இரு இளைஞர்கள் படுகாயம்

(கிளிநொச்சி)

இராணுவ வாகனமும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் சென்ற இரு இளைஞர்கள் படுகாயமடைந்தனர்.

இச் சம்பவம் நேற்று மாலை 5.30 மணியளவில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு அருகில் இடம்பெற்றது.

இச் சம்பவத்தில் உருத்திரபுரம், விசுவமடு பகுதியை சேர்ந்த நடராசா சிவகரன் (வயது 23) மற்றும் கந்தபுரம் பகுதியை சேர்ந்த ஜோதிராசா ராஜ்குமார் (வயது 23) ஆகிய இரு இளைஞர்களே படுகாயமடைந்துள்ளனர்.

பரந்தரன் நோக்கி சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் திரும்ப முற்பட்டபோது பின்னால் வேகமாக வந்த இராணுவ பிக்கப் வாகனம் மோதியதாக கூறப்பட்டது.

காயமடைந்த இருவரில் ஒருவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-277)

# இலங்கை மீனவர்கள் 6 பேர் விடுதலை

இந்தியாவின் ஆந்திரா மாநிலத்தில் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் ஆறு பேரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் எதிர்வரும் 22 ஆம் திகதி நாட்டிற்கு வரவுள்ளதாக கடற்றொழில் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் லால் டி சில்வா கூறுகின்றார்.


அத்துடன் விடுதலை செய்யப்பட்ட மீனவர்களுக்கு சொந்தமான இரண்டு மீனவ படகுகளும் விடுவிக்கப்பட்டுள்ளன.

அதன் பிரகாரம் அண்மையில் கைது செய்யப்பட்ட இந்த ஆறு இலங்கை மீனவர்கள் மாத்திரமே தற்போது இந்தியாவிலுள்ளதாக கடற்றொழில் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கையில் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்ட 15 இந்திய மீனவர்களும், யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (எ)

# மரண அறிவித்தல்

## செல்லப்பா கதிரேசு



அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா இராமாசி தம்பதிகளின் அன்பு மகனும் பரமேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற முருகேசு அவர்களின் அன்புச் சகோதரனும், திருநாவுக்கரசு, பற்குணராசா, அரியரட்ணம், சந்திரகுமார், இந்திராதேவி, ரவிச்சந்திரன், சிறிகாந்தன் (பிரான்ஸ்), சகுந்தலாதேவி, கலாமதி ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், மலர், கலாறஞ்சினி, றஞ்சினி, விஜிதா, அரியநாயகம், சுகுணா, சுகந்தி, தவராசா, லிங்கேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 19.01.2015 (திங்கட்கிழமை) இன்று பிற்பகல் 2.00 மணிக்கு தகனக்கிரியைக்காக ஆரியம்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

(9185)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் கந்தையா சோமசுந்தரம்

(A.R.S.H (London) Public Health (Inspeetor)

ஸ்தாபகர்-சிவசக்தி ஜுவல்லறி, கிளிநொச்சி)



எமது நண்பனான சிவகுமார் அனுஜன் என்பவரது தாத்தா கந்தையா சோமசுந்தரம் அவர்கள் 18.01.2015 அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவில் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய . இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:-யாழ்ப்பாண இந்துக் கல்லூரி 2016 உயர்தர மாணவர்கள்.

(9181)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகனை பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் ஆலய பிரதம குருவின் வாழ்த்து

''ஈன்ற பொழுதில் பெரிதுவர்க் கும் தன்மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்'' எனும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு இணங்க எமது வித்தி யாலய அதிபர் கணிதச்சுடர் திரு சண் வாமதேவன் அவர்கள் பாடசாலை வளர்ச்சியில் தன் நிகரில்லா சேவையாற்றி தனது அறுபதாவது அகவையில் மணிவிழாக் காண்பதையிட்டு அகமகிழ்வடைகின் றேன். அவரின் ஓய்வுக் காலம் சீரும் சிறப்புடனும் அமைய எல்லாம்வல்ல அற்புத நர்த்தன விநாய கனின் பாதார விந்தங்களை வேண்டுகின்றேன்.

**சிவஸ்ரீ கதிர்காமநாதக்குருக்கள்.**



**ஸ்ரீ அற்புத நர்த்தன விநாய கர் சனசமூக நிலைய தலைவ ரின் வாழ்த்து**

யா/ கோண்டாவில் இராம கிரா மகிருஷ்ண மகா வித்தியாலய அதி பர் மதிப்புக்குரிய கணிதச்சுடர் திரு சண் வாமதேவன் அவர்கள் தனது அறுபதாவது அகவையை மிகவும் சிறப்பாக நிறைவு செய்துள்ளார். எமது மணி விழா நாயகன் பாடசாலை வளர்ச்சியில் தன்னை அர்ப்பணித் தவர். எங்கள் நிலையத்தின் செயற்பாடுகளில் பாடசா லையின் மூலம் பல்வேறு ஆதரவுகளை வழங்கும் ஒரு மாமனிதர். இன்று மணி விழாவை கொண்டாடுவ தையிட்டும், அவருக்காக வாமநாதம் எனும் சிறப்பு மலர் வெளியிடுவதையிட்டும் நாம் பெருமகிழ்வ டைகின்றோம். தொடர்ந்தும் அவரின் சேவை எமக்கு கிடைக்க எல்லாம் வல்ல ஸ்ரீ அற்புத நர்த்தன நர்த் தன விநாயகனை வேண்டுகின்றேன்.

**ம.சதீஸ்குமார், தலைவர் ஸ்ரீ அற்புதநர்த் தன விநாயகர் சன சமூக நிலையமும், குமரன் விளையாட்டுக்கழகமும்,**



மணிவிழா நாயகரின் மாண் புறு சேவை.... **எழுத்தறிவித்த வன் இறைவன் ஆவான்**

இக்கூற்று கல்வியை ஊட்டும் பெருந்தகைகளின் சிறப்பினை எடுத் துக் காட்டுகின்றது. இவ்வகையில் இன்று மணிவிழா காணும் கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியா லய அதிபர் மதிப்புக்குரிய திரு. சண் வாமதேவன் அவர் களின் சேவை மனப்பாங்கு எல்லோராலும் பாராட்டப்பட வேண்டியதே. அவரின் சேவை பாடசாலையின் வளர்ச்சியில் மட்டுமின்றி கிராமத்தின் முன்பள்ளி, தபால் திணைக்களம், வறுமையான மாணவர்களின் கல்வியுடன் பொருளாதார வளர்ச்சி என்பவற்றிலும் தங்கியிருப்பதை அவதானிக்க முடிகின்றது. எமது கிராமத்திற்கு கிடைத்த பெரும் பொக்கிஷமாக நாம் இவரை சிந்திக்கின்றோம். என்றும் இன்று போல் துடிப்புடன் சேவைபுரிய. இறைவனை வேண்டுகின்றேன்.

**திரு. இ.குவேந்திரநாதன் (கல்விக் கொடை யாளர்) உரிமையாளர் ராஜா பிளாசா.**



## திரு.சண் வாமதேவன்

**11.06.1993-10.09.2001- பிரதி அதிபர்- யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி.**
**11.09.2001-18.01.2015 அதிபர் யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி.**

**பெற்ற விருதுகள்- பிரதீபா பிரபா, கணிதச்சுடர், ஆசிரியர் திலகம், ஜெய்க்கா செயற்றிட்டத்தில் வெற்றி கண்ட அதிபர்.**



ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சன சமூக நிலைய செயலாளரின் எண் ணம்.... வாமநாதம் வாசிக்க மட்டுமல்ல சுவாசிக்கவும் தான்...

எமது சமுதாயத்தை வளம்படுத்தும் நிறுவ னங்களில் ஒன்றான யா/ கோண்டாவில் இராம கிருஷ்ண மகா வித்தியாலயத்தின் அதிபர் கணிதச் சுடர் திரு. சண் வாம தேவன் அவர்களின் அகவை அறுபதில் கொண்டாடப்படும் இம் மணிவிழா சாலப் பொருத்தமான விழாவாகும். எங்கள் கிராமப்பாடசாலைக்கும் ஒருதிருப்புமுனையை ஏற்படுத்தி இன்று சகல வளங்களுடன் விசாலமாக பசுமையாக காட்சி தரும் பாட சாலையை உருவாக்கிய பெருமை மணிவிழா நாயக னையே சாரும். மணிவிழா நாயகனை நாம் எமது நிலை யத்தின் பொன் விழாவில் **கணிதச் சுடர்** எனும் கௌரவத்தை வழங்கியிருந்திருந்தோம். அவர் ஒரு கணித மேதை என்ப தற்கு இக்கௌரவம் சான்று வகிக்கின்றது. மணிவிழா நிகழ்வு சிறப்புறவும் நிகழ்வில் வெளியிடப்படும் வாமநாதம் நாதம் பரப்பவும் இறைவனை வேண்டுகின்றேன்.

**சா. பபிசன்,செயலாளர், ஸ்ரீ அற்புதநர்த்தன நர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும், குமரன் விளையாட்டுக்கழகமும்.**

**என்றும் அன்புடன் வாழ்த்துபவர்கள்**
**ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும்**
**குமரன் விளையாட்டுக் கழகமும்**
**கோண்டாவில் கிழக்கு.**



பழைய மாணவர் சங்கப் பொரு ளாளரின் வாழ்த்து.

தோன்றில் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று

எனும்வள்ளுவப்பெருந்தகையின்வாக்குக்குஅமைய இப் பூவுலகில் பிறந்து புகழோடு வாழ்ந்து வரும் எமது வித்தியாலய அதிபர் அவர்களின் மணிவிழா சிறப் பிதழுக்கு வாழ்த்து தெரிவிப்பதில் அகமகிழ்வடை கின்றோம்.கடந்த 24 வருடங்களாக எமது வித்தியா லத்திற்காய் தன்னை அர்ப்பணித்தவர். வித்தியால யத்தின் தேவைகளை எமது சங்கத்தின் ஊடாக அணுகி இன்று பல சாதனைகளை நிலைநாட்டி தனது அறுபதாவது அகவையில் ஓய்வு பெறுகின்றார்.

எமது அதிபரின் சேவைக்காலம் பாடசாலை வரலாற்றின் பொற்காலம் எனலாம். எமது அதிபர் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ்ந்து எமது வித்தியாலயத்தின் வளர்ச்சியை கண்டு மகிழ்வுற வேண்டும் என ஸ்ரீஅற்புத நர்த்தன விநாயகனை வேண்டுகின்றேன்.

செ. செந்தூரன், பொருளாளர்,
பழைய மாணவர் சங்கம்,
யா/ கோண்டாவில் இராம கிருஷ்ண
மகா வித்தியாலயம்.



சனசமூக நிலையப் பொருளா ளரின் எண்ணம்.....

எமது வித்தியாலய அதிபர் கணித ச்சுடர் திரு. சண் வாமதேவன் அவர் களின் மணிவிழா நிகழ்வு இன்று சிறப்புற நடைபெறவுள்ளது. எமது வித்தியாலயத்தின் ஏணிப்படிகளில் தமது சாதனை வரலாற்றினை படைத்த அதிபர் தனது அறுபதாவது வயதில் சேவை யில் இருந்து அரச கட்டளைப்படி ஓய்வு பெறுகின் றார். அவரது ஓய்வுக்காலம் சீரும் சிறப்புடனும் மலர வாழ்த்துகின்றேன்.

**த. தபேசன், பொருளாளர், ஸ்ரீ அற்புதநர்த் தன விநாயகர் சனசமூக நிலையமும், குமரன் விளையாட்டுக்கழகமும்,**

**வர்த்தகர்களின் உள்ளத்திலிருந்து....**

எமது கிராமம் இன்று கல்வியில் வளர்ச்சி கண்டு ஒரு சிறந்த கல்வி யாளர்களை உருவாக்கும் ஒரு புண் ணியமாக மாற்றுவதற்கு உழைத்தவரே எங்கள் அதிபர் **கணிதச் சுடர்** திரு.சண் வாமதேவன் இன்று எம்மில் பல கல்வி மான்களையும் சமூக சேவை யாளர்களையும் உருவாக்கிய பெருமை இவரைச் சாரும். இவ்வாறான ஒரு அதிபரின் ஓய் வுக்காலம் சிறப்பாக அமைய இறைவனை வேண்டுகின்றோம்.

**வர்த்தகர்கள், கோண்டாவில் சந்தி.**

# இராசி பலன்

*19.01.2015*
*(தை 05, திங்கட்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.28 மணிக்கு*
*சதுர்த்தி முன்னிரவு 9.50 மணிவரை*
*பூராடம் பின்னிரவு 3.55 மணிவரை*
*இராகுகாலம் - 8.05- 9.35 மணிவரை*
*சுபநேரம் 12.35-2.05 மணிவரை*
*போதாயன அமாவாசை*

**வளவன்**

**மேடம்:** நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், செவிகு ளிரும் செய்திகள் வந்து சேர லாம், சொன்ன சொல்லைக் காப் பாற்றி மகிழ்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும்.

**இடபம்:** ஆரோக்கியம் சீராகி ஆனந்தம டைவீர்கள், சுணங்கிய காரியங் கள் சுறுசுறுப்பாக நடைபெறும், பிரியமான சிலரோடு ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும்.

**மிதுனம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, திடீர்ச் செலவுகள் ஏற்படலாம்.

**கடகம்:** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், வராத உறவி னர்கள் வீடு தேடி வரலாம், ஆதாயம் தரும் வேலையொ ன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிம்மம்:** போட்டிகளுக்கு மத்தியில் முன் னேற்றம் காண்பீர்கள், அரசியல் ஈடுபாடு கூடும் நாள், இல்லத் திலும் உள்ளத்திலும் அமைதி கூடும், கௌரவமான நாள்.

**கன்னி:** சுப செய்திகள் வந்து சேரலாம், மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும், உதிரி வருமானங்கள் பெருகும் நாள், அரசு வழியில் அனுகூல முண்டு.

**துலாம்:** வீட்டுக்குத் தேவையான பொருட் களை வாங்கி மகிழ்வீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், வருமானம் வரும் வழி யைக் கண்டு கொள்வீர்கள்.

**விருச்சிகம்:** வெற்றிச் செய்திகள் வந்து சேரலாம், உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பாராட்டும் புகழும் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு:** உஷ்ண சம்பந்தமான, ரோகங்கள் ஏற்படலாம், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மை யுண்டு, பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு.

**மகரம்:** நீண்ட நேரம் பணிபுரியும் சூழ் நிலை உருவாகும், கொடுக்கல்- வாங்கல்களில் ஏற்பட்ட மனஸ் தாபம் அகலும், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்:** சிறிய வேலையொன்றுக்காக பலமுறை அலைய நேரிடலாம், தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**மீனம்:** அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக அமையும், நட்பு வட்டம் விரிவடையும், ஊக்கத் தோடும் உற்சாகத்தோடும் பணிபுரி வீர்கள், வருமானம் உயர்வடை யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனவரி 23,24,25ஆம் திகதிகளில் யாழ்.சர்வதேச வர்த்தக கண்காட்சி

JITF 2015
6th Edition

யாழ்ப்பாணத்தில் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் சர்வதேச கண்காட்சி எதிர்வரும் ஜனவரி 23 – 25 வரையிலான காலப் பகுதியில் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற வுள்ளது.

தொடர்ச்சியான 6-வது தடவையாக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் முதலீட்டாளர்கள், வியாபார பிரமுகர்கள் மற்றும முக்கிய பிரமுகர்கள் ஆகியோர் சந் திக்கும் நிகழ்வாக இந்த கண்காட்சி அமைந்துள்ளதுடன், வெளி பிரதேசங்களிலிருந்து யாழ்ப்பாணத்தில் வியாபார நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு வியாபார பிரமுகர் களை கவர்ந்திழுக்கும் ஒரு கண் காட்சியாகவும் அமைந்துள்ளது. கடந்த ஆண்டு இடம்பெற்ற கண் காட்சியின்போது பெருமளவான பார்வையாளர்கள் கலந்து கொண் டிருந்ததுடன், காட்சிகூடங்களை சேர்ந்தவர்களுக்கு தாம் எதிர்பார்த் ததை விட பெருமளவானோர் பங்கு பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த பிரதேசம் தற்போது பாரிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட் டங்களை எதிர்நோக்கிய வண்ண முள்ளது.இம்முறை நடைபெறவுள்ள கண்காட்சியின்போது நிர்மாணத் துறை, விருந்தோம்பல் துறை, உணவு, பானம் மற்றும் பொதியிடல் துறை, வாகனத்துறை, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறை, நிதிச் சேவைகள் துறை, ஆடைத்துறை, விவசாயத்துறை, நுகர்வோர் பொருட்கள் துறை மற்றும் மேலும் பல துறைகளைச் சேர்ந்த நிறுவனங்கள் பங்கேற்க வுள்ளமை குறிப்பிடத்தக்கது. "இந் தளவு பிரம்மாண்டமாக யாழ்ப் பாண பிராந்தியத்தில் வேறெந்த கண்காட்சி நிகழ்வும் ஏற்பாடு செய் யப்படுவதில்லை. சகல வியாபாரங் களும், உள்நாட்டவர்களும் இந்த கண்காட்சி தொடர்பில் அதிகளவு ஆர்வம் செலுத்துகின்றனர். இந்த பிராந்தியத்தை சேர்ந்தவர்களுக் கும், நாட்டின் ஏனைய பிரதேசங் களை சேர்ந்தவர்களுக்கும் சிறந்த சந்திப்பு பகுதியாக இந்த கண்காட்சி அமைந்துள்ளது.

எனவே இந்த கண்காட்சிக்கு விஜயம் செய்யும் ஒவ்வொரு நபரும், அதிகளவு பயனை பெற்றுக் கொள்ள எதிர்பார்த்து வருகை தருகின்றனர்" என யாழ்ப்பாண வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவர் கே.விக்னேஷ் தெரிவித்தார்.

## வர்த்தக உலகம்

ஆர்.எஸ்.கே.முருகதாஸ்

## வங்கி ஊழியர் சங்கத்துடன் கொமர்ஷல் வங்கி உடன்படிக்கை

இலங்கையின் மிகப் பெரிய தனியார் வங்கியான கொமர்ஷல் வங்கி இலங்கையின் வங்கித் தொழிலாளர்கள் தொழில் சங்கத்துடன் 3 ஆண்டு களுக்கு உரித்தான 2 கூட்டு உடன்படிக்கைகளில் ஒப்பமிட்டுள்ளது.

தொழிற்சங்கத்தின் நிறைவேற்று தரம் அற்ற ஊழியர்கள் மற்றும் கனிஷ்ட நிறைவேற்று உதவியாளர்களை உள்ளடக்கியதாக இந்த உடன்படிக்கைகள் செய்யப்பட்டுள்ளன. வங்கியின் கனிஷ்ட நிறை வேற்று அதிகாரிகளை உள்ளடக்கிய புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன் றிலும் ஒப்பமிடப்பட்டுள்ளது. 2012-ல் செய்துகொள்ளப்பட்ட உடன்படிகசை 2014 டிசம்பர் 31ல் காலாவதியாகியுள்ளது.

அந்த உடன்படிக்கையின் பிரகாரமே புதிய உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டுள்ளன. 2015 ஜனவரி முதலாம் திகதி முதல் இவை அமு லுக்கு வருகின்றன. கூட்டு பேரம் பேசல் உரிமையை நிலைநிறுத்தும் வகையில கொமர்ஷல் வங்கி மேற்படி தொழிற்சங்கத்துடன் தொடர்ந்து இந்த உடன் படிக்கைகளைச் செய்துவருகின்றது. இதன் மூலம் இந்தத் தொழில்துறை யில் ஆற்றல் மிக்கதோர் பங்குடமையும் அபிவிருத்தி செய்யப்படுகின்றது.




## தேசிய விருதுகளை வென்ற ஒரேன்ஜ் நிறுவனம்

"தேசிய சிறந்த வர்த்தக விருது 2014" என்ற விருது வழங்கும் நிகழ் வில் ஒரெல் கோர்பரேஷனின்,ஒரேன்ஜ் இலெக்ரிக் நிறுவனம் அதிக மான தங்க விருதுகளை வென்றுள்ளது.

இந்த விருது வழங்கும் வைபவம் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் அண்மையில் இடம்பெற்றபோது ஒரேன்ஜ் இலெக்ரிக் நிறுவனத்திற்கு தேசிய சிறந்த வர்த்தக விருது உட்பட 5 தங்க விருதுகள் வழங்கப்பட்டன.

இந்த விருது வழங்கும் போது தலைமைத்துவம் மற்றும் நிறுவன ஆளுமை, திறன் வளர்த்தல், உள்ளூர் மற்றும் ஏற்றுமதி சந்தைக்கான வாய்ப்புஇ நிதி மற்றும் வர்த்தக பெறுபேறுகள்இ சமூக பொறுப்புணர்வு மற்றும் சூழல் பேண் தகைமை உட்பட முக்கியமான ஏழு விடயங்களை மதிப்பீடு செய்தே வழங்கப்பட்டுள்ளது.எனத் தெரிவித்தார்.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7,605.79 | 7,513.86 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 4,272.5 | 4,248.03 ⇩ |

**விலை அசைவுகளின் அடிப்படையில்** புரள்வு (ரூபா.மில்.) 4,883.944

***உயர்வடைந்த பங்குகள்(ரூ.):*** சிங்கபுத்ர பினான்.(220.00), சாம்சன் இன்ரனட் (115.00), கெஸ்னர்(169.70), சலிமர்(1960.00), செவரோன்(456.50).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** சிரஸ் லிசர்(W)(1.20), சிலோன் லெதர் (W)(2.50), பிறின்ட் கெயார் பிஎல்சி(36.80), ரெஸ் அக்ரோ(X)(1.30), [illegible] றிசோட்(17.10).

**மேலதிக தகவல்கள்: www.[illegible]**

## ஊழியர் பணி நீக்கம் கோகோ கோலா திட்டம்

சர்வதேச அளவில் குளிர்பா னங்கள் வர்த்தகத்தில் முன்ன ணியில் உள்ள கோகோகோலா நிறுவனம், 3 கோடி அமெரிக்க டொலர்களை மிச்சம் செய்வதற் காக உலக அளவில் தனது நிறுவ னங்களில் பணிபுரியும் ஆயிரத்து 800 ஊழியர்களை பணியிலிருந்து நீக்க முடிவு செய்துள்ளது.

இதுதொடர்பாக அந்நிறுவனம் இ-மெயிலின் மூலம் அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதா வது,

சர்வதேச அளவில், கோகோ கோலா விற்பனையில் சற்று பின் னடைவு ஏற்பட்டுள்ளது. மேலும் கோகோ கோலா தயாரிப்பு விலை யும் அதிகரித்துள்ளதன் காரணத்தி னால், நிறுவனத்திற்கு சமீபகால மாக, தொடர்ந்து இழப்பு ஏற்பட்டு வருகிறது.

அந்த அறிக்கையில், நிறுவன தலைமை உயர் அதிகாரி முஹ் தார் கென்ட் குறிப்பிட்டுள்ளதாவது, நிறுவனம் 3 கோடி அமெரிக்க டொ லர்கள் இழப்பை ஈடுகட்ட பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட உள்ளது. அதன் ஒருபகுதியே 1,600 முதல் 1,800 ஊழியர்களை பணிநீக்கம் செய்ய இருப்பது ஆகும்.

இது சர்வதேச அளவில், தங் கள் நிறுவனத்தில் பணியாற்றும் மொத்த ஊழியர்களில் 1 சதவீத அளவே ஆகும். இந்த 1800 ஊழி யர்களின் பணிநீக்கத்தினால், நிறு வனத்தின் பணிகள் சிறிதளவும் பாதிக்கப்படாது என்று கென்ட் அதில் குறிப்பிட்டுள்ளார்.

டிசம்பர் 31, 2013-ம் திகதிப்படி, கோகோ கோலா நிறுவனத்திற்கு, சர்வதேச அளவில் 1,30,600 பேர், ஊழியர்களாக பணியாற்றி வரு கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது



## செலிங்கோ லைஃபால் வகுப்பறை கட்டிடம் அன்பளிப்பு



இலங்கை முழுவதும் உள்ள பின் தங்கிய கிராமங்களிலும் நக ரங்களிலும் கல்விக்கு ஆதரவு வழ ங்கும் தமது சமூக நலத் திட்டத்தின் ஒரு அங்கமாக செலிங்கோ லைஃப் அண்மையில் நிவரவெட்டியவில் உள்ள அஸெனிவத்தை கனிஷ்ட வித்தியாலயத்தில் வகுப்பறைக் கட்டிடம் ஒன்றை நிர்மாணித்து அன்பளிப்புச் செய்துள்ளது. இது இந்தத் திட்டத்தின் கீழ் செலிங்கோ உதவியளித்துள்ள 60-வது பாடசா லையாகும்.

"நாடு தழுவிய எமது வலையமைப்பு, உதவிகள் அதிகம் தேவைப்படும் பாடசாலைகளை இனம் கண்டு அவற்றுக்குத் தேவையான வற்றை செய்து கொடுக்க உதவியாக உள்ளது என்று கூறினார் செலி ங்கோ லைஃப்பின் முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஆர்.ரெங்கநாதன்.

## 2017-ல் பொருளாதார வளர்ச்சி இந்தியா சீனாவை முந்தும்

இந்தியாவில் நிகழ்ந்துவரும் பொருளாதார கொள்கைகளின் மாற்றங்களின் காரணத்தால் சுமார் 7% வளர்ச்சியுடன் 2017-ம் ஆண்டில் உலகத்தின் வேகமாக வளர்ந்துவரும் மிகப்பெரிய பொரு ளாதாரமாக இந்தியாவின் பொரு ளாதாரம் திகழும் எனவும் பொரு ளாதார வளர்ச்சியில் இந்தியா சீனாவை முந்த வாய்ப்புள்ளதாக வும் உலக வங்கியின் அறிக்கை தெரிவித்துள்ளது. வாஷிங்டனில் இயங்கிவரும் உலக வங்கியின் குளோபல் எகனாமிக் ப்ராஸ்பெக் ட்ஸ் அறிக்கையின்படி இந்தியா வின் மொத்த உள்நாட்டு உற்பத்தி கடந்த வருடம் 5.6% வளர்ச்சி பெற் றுள்ளது. அது வரும் ஆண்டில் 6.4%ஆக வளரும் என எதிர்பார்க் கப்படுகிறது. இது வளர்ச்சி அடைந்து 2017-ல் 7% வளர்ச்சியை எட்டும். அப்போது சீனாவின் ஒட்டுமொத்த வளர்ச்சி 6.9 சதவிகிதமாக குறைய வாய்ப்புள்ளதாகவும் இந்த அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாங்கொங்கிலுள்ள ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக கமிசன் தனது அறிக்கை யில் இந்திய பொருளாதார வளர்ச்சி இந்த வருடம் 6.4 சத வீதமாக இருக்கும் என தெரிவித்துள்ளது. ஆனால் சர்வதேச முதலீட்டு வங் கியான கோல்டு மேன் சாக்ஸ், இந்தியா தனது வளர்ச்சியை உலக வங்கியின் கணிப்பை விட முன்னதாகவே அடையும் என தெரிவித்துள்ளது.

உலக சந்தையில் கச்சா எண் ணெயின் விலை தொடர்ந்து சரிவை கண்டு வருவதும், வளர்ந்த நாடு களில் வட்டியின் விகிதம் குறை ந்து இருப்பதும் இந்தியாவின் வளர்ச்சிக்கு ஒரு முக்கிய காரணம். உலக வங்கியின் தலைமை பொருளாதார அதிகாரி கவ்சிக் பாசு கூறுகையில், "தொடர்ந்து உலக சந்தையில் கச்சா எண்ணெ யின் விலை குறைந்து வருகிறது, எனவே இந்த நிலை காரணமாக பணவீக்கம் குறைந்த நிலையில் உள்ளது, அதனால் வளர்ந்த நாடு கள் தங்களது வட்டி விகிதத்தை உடனடியாக உயர்த்த மாட்டார்கள். எண்ணெய் இறக்குமதி செய்யும் நாடுகளாகிய இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுகளுக்கு இது ஒரு சாதகமான போக்கு, எனவே இந்தியாவின் பொருளாதார வளர் ச்சி 2016 இறுதியிலேயே 7% எட் டும் என எதிர்பார்க்கிறேன். மேலும் அவர் கூறுகையில் "இந்த தரு ணத்தை பயன்படுத்தி பொருளா தாரம் மற்றும் கட்டமைப்பு வசதியை மேம்படுத்திக் கொண்டால்,தொலை நோக்கு வளர்ச்சிக்கு அது உறுது ணையாய் அமையும்" என்றார்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)


| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 130.78 | 133.60 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 197.94 | 203.60 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 151.23 | 156.22 |
| சுவிஸ் பிராங் | 151.43 | 157.00 |
| கனேடிய டொலர் | 108.65 | 112.27 |
| அவுஸ்திரேலிய டொலர் | 106.71 | 110.93 |
| சிங்கப்பூர் டொலர் | 98.31 | 101.50 |
| ஜப்பான் யென் | 1.12 | 1.15 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.11 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.68 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்து

## திரு. சண் வாமதேவன்



யாழ்/கோண்டாவில் இராமகிருஸ்ண மகாவித்தியாலயத்தில்
23 ஆண்டுகள் பிரதி அதிபராய்,
அதிபராய் அளப்பரிய சேவையாற்றி 19.01.2015 அன்று
மணிவிழாக் காணும் "கணிதச்சுடர்"
சண் வாமதேவன் அவர்களின் கல்விச் சேவையினை
வாழ்த்துவதில் அக மகிழ்கின்றோம்.

கற்றோர்க்கும் மற்றோர்க்கும் கல்வி பயில் மாணவர்கட்கும்
காவிய நாயகனாய் சாதனை மன்னனாய்!
கல்லூரியின் பல்தர வளர்ச்சியின் தலைவனானீர்!

கரையிலா செல்வமைந்தர் வாழ் வேலணை தந்த
"கணிதச்சுடர்" சண்வாமதேவன் புகழ்
கல்லூரி இராமகிருஸ்ணா உள்ளவரை
கண்போல் காக்கும் நும் கல்விப்பணி வரலாறு...

**வாழ்த்துவோர்:-** திரு.சி.மாணிக்கராசா-பிரதிக் கல்விப் பணிப்பாளர் -யா/கல்வி வலயம், திரு.பொ.அருணகிரிநாதன்-பிரதிக்கல்விப் பணிப்பாளர் -யா/கல்வி வலயம், திரு.கு.திலீபன்- அதிபர் (உயரப்புலம் மெ.மி.வித்தியாலயம்,திரு.க.தவகீஸ்வரன்-அதிபர் -கோண்டாவில் இந்துக்கல்லூரி, திரு.வே.ஞானகாந்தன்-அதிபர்- கொக்குவில் இந்துக் கல்லூரி, திரு.பே.தனபாலசிங்கம்-அதிபர் -கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலை, திரு.T.சிவநாதன்-அதிபர் -கொக்குவில் நாமகள் வித்தியாலயம், திரு.N.மகேந்திரராஜா-அதிபர் -யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலை, திரு.தி.சத்தியபாலன்- அதிபர் வைத்தீஸ்வராக்கல்லூரி, திரு.மு.மகேந்திரன் -முன்னாள் அதிபர் வைத்தீஸ்வராக் கல்லூரி, திரு.இ.செந்தில்குமரன்-முன்னாள் அதிபர் கோண்டாவில் RC வித்தியாலயம், திரு.M.கஜேந்திரன் -நல்லூர் மங்கயற்கரசி வித்தியாலயம், திரு.செ.இராமநாதன்- அதிபர் -கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம், செல்வி.S.மாணிக்கம்-அதிபர் -செட்டித்தெரு மெ.மி.வித்தியாலயம், திருமதி வி.கடம்பமலர்-அதிபர் -கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம், செல்வி.K.கமலநாயகி-அதிபர் -கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம், திருமதி.P.சண்முகராசா-அதிபர் -வண்ணை வைத்திலிங்கம் வித்தியாலயம், திரு.K.ரவீந்திரராசா-அதிபர் -கலட்டி மெ.மி.வித்தியாலயம், திருமதி.M.தயாளநேசன்-அதிபர்- கொக்குவில் மேற்கு ஸ்ததானா CC வித்தியாலயம், திருமதி.Y.திரவியநாதன்- அதிபர் கொக்குவில்ஸ்ரேசன் CC வித்தியாலயம்.

# மனமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

## திருமதி விஜயகலா மகேஸ்வரன்

(மகளிர் விவகார பிரதியமைச்சர்)



நாட்டின் அசாதாரண நிலை
காரணமாக 1995 இல் பூரணமாக
இடம் பெயர்ந்திருந்த எம் மக்களை
2003இல் கிராமத்தில்
மீளக்குடியமர்த்தி பல உதவிகளையும்
வழங்கிய அமரர்
**தியாகராஜா மகேஸ்வரன்**
(முன்னாள் இந்து கலாசார அமைச்சர்)
அவர்களின் பாசமிகு பாரியார்
**திருமதி**
**விஜயகலா மகேஸ்வரன்**
அவர்கள் (பாராளுமன்ற உறுப்பினர்
யாழ்.மாவட்டம்) மகளிர் விவகார பிரதி
அமைச்சராக தெரிவு செய்யப்
பெற்றமையையிட்டு மனமகிழ்ந்து
பாராட்டி வாழ்த்துவதுடன்
அவர் பல்லாண்டு வாழ்ந்து சிறப்பாகப்
பணிபுரிய எல்லாம் வல்ல
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

(சு-917)

**தோப்புக்காடு கிராம அபிவிருத்திச் சங்கம்,**
**தோப்புக்காடு, காரைநகர்.**

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 66 1/2 செவ் 1இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BA/ அரச தொழில்<br>தொ.இ: B/149 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 49<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA/ AIB/ உதவிமுகாமையாளர்<br>தொ.இ: G/212 |
| பிறப்பு: 1977 RC<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 30<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில<br>தொ.இ: B/158 | பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 82 1/2 செவ் 7இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L, HNDE<br>தொ.இ: G/217 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 67 செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L/ செந்த தொழில்<br>தொ.இ: B/159 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 19<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: சித்த மருத்துவர்<br>தொ.இ: G/218 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 15<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: பட்டதாரி (லண்டன் NOT PR)<br>தொ.இ: B/166 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 26 1/2 செவ் 8இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: கணக்காளர் (அவுஸ்ரேலியா)<br>தொ.இ: G/221 |


**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com



வாழ்க்கையில் **வெறுப்பா?**
பிரச்சினை எதுவானாலும்,
எம்முடன் தொலைபேசியில்
அல்லது நேரில் பேசுங்கள்.
இரகசியங்களைப் பேணுவோம்.
காலை 9.00 – பி.ப 1.00
மதச்சார்பற்றது
(சு-9787)
**கைகொடுக்கும் நண்பர்கள்**
104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
021 222 8117, 0779008776



**சித்திர வகுப்பு**
தரம் 02 தொடக்கம் IAT
நடைபெறுகின்றது.
ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம்
தொலைபேசி:-
077 176 0238
(சு-9165)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ரெலிக்கொம் வயர் அறுத்துக்கொண்டு

# ஓட்டம் பிடித்த இளைஞனை துரத்திப் பிடித்த பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

ரெலிக்கொம் நிறுவனத்திற்குச் சொந்தமான தொலைத் தொடர்பு வயர்களை அறுத்துக் கொண்டிருந்தபோது பொலிஸார் வருவதைக் கண்டு ஓட்டம் பிடித்த நபர் பொலிஸாரினால் துரத்திப் பிடிக்கப்பட்டார்.


இச்சம்பவம் நெல்லியடிப்பகுதியில் இடம் பெற்றுள்ளது.

கடந்த 16 ஆம் திகதி இரவு 9 மணியளவில் சில இளைஞர்கள் ஒன்று கூடி தொலைத்தொடர்பு வயர்களை அறுத்த பொழுது ரெலிக் கொம் நிறுவனத்தின் எச்சரிக்கை அலாரம் செயற்படத் தொடங்கியது. இதனையடுத்து தகவல் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸாரைக் கண்டு இளைஞர்கள் ஓட்டம் பிடித்தனர்.

எனினும் பொலிஸார் பெரும் சிரமத்தின் மத்தியில் தப்பியோடிய இளைஞர்களில் ஒருவரை மடக்கிப் பிடித்தனர்.

அத்துடன் ஒரு தொகை வயர்களும் அங்கிருந்து மீட்கப்பட்டது. ஏனைய நபர்களைப் பொலிஸார் தேடி வருகின்றனர். (இ-60)




# குழாய் மூலமான நிரந்தர நீர்விநியோகம் வேண்டும்

## சுன்னாகப்பகுதி மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**கழிவு எண்ணெய்க்கசிவினால் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து வீடுகளுக்கும் குழாய் மூலம் நிரந்தர நீர் விநியோகத்தினை ஏற்படுத்தித் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

குடிநீர் உட்பட அனைத்து தேவைகளுக்குமாகவே இந் தூய நீர் விநியோகத்தினை அவர்கள் கோரிக்கையுள்ளனர்.

சுன்னாகத்திலுள்ள நொதோன் பவர் அனல் மின்னுற்பத்தி நிறுவனத்தின் கழிவொயில் நிலத்தின் கீழ் வடிந்து நீரோடு கலந்துள்ளது.

இதனால் சுன்னாகத்திலிருந்து




பல கிலோ மீற்றர்களுக்கு கழிவெண்ணெய்த் தாக்கம் பரவியுள்ளது.

கழிவெண்ணெய் கலந்துள்ள நீரிணை பயன்படுத்துவதனால் திடீர் நோய்கள் உட்பட பல பாதிப்புக்கள் ஏற்படுகின்றது.

குடி நீராக பயன்படுத்துவதனால் ஏற்படும் நோய்த் தாக்கத்தோடு இந்நீரில் நீராடுவதனாலும் தலையிடி, ஒவ்வாமை போன்ற நோய்களும் ஏற்படுகின்றன.

இந்நிலையில் தற்போது பிரதேச சபைகளினால் குடிநீருக்கான நீர்வசதி மட்டுமே ஒழுங்கு செய்ததரப்பட்டுள்ளது.

எனவே அனைத்து நீர்த் தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் நிரந்தமான குழாய் மூலம் நீர் விநியோகம் ஏற்படுத்தி தரப்பட வேண்டும்.

கழிவெண்ணெய்ப் பாதிப்பிலிருந்து விடுபட பல வருடங்கள் தேவைப்படும் என கருதப்படுவதனால் அதுவரைக்கும் இந்நீர் வசதி ஏற்படுத்தித் தரப்பட வேண்டும் என அம்மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் நீர்ப்பரிசோதனை தொடர்பாக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெளிவுபடுத்த வேண்டும் எனவும் அம்மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-4)

# மக்களின் வாழ்வு செழிக்கக்கட்டும்

## இந்தியத் துணைத் தூதுவர் தெரிவிப்பு

பசுமை நிறைந்த யாழ்ப்பாண மண்ணைப்போல மக்கள் வாழ்வும் எப்போதும் பசுமையாக இருக்கவேண்டும் என யாழ். இந்தியத் துணைத்தூதரகத்தின் புதிய துணைத் தூதுவர் ஏ.நடராஜன், நேற்று முன்தினம் தெரிவித்தார். யாழ்ப்பாண றோட்டறி கழகத்தின் ஏற்பாட்டில் கலாசார பொங்கல் விழா முற்றவெளியில் நடைபெற்றது. அந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில,

இன்றைய இந்த அற்புதமான நிகழ்வினை ஒழுங்குபடுத்தியமைக்கு முதலில் நான் நன்றிகளை தெரிவித்து கொள்ளுகிறேன்.

நான் இதை எதிர்பார்க்கவில்லை. கிராமத்திற்கு போனது போன்ற உணர்வு தோன்றுகின்றது. யாழ்ப்பாணம் என்ற பொன்னான மண்ணில் நான் காலடிகள் எடுத்து வைத்து 10 நாட்களே ஆகிறன. இந்த 10 நாட்களும் நான் யாழ். நகர்ப்பகுதியை விட்டு சற்று வெளியே சென்று பார்வையிட்டேன். மிகவும் அழகிய பசுமையான பூமி இது. பாப்பரசரின் வருகைக்காக மன்னார் சென் றேன். அப்போது வழிகளில் அழகிய காட்சிகள் பசுமையான நெல் வயல்கள் மகிழ்ச்சியை தந்தன. இந்த பசுமையை போல தமிழ் மக்களின் வாழ்வும் எப்போதும் பசுமையாக இருக்க வேண்டும் என நான் வாழ்த்துகிறேன். தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். அது போல உங்களுக்கு நல்ல வழி கிடைக்கட்டும். தமிழ் மக்கள் அனைவருக்கும் நான் இந்த சந்தர்ப்பத்தில் வணக்கத்தையும் வாழ்த்துகளையும் தெரிவிக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-23)

# கால்கோள் விழா

(யாழ்ப்பாணம்)

புலோலி புற்றளை மகாவித்தியாலய கால்கோள் விழா இன்று காலை 8.30 மணிக்கு பாடசாலை அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (இ

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

யாழ்ப்பாணம் உடுவில் மான்ஸ் த.க. பாடசாலையின் தரம் ஒன்று மாணவர்களுக்கான கால்கோள் விழா அதிபர் இரா.ஜெயக்குமார் தலைமையில் இன்று மு.ப 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் செல்வி. எஸ். சிவலோஜினி பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளனர். (இ

# வாள்வெட்டுடன் தொடர்புடைய 4பேர் அடையாளம் காணப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் நீதிமன்றத்திற்கு முன்னால் அண்மையில் நடைபெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தின் சூத்திரதாரிகள் நால்வர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.பி.விமலசேன நேற்றுத் தெரிவித்துள்ளார்.

மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தின் முன்பாக அண்மையில் இனந் தெரியாத நபர்கள் மேற்கொண்ட வாள்வீச்சில் இளைஞனொருவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்தார்.

வாள் வீச்சுத் தாக்குதல் மேற்கொண்டவர், முன்னரும் குற்றச் செயல் ஒன்றிற்காக தேடப்படும் சந்தேக நபராக உள்ளார்.

இந் நபரும் ஆவா குழுவைச் சேர்ந்த இளைஞர்களுமே இவ்வாறு வாள் வெட்டில் ஈடுபட்டதாக யாழ். பொலிஸாரிற்கு தகவல் கிடைத்துள்ளது.

இது தொடர்பில் அத்தியட்சகரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நீதிமன்றிற்கு முன்னால் இடம் பெற்ற வாள் வெட்டுச் சம்பவம் குறித்து ஆரம்பத்தில் தகவல் எதுவும் கிடைக்கவில்லை எனினும் தற்போது சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என சந்திக்கப்படும் நால்வர் இனங் காணப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் காங்கேசன் துறை பொலிஸ் பிரிவிற்கு தகவல் அளிக்கப்பட்டு அவர்களோடு இணைந்து நடவடிக்கையெடுக்கப்படும் என்றார்.

இதே வேளை யாழில் அண்மைக்காலப்பகுதியில் வாள் வெட்டுச் சம்பவங்கள் திடீரென மீண்டும் தலை தூக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

# உதவி கோரல்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சஞ்சய் என்ற சிறுவனுக்கு இருதய சத்திர சிகிச்சையின் பின் மேலதிக சிகிச்சைக்காக இந்தியா செல்வதற்கு பண உதவி தேவைப்படுகிறது. உடனடியாக இப்பணத்தைத் திரட்டுவதற்கு இவரது குடும்பத்தினரால் முடியாதுள்ளதால் பணவசதி உள்ளவர்களிடமிருந்தும் மற்றும் கருணை நிறைந்த நல்ல உள்ளங்களிடமிருந்து உதவிகள் எதிர்பார்க்கப்படுகிறது. தமது பணவுதவி மூலம் இந்த சிறுவனின் சிகிச்சைக்கு உதவ முன்வருவோர் பின்வரும் வங்கிக் கணக்கிற்கு தமது பணத் தினை செலுத்த முடியும்.

ஆர்.சர்மிலா -(R.Sharmila) இலங்கை வங்கி கணக்கு இலக்கம்:- 76887520) (இ




யாழ்.வடமராட்சி கிழக்கில் 2013 ஏற்பட்ட கடற்கொந்தழிப்புக் காரணமாகப் பாதிக்கப்பட்ட படகு இயந்திர உரிமையாளர்கள் 13 பேருக்கான சூழற்சி முறையிலான கொடுப்பனவுகள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்ட போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து சித்தர்கள் வரிசையில் நயினை சித்தர் முத்துக்குமார சுவாமிகள்

இந்து மதத்தின் தொன்மைக்கும் மகிமைக்கும் மகத்துவத்திற்கும் அருள் வெளிப்பாட்டிற்கும் காலத்திற்குக் காலம் தோன்றிய ஞானிகள், மகான்கள், யோகிகள், நாயன்மார்கள், ஆள்வார்கள், சித் தர்கள் என எண்ணில் அடங்காத அவதார புருஷர்களின் அவதா ரமே மக்களை மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழி வகுத்து நிற் கின்றது.

ஆதியும் அந்தமும் இல்லாத சிவனை சித்தத்தில் நிறுத்தி மக்களுக்கு அருள் வழிகாட்டி மனித வடிவில் நடமாடிய சித்தர்கள், ரிஷிகள், யோகிகள் என்ற வரிசைக்குள் அடக்கலாம்.

ஆதியில் பதினெண்மர் சித்தர்களாகப் போற்றப்பட்டுள்ளனர். "நந்தி அகத்தியர் மூலர் புண்ணாக்கீசர் நற்றவத்து புலத்தியரும் பூனைக்கண்ணர் நந்தி இடைக்காடரும் போகர் புலிக்கையீசர் கருவூரர் கொங்கணவர் காளாங்கி சிந்தி எழுகண்ணர் அகப்பேயர் பாம்பாட்டி தேரையாம் குதம்பையரும் சட்டைநாதர் செந்தமிழ் சேர் சித்தர் பதினெண்மர் பாதம் சிந்தையுண்ணிச் சிரத்தணியாய் சேர்த்து" இப்பாடல் ஆதி சித்தர் வரலாற்றிற்கு ஆதாரமாய் அமைகின்றது. சித்தர்கள் தாங்கள் மேற்கொண்ட கடும் தவத்தின் பெறுபேற்றால் பெற்ற ஆன்மீக உணர்வை மானுட ஜென்ம ஈடேற்றத்திற்காக வழங்கினார்கள்.

ஓம் நமசிவாய என்ற சிவத்துள் அடங்கி மனித உருவில் நடமாடிய சித்தர் பரம்பரை வழி வழி அடியோம் என்றவாறு குருவே சிவமெனக் கூறினர். நந்தி என்றவாறு ஈழத்திலும் சித்தர் அவதாரம் வழி வழி வந்திருக்கின்றது.

ஈழத்து சித்தர் வழிசையில் வந்துதித்தவர் தான் நயினைச் சித்தர் முத்துக்குமார சுவாமிகள். ஒவ்வொரு ஆண்டின் தைமாச போதாயன அமவாசையில் சுவாமிகளின் குரு பூசை ஆண்டுதோறும் ஆண்டின் முதல் குருபூசையாக வருவது தனிச் சிறப்பாகும்.

ஈழத்து சித்தர்கள் வரிசையில் வைத்து மதிக்கப்படுபவரும் நயினாதீவு சுவாமிகள் என அழைக்கப்படுபவருமான நயினை ஸ்ரீமத் முத்துக்குமார சுவாமிகள் ஆறுமுகம் பார்வதி தம்பதியினருக்கு ஆறாவது மகனாக 1896 ஆம் ஆண்டில் அவதரித்தார்.

இவரது இயற்பெயர் தம்பிமுத்து என்பதாகும். இவர் சிறுவயதில் நயினாதீவு தில்லையம்பல வித்தியாசாலையில் கல்வி பயின்றார்.

இளவயதில் இருந்தே இவரிடம் ஆன்மீக நாட்டமும் கவிபாடும் திறனும் இருந்தது.

கல்வியில் நாட்டம் குறைந்து ஆன்மீகத் தாகம் மிக்கவராய் மாறி வந்த இவரை தமையனார் பொறளை முருகேசு பொறளை என்னும் இடத்தில் உள்ள தனது சுருட்டுக்கடையில் தனக்கு உதவியாளராக வைத்திருந்தார்.

இக்காலத்தில் இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்த ஒரு பெரியாரை இவர் சந்திக்க நேரிட்டது. அப்பெரியார் முத்துக்குமாரு இருந்த இடத்தில் சில நாட்கள் தங்கியிருந்தார்.

தன்னை ஆளவந்த சற்குரு தான் இவர் என்பதை அவர் அப்போது அறிந்திருக்கவில்லை. இவர்கள் இருவருக்கும் இறுக்கமான தொரு ஆன்மீகத்தொடர்பு ஏற்படலாயிற்று.

அந்தப் பெரியாரும் முத்துக்குமாருவும் ஒரு நாள் கதிர்காமத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

அங்கு கதிரமலைக்கு செல்லும் வழியில் இரவு ஒரு மரத்தடியில் இருவரும் தங்க நேரிட்டது. அந்த நிசப்தமான இடத்தில் நிசப்தமான வேளையில் முத்துக்குமாருக்கு தீட்சையும் உபதேசமும் கொடுக்கப்பட்டது. சற்குருவாக வந்து தன்னை ஆட்கொண்ட குருநாதனை போற்றி வழிபட்டு நின்றார் குருவும் சீடரும். மறுநாள் கதிர்காமம் சென்று வழிபட்டு கொழும்பு திரும்பினர்.

முத்துக்குமாருவை ஆட்கொள்ள வந்த ஞானகுரு வந்த வேலை முடிந்தது என்ற நிலையில் ஒருநாள் காலை வெளியில் சென்று மீளவில்லை. முத்துக்குமாரரோ நம்மையாட்கொண்ட குருவை எங்கே தேடியும் காணாமற் பித்தர் போல் ஆனார்.

சித்தத்தை சிவன்பால் வைத்த முத்துக்குமாரர் கடை வேலைகளில் நாட்டம் காட்டாமல் இருப்பதைக் கண்ட தமையனார் கண்டிக்கத் தொடங்கினார். ஒருநாள் கிறுக்கல் கவிதையொன்றை எழுதி வைத்துவிட்டு யாருக்குமே கூறாமல் கடையை விட்டுச் சென்று விட்டார்.

இவர் ஞானகுருவை தேடி இந்தியா சென்றார். அவரை கண்டு அவர் நிழலில் தங்கி பக்குவ நிலையை எய்தினார். திருவண்ணாமலையில் சித்தர்களும் தவயோகிகளும் வாழும் அருணாசலக் குகைகளில் சில வருடங்கள் சமாதி நிட்டையில் அமர்ந்திருந்தார். பின்னர் சுவாமிகள் ரமண மகரிஷியுடன் சிலகாலம் தங்கியிருந்து அவரின் ஆன்மீக போதனைகளால் கவரப்பட்டு தவயோக வாழ்வு வாழ்ந்தார்.

பின்னர் இலங்கை திரும்பி கொழும்பிலும் மற்றும் உள்ள திருத்தலங்களை தரிசனம் செய்து சுற்றி வந்தார். நீண்ட நாட்களின் பின்னர் 1933 ஆம் ஆண்டு சுவாமிகள் நயினாதீவிற்கு வந்து அம்பிகையின் வருடாந்த மஹோற்சவத்தில் கலந்து கொண்டார். அம்பாள் ஆலய வீதியில் வேப்பமர நிழலில் அமர்ந்திருந்து அருளாசி வழங்கினார்.

சுவாமிகளின் அருள் அலையில் பல அடியவர்கள் அள்ளுண்டனர். சுவாமிகளின் முதன்மை சீடர்களாக அமரர்கள் ச.நா. கந்தையா, அதிபர் ஈழத்து இல்லற ஞானி க.இராமச்சந்திரா, ஆத்ம ஜோதி நா. முத்தையா, கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் அதிபராக இருந்த சண்முகரெத்தினம் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள்.

சண்முகரெத்தினம் அவர்களைக் கொண்டுதான் கங்காதரணி புனித தீர்த்தக்கேணியை தோண்டி வித்தார்கள்.

யாழ்ப்பாணம் சிவலிங்கப்புளியடியில் தன் அடியார் அமரர் சிவசுப்பிரமணியம் அவர்களின் இல்லத்தில் தங்கி இருந்த சுவாமிகள் 1949 ஆம் ஆண்டு தைத் திங்கள் சமாதி அடைந்தார்.

நயினாதீவில் நடுவகாட்டில் சமாதி வைக்கப்பட்டு சோமஸ்கந்த ஈஸ்வர ஆலயமாகத் திகழ்கின்றது.

சித்தர்கள் நடமாடிய இடங்கள் புனிதத்தன்மை வாய்ந்தவை. சித்தர்களுடைய தெய்வீகமான சிந்தனைகள் அவர்கள் இருந்த இடங்களில் எக்காலத்திலும் தெய்வீக அலைகளாக நிலவி பக்தர்களை ஈர்ந்து இழக்கும் சக்தியுடையன. பழனி மலையில் போகர் சித்தரின் சமாதி அமைந்திருக்கின்றது.

வண்ணார் பண்ணையில் கடையிற் சுவாமிகள் சமாதியும் நல்லூரில் செல்லப்பா சுவாமிகளின் சமாதியும் ஏழாலையில் சடவரத சுவாமிகளின் சமாதியும் நயினை நடுவகாட்டில் நயினைச் சித்தர் சமாதியும் சித்தர்களின் மகிமைக்கு சான்றாக உள்ளன.

தெங்குமலி நயினை நகர் நடுவ காட்டில் சேர்ந்திலங்கு சமாதியுறை தெய்வச்சோதி- ஓம் நமசிவாய.

**நயினை- நாகமணி- கோபாலகிருஷணன்.**

## பணத்தை தனது வங்கிக் கணக்கில் பதுக்கிய முன்னாள் பாதுகாப்பு செயலர்

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக பதவி வகித்த கோத்தபாய ராஜபக்ஷ பல்வேறு திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட பெருந்தொகை பணத்தை தனது கணக்குகளில் வைப்புச் செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனை தவிர வீடமைப்பு, காணி, ரக்னா லங்கா தனியார் பாதுகாப்பு சேவை போன்ற திட்டங்களுக்கு பொது மக்களின் பணத்தை செலவிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

ஜே.வி.பி இந்த நிதி மோசடிகள் தொடர்பாக இலஞ்சம் மற்றும் ஊழல் மோசடி விசாரணை ஆணைக குழுவில் முறைப்பாடு செய்திருந்தாலும் அதனை விடவும் பெரும் தொகை சொத்துக்கள் மற்றும் நிதி மோசடிகள் பற்றிய தகவல்கள் வெளியாகிய வண்ணம் உள்ளன.

கோத்தபாய ராஜபக்ஷ 2005 ஆம் ஆண்டு முதல் கடந்த 9 ஆண்டுகளாக இந்த மோசடியுடன் சம்பந்தப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்புச் செயலாளர் என்ற பதவியை பயன்படுத்தி கொள்ளை பாணியில் காணிகள் மற்றும் வீடுகளை பெற்றுக்கொண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (இ-5)

## முன்னாள் பிரதமரின் மகனுக்கு நாட்டைவிட்டு வெளியேறத்தடை

முன்னாள் பிரதமர் தி.மு. ஜயரத்னவின் மகனான அனுராத லங்கா ஜயரத்ன, நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. கம்பளை நீதவான் உபுல் ராஜகருணாவே, இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது கம்பளை நகரத்தில் அமைக்கப்பட்டிருந்த பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் காரியாலயத்தின் மீது தாக்குதல்களை மேற்கொண்டமை, அந்த காரியாலயத்தின் மீது சட்டவிரோதமான முறையில் உள்நுழைத்தமை, துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டமை மற்றும் அச்சுறுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுகள் அவர் மீது சுமத்தப்பட்டிருந்தது. இந்த குற்றச்சாட்டுகள் தொடர் பில் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவர் நீதிமன்றில் ஆஜராகவில்லை.

இதனையடுத்தே, முன்னாள் பிரதமர் தி.மு.ஜயரட்னவின் மகனும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான அனுராத லங்கா ஜயரத்ன, கம்பளை நகர சபையின் உறுப்பினர்கள் இருவர் மற்றும் உடபலாத்த பிரதேச சபையின் உறுப்பினர் உட்பட அதி பிரமுகர்களின் பாதுகாப்பு அதிகாரி ஆகியோருக்கே இந்த தடை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவங்களுடன் தொடர்புடையதாக கூறப்படும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் கம்பளை நகர சபை உறுப்பினர் தர்ஷிக நயன தரங்க விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் ஏனைய சந்தேக நபர்கள் மற்றும் வாகனங்களை தேடி பொலிஸார் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். (இ-5)

## ஈராக்கில் 350 பேரை விடுவித்த ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள்

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் ஈராக்கின் வடக்கு பகுதியான மொசூல், ஹவிஜா மற்றும் திர்குக் உள்ளிட்ட நகரங்களை கைப்பற்றினர். மொசூல், சிஞ்சர் மலை பகுதிகளில் ஆயிரக்கணக்கான யாஷிடிஸ் பழங்குடியின மக்களை சிறைப்பிடித்தனர். அவர்களில் பெண்களும், குழந்தைகளும் அடங்குவர்.

இந்த நிலையில் 'யாஷிடி' பழங்குடியினத்தை சேர்ந்த 350 பேரை அண்மையில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் விடுதலை செய்தனர். அவர்களில் பலரது உடல்நிலை மோசம் அடைந்துள்ளனர். பலர் மனநோயால் பாதிக்கபட்டுள்ளனர்.

அவர்களை தீவிரவாதிகள் விடுதலை செய்தது ஏன்? என தெரியவில்லை. இன்னும் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்களும், குழந்தைகளும் தீவிரவாதிகள் பிடியில் சிக்கி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## மகிந்தவின் தோல்வியில் றோவின் வகிபாகம்

ஜனாதிபதித் தேர்தலுக்கு ஒரு மாதத்துக்கு முன்னராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தோற்கடிப்பதற்கு, வேலை செய்ததாக கூறப்பட்டு, இந்திய உளவு ஸ்தாபனமாகிய றோவின் கொழும்பு தலைமை அதிகாரியை இலங்கை அகற்றியது என ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திலிருந்து வெளியேறிய மைத்திரிபால சிறிசேனவுக்கு கொழும்பு புதுடில்லியிலுள்ள பல தகவல் மூலங்கள் உற்சாகம் அளித்துடன் தேர்தல் சமயத்திலும் அவருக்கு உதவி வழங்கியதால், றோவின் முகவரை மீளப்பெறுமாறு இந்தியாவிடம் கேட்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளன.

இந்தியாவின் பகைமையுடனான சீனாவின் பக்கம் முன்னாள் ஜனாதிபதி சாய்ந்தமையினால், இலங்கை மீது இந்தியாவின் செல்வாக்கு குறைவாகப்பேசப்பட்ட சமயத்தில், இந்த ராஜபக்ஷ எதிர்பார்க்காத விதத்தில் தோல்வியடைந்து விட்டார்.

மைத்திரிபால சிறிசேன உட்பட பல நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கத்திலிருந்து வெளியேற தூண்டியதாகவும் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடாது இருக்க தீர்மானிக்க வைத்து, வெல்லக்கூடியவரும் இந்தியாவுடன் ஒத்துபோகக்கூடியவருமான ஒருவரை களத்திலிறக்க உதவினார் என்றும் இலங்கையின் றோவின் தலைவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

றோ உளவு நிறுவனம் ரணிலை சந்தித்து கட்சித்தலைவர்களை தூண்டி சந்திரிக்காவையும் கொண்டுவந்தது என ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் ரொய்ட்டருக்கு தெரிவித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியாவின் ஆச்சரியம் இனிமேல்தான் நடக்கப்போகிறது


Z தமிழ் தொலைக்காட்சியில் **சொல்வதெல்லாம் உண்மை** என்றொரு நிகழ்ச்சி நடைபெறுவது நீங்கள் அறிந்ததே.

முரண்பாடுடைய இரு தரப்பினர் குறித்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வர். அறிவிப்பாளர் இரு சாராரின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து அதற்குத் தீர்வுகாண உதவி செய்வார்.

இதன்போது முரண்பாடுகள் குற்றச்சாட்டுக்களாக இரு தரப்பினராலும் மாறி மாறி சுமத் தப்படும். இப்படியான அந்நிகழ்வில் ஒரு நாள் தந்தையும் மகளும் கலந்து கொண்டனர்.

இருவருக்குமிடையில்கடும்பிரச்சினை. தந்தை, மகள் மீது குற்றம் சுமத்த; மகள் தந்தையை குற்றம் சாட்டினார்.

இவ்வாறு மாறிமாறி குற்றச்சாட்டுக்கள் சுமத்த இருவரின் கோபமும் உச்சம் அடைந்தது.





ஒரு கட்டத்தில் தந்தை தன் மகளைக் கடுமையாக விமர்சித்தார். அச்சந்தர்ப்பத்தில் கடுப்படைந்த மகள் "நீ மூன்று பேரைக் கொலை செய்தவன்" என்று சொல்லி விட, சொல்வதெல்லாம் நிகழ்ச்சியும் அத னைப் பார்த்துக் கொண்டிருந்த ரசிகர்களும் பரபரப்படைந்தனர்.

அறிவிப்பாளருக்கு அவல் கிடைத்தது போல கேள்விக்கு மேல் கேள்வி தொடுக்க,

எனது தந்தையின் நண்பர் ஒருவர் தனது மகன், மருமகள் ஆகியோருடன் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தனர். மகனின் காதலுக்கு பெண் வீட்டார் எதிர்ப்புத் தெரிவிக்க தன் காதலியை மகன் கூட்டி வந்ததால் ஊரில் இருப்பது ஆபத்தென்று கருதியே அவர்கள் மூவரும் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தனர்.

என் தந்தை உதவுவார் என்ற நம்பிக்கையோடு வந்த அவர்களிடம் தங்க நகைகளும் பணமும் இருந்தன.

அந்தப் பணத்தையும் நகைகளையும் கபளீகரம் செய்வதற்காக எனது தந்தை அந்த மூவரையும் ஆள் நடமாட்டம் இல்லாத பகுதிக்கு கூட்டிச் சென்று கொலை செய்து அவர்களைப் புதைத்து விட்டார்.

இப்படி மகள் கூற, தமிழகமே விறைத்துப் போயிற்று. உடனடியாகப் பொலிஸார் தலையிட்டு குறிப்பிட்ட இடத்தில் தேடுதல் நடத்திய போது தந்தை, மகன், மருமகள் என்ற மூவரின் உடல்களும் மீட்கப்பட்டன.

இந்தச் சம்பவம் இந்திய தேசம் முழுவதிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இச்சம்பவத்தை உங்களில் பலரும் தொலைக்காட்சியில் பார்த்திருப்பீர்கள்.

சம்பவம் உண்மையாயினும் இவ்விடத்தில் இது எதற்கானது என்று நீங்கள் கேட்கலாம். அந்தக் கேள்விக்கு; மூவரைக் கொலை செய்த உண்மையை வெளிப்படுத்தியவர் கொலை செய்தவரின் மகள் என்ற பேருண்மையை நீங்கள் அறிய வேண்டும் என்பதற்காகவே. அந் நிகழ்ச்சி பற்றி இவ் விடத்தில் குறிப்பிட்டோம்.

தந்தை செய்த கொலையை மகள் சொல்ல வேண்டிய தேவை எதற்கானது? என்றால், கொலை செய்து விட்டு அபகரித்த பணம் மற்றும் நகையில் மகளுக்கு எதுவும் கொடுக்காததே காரணமாம்.

ஆம், யாருக்கும் தெரியாமல் நடத்தப்பட்ட கொலையை தான் பெற்ற மகளே காட்டிக்கொடுத்தாள் எனில் உண்மைகள் எப்போதும் உறங்கமாட்டாது என்பதற்கு இதை விட வேறு உதாரணம் தேவைப்படாது.

நாட்டில் நடந்த ஆட்சி மாற்றம் ஒரு புதிய பயணத்தை நோக்கியதாக இருப்பதை அவதானிக்க முடிகிறது.

இந்நேரத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் நடந்த ஊழல்கள் , கொலைகள் தொடர்பில் திடுக்கிடும் தகவல்கள் வெளிவந்த வண்ணமுள்ளன.

மகிந்த ராஜபக்ஷவோடு கூட இருந்த முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா நேற்று முன்தினம் குற்றப் புலனாய்வுத் துறையினரிடம் ஒரு முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டில் சண்டே லீடரின் ஆசிரியராக இருந்த லசந்த விக்கிரமதுங்கவின் கொலைக்கும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் தொடர்பு உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா மகிந்த ராஜபக்ஷவின் மிக நெருங்கிய நண்பர். மேர்வின் எது செய்தாலும் அதைப்பற்றி மகிந்த தட்டிக் கேட்டதே கிடையாது.

அந்தளவுக்கு இருவரும் நெருங்கிய ஒற்றுமை உடையவர்கள். இருந்தும் லசந்த விக்கிரமதுங்கவின் கொலைக்கும் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் தொடர்பு உள்ளது என மேர்வின் சில்வா முறைப்பாடு செய்துள்ளார் என்பது ஆச்சரியமான உண்மை.

இரவு விடுதி ஒன்றில் அட்டகாசம் புரிந்தார் என்ற குற்றச்சாட்டில் மேர்வின் சில்வாவின் மகன் கைது செய்யப்பட்டிருந்தார்.

மகனை விடுவிப்பதற்காக மேர்வின் படாப்பாடு. எனினும் அதனை கோத்தபாய ராஜபக்ஷ செவிமடுக்கவேயில்லை.

ஒரு அமைச்சராக இருந்தும் தனது மகனுக்குப் பிணைபெற்றுக் கொடுக்க முடியவில்லை என்ற கவலை மேர்வினைக் கடுமையாக வாட்டியது.

அந்தச் சம்பவத்தோடு அமைதி



யடைந்த மேர்வின் சில்வா, தனது மகன் சிறையில் அடைக்கப்படுவதற்கு கோத்தபாய ராஜபக்ஷவே காரணம் என்று நம்பினார்.

அந்த நம்பிக்கைக்கு ஆதாரங்களும் இருக்கவே செய்தன.

## பழிக்குப்பழி

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட போது மகிந்த ராஜபக்ஷவின் பக்கத்தில் இருந்தவர்கள் மைத்திரி பக்கத்திற்குதாவத் தொடங்கினர்.

மேர்வினும் மைத்திரியின் பக்கத்திற்குச் சென்றாராயினும் மைத்திரி தரப்பு அவரை ஏற்க மறுத்து விட்டது.

மகிந்தவின் ஆட்சியில் மிகப் பெரிய அட்டகாசம் செய்து கோமாளித்தன அமைச்சராக இருந்தவர் மேர்வின்.

சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவரை மரத்தோடு கட்டி வைத்து மிகப் பெரிய காட்டுமிராண்டித் தனத்தை செய்த மேர்வினை தமது பக்கம் எடுக்கக் கூடாது என்பதில் மைத்திரி தரப்பு மிகவும் விளிப்பாக இருந்தது.

ஆதரவு தெரிவித்து மைத்திரியிடம் சென்ற மேர்வினைப் பார்த்து உமது ஆதரவு எமக்கு வேண்டாம் என்று சொல்லிவிட்டார் மைத்திரி. இருந்தும் மேர்வின் கோபமடையவில்லை.

அவரது கோபமெல்லாம் கோத்தா மீதே இருந்தது. அரசியலில் கோமாளித்தனம் இருந்தாலும் அரசியல் நிலைப்பாடு எவ்வாறு அமையும் என்பதை மேர்வின் சில்வா அறிந்திருந்தார். அதனா லேயே அவர் மைத்திரியிடம் சென்றார்.

மைத்திரி தன்னை ஏற்க மறுத்த போது "பரவாயில்லை எதிர்வரும் காலங்களில் நான் எதிர்க்கட்சி வரிசையில் இருப்பேன்" என்று கூறி விட்டு வீடு திரும்பிவிட்டார்.

எதிர்கட்சியின் வரிசையில் இருப்பேன் என்று மேர்வின் கூறியதற்குள் மகிந்த தோல்வி அடைவார் என்ற செய்தி இருந்துள்ளது என்ற உண்மையை மறுத்து விடமுடியாது.

தேர்தல் முடிபு வரைக்கும் காத்திருந்த மேர்வின் இப்போது லசந்த விக்ரமதுங்கவின் கொலைக்கும் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் தொடர்பு உண்டு என முறைப்பாடு செய்து, தென் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

மைத்திரியின் பக்கத்தில் நின்று கொண்டு மேற்குறித்த குற்றச்சாட்டை மேர்வின் முன் வைத்திருப்பாராயின் எல்லாம் திட்டமிட்ட சதிச் செயல் என்று மகிந்த ஆதரவாளர்கள் கூறியிருப்பர். ஆனால் மேர்வினின் ஆதரவை வேண்டாம் என்று கூறியவர் மைத்திரி.

எனவே திட்டமிட்ட சதிச் செயலென்று எவரும் மறுதலிக்க முடியாத அளவில் மேர்வினின் முறைப்பாடு உள்ளது.

மகிந்தவின் காலத்தில் கோமாளித்தனமாகப் பேசப்பட்ட மேர்வின், எதிர்காலத்தில் ஒரு உண்மையை பகிரங்கப்படுத்தியவர் எனப் பெருமைப்படுத்தப்படுவார் என்று நம்பலாம்.

சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கவின் கொலை மட்டுமன்றி முன்னாள் அமைச்சர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர மற்றும் ரகமலொக்குசிய்யா ஆகியோரின் கொலைகளிலும் கோத்தபாயவுக்குத் தொடர்பு உண்டு என மேர்வினின் முறைப்பாடு நீண்டு செல்வதில் இருந்து மகிந்த குடும்பத்திற்கான எதிர்ப்பு தென்பகுதியில் எந்நேரமும் வெடிக்கும் என எதிர்பார்க்கலாம்.

இவை ஒருபுறம் நடந்து கொண்டிருக்க, றக்பி வீரரான மொஹமட் வஹீம்தாஜுதீன் என்பவரின் கொலைக்கும் மகிந்தவின் இரண்டாவது மகன் ஜோஷித ராஜபக்ஷவுக்கும் தொடர்பு இருப்பதாக ஜோஷிதவின் காதலி யசாரா அபேயநாயக்க அவுஸ்திரேலியாவில் வைத்து தெரிவித்துள்ளதாக, த இன்டிப்பென்டன் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதன் உண்மைத் தன்மைகள் எவ்வாறானவை என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

எனினும் மகிந்த எதிர்பார்த்த ஆசியாவின் ஆச்சரியம் அவரின் ஆட்சிக் காலத்தில் நடக்க வில்லையாயினும் இனிமேல் நடக்கப் போகிறது.

ஆம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தினர் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் ஆசியாவின் ஆச்சரியமாக இருக்கும் என்பதில் ஆச்சரிய மில்லை.

**விதுரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### குத்தகைப்பணம் செலுத்தப்படாமையால் அருவிவெட்டும்

# இயந்திரங்கள் பறிமுதல்

## விவசாயிகள் கவலை

**(மல்லாவி)**

**முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் நெல் அரிவி வெட்டும் இயந்திரங்கள் 54 இருந்த நிலையில் வங்கிகளில் பெற்ற விவசாயிகள் குத்தகைப்பணத்தை குறித்த காலத்திற்குள் செலுத்தாமையால் 36 நெல் அருவி வெட்டும் இயந்திரங்களை குத்தகைப் பணம் வழங்கிய வங்கிகள் பறிமுதல் செய்துள்ளதால் தாம் பலகோடி ரூபாவை இழந்து நிர்க்கதியான நிலையில் இருப்பதாக பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.**

இது தொடர்பாக தெரியவருவதாவது,

வன்னியில் இடம்பெற்ற இறுதிப் போரின் போது அனைத்தையும் இழந்து ஏதிலிகளாக இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கியிருந்த விவசாய மக்கள், மீள்குடியேற்றம் செய்யப்பட்ட போது தமது பிரதான தொழிலான விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இந் நடவடிக்கைக்கு உதவியாக உழவு இயந்திரங்களையும் நெல் அருவி வெட்டும் இயந்திரங்களையும் குத்தகை அடிப்படையில் வங்கிகளில் இருந்து பெற்றுக் கொண்டனர்.


கடந்த 2010 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் இடம்பெற்ற வெள்ளப் பெருக்கினாலும் வரட்சியினாலும் விவசாய நடவடிக்கைகள் அழிந்து போயின.

இதனால் வங்கிகளுக்கு குத்தகைப் பணத்தினை உரிய காலப்பகுதியினுள் செலுத்த முடியாது போனமையால் 36 நெல் அருவி வெட்டும் இயந்திரங்களை வங்கிகள் பறிமுதல் செய்துள்ளன.

ஒரு நெல் அருவி வெட்டும் இயந்திரத்தின் விலை 40 இலட்சத்திலிருந்து 55 இலட்சம் வரையிலான தொகையாகும்.

இந்நிலையில் பெரும் தொகை பணத்தினை செலுத்திய நிலையில் பல கோடி ரூபாவினை இழந்துள்ளோம் என பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை தற்போது நெல் அருவி வெட்டும் இயந்திரங்களின் தட்டுப்பாடு காரணமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தற்போது கடந்தாண்டுகளில் ஏக்கர் ஒன்றுக்கு 4 ஆயிரத்து 500 ரூபா தொடக்கம் 5 ஆயிரம் வரை நெல் அருவி வெட்டு கூலியாக பெறப்பட்ட நிலையில் தற்போது 7 ஆயிரத்து 500 ரூபா தொடக்கம் 8 ஆயிரம் ரூபா வரை கூலி அறிவிடப்படுகின்றது. இதனால் விவசாயிகள் பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்கியுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர். (அ-2-15)




## சம்புக்குளம் கிராமத்தில் அப்பள தொழிற்சாலை

கிளிநொச்சி இராமநாதபுரம் சம்புக்குளம் கிராமத்தில் கனடா மறுவாழ்வு அமைப்பினரால் அப்பளத் தொழிற்சாலையொன்று ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது. சுயதொழில் முயற்சியை ஊக்குவிக்கும் பொருட்டு குறித்த அப்பளத் தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அப்பள தொழிற்சாலை முகாமையாளர் இராமஜெயம் கருத்து தெரிவிக்கையில், இதன் ஆரம்ப நிகழ்வுகள் கடந்த 16ஆம் திகதி இராமஜெயம் தலைமையில் நடைபெற்றது. இதில் கரைச்சி பிரதேச உறுப்பினர்களான சுவிஸ்கரன் பொன்னம்பலநாதன், சம்புக்குளம் கிராம அபிவிருத்தி சங்க தலைவர் தவச்செல்வம், செயலாளர் குமார், சம்புக்குளம் அம்மன் கோவில் போசகர் சதா சிவம்



மற்றும் பணியாளர்கள், பொதுமக்கள் ஆகி யோர் கலந்துகொண்டுசிறப்பித்துள்ளனர். கனடாமறுவாழ்வு அமைப்பின் இத்தகைய சுயதொழில் முயற்சிக்கான ஊக்குவிப்பு மூலம் சம்புக்குளம் பிரதேசத்தில் கணிசமானவர்களுக்குவேலைவாய்ப்பும் வருமானமும் அப்பளம் செய்கின்ற முறைபற்றிய அறிவும் கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டது. (அ-2)

## நீலியாமோட்டை கிராமத்தில் யானைகள் கடும் அட்டகாசம்

### மின்சாரவேலி அமைக்க கோரிக்கை

(நீலியாமோட்டை)

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகப்பிரிவில் உள்ள நீலியாமோட்டை கிராமத்தில் யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக அக்கிராம மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சுமார் 68 குடும்பங்கள் வசிக்கும் இக்கிராமத்தின் சுற்றுச்சூழல் காட்டுப்பகுதியாக காணப்படுவதனால் யானைகள் மற்றும் காட்டு விலங்குகளின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுவதாக இக்கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

பாடசாலை மாணவர்கள் உட்பட கூலி வேலைக்கு செல்பவர்களும் யானைகளினால் பெரும் பாதிப்புகளை எதிர்கொள்வதாக அவர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை, மின்சார வசதிகள் பூரணப்படுத்தப்படாமையால் இப்பகுதியில் இரவு வேளையில் வரும் யானைகளை அடையாளம் காணமுடியாதுள்ளதாகவும் அவ்வேளையில் வீட்டில் உள்ள வாழ்வாதாரப் பயிர்களையும் விவசாய நிலங்களையும் யானைகள் நாசம் செய்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் அண்மையில் பெண்ணொருவரை யானை தாக்கியுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே தமது கிராமத்தைச் சூழ மின்சார வேலிகளை அமைத்து தருமாறு உரிய அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-2)

## தேசிய ஊழியர் சங்க கட்டடம் திறந்து வைப்பு

வவுனியா இலங்கை போக்குவரத்து சபையில் நேற்று முன்தினம் தேசிய ஊழியர் சங்க கட்டடத்தை ஐக்கிய தேசிய கட்சியின் வன்னி மாவட்ட அமைப்பாளர் றோகன கமகே மற்றும் ஐக்கிய தேசிய கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் கருணதாச ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் இலங்கை போக்குவரத்து சபையின் வடபிராந்திய முகாமையாளர் எஸ்.அஸ்கர், இலங்கை போக்குவரத்து சபையின் சாலை முகாமையாளர் எஸ்.சந்திரன் மற்றும் இலங்கை போக்குவரத்து சபையின் சாரதிகள், ஊழியர்கள் எனப் பலதரப்பினர் கலந்துகொண்டனர்.

ஐக்கிய தேசிய கட்சியின் வன்னி மாவட்ட அமைப்பாளர் றோகன கமகே தேசிய ஊழியர் சங்கத்தை திறந்து வைத்து உரை நிகழ்த்துகையில்,

கடந்த காலங்களில் அரசாங்கமானது மக்களின் தலைகளில் சுமையை ஏற்றியி



ருந்தது. அந்த அரசாங்கத்தை நீங்கள் சுமக்க முடியாமல் தவித்தீர்கள், பார்க்கும் இடமெல்லாம் அவருடைய சுவரொட்டிகள் இருந்தது, அவருடைய துஷ்பிரயோகம் இருந்தது, அவருடைய வஞ்சனை இருந்தது எந்த வேலையும் செய்ய முடியவில்லை. ஆனால் நீங்கள் தற்போது பார்த்தீர்களானால் கடந்த 10 நாட்களுக்குள் மக்களுக்கான வேலைத் திட்டங்களை செய்ய கூடியதாக இருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2-250)

## பேருந்து விபத்தில் ஒருவர் படுகாயம்


(குருமன்காடு)

வவுனியா, நெளுங்குளத்தில் தனியார் பேருந்தும் மோட்டார் சைக்கிளும் மோதிய விபத்தில் இளைஞன் ஒருவன் படுகாயம் அடைந்துள்ளார்.

இவ்விபத்து நெளுங்குளம் மன்னார் வீதியில் அண்மையில் நடைபெற்றுள்ளது.

இதில் கணேசபுரத்தைச் சேர்ந்த மாடசாமி சுந்தர் (வயது-29) என்பவரே படுகாயமடைந்தவராவார். இச்சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, மன்னாரிலிருந்து வவுனியா நோக்கி பயணித்த இ.போ.ச.பேருந்தும் தனியார் பேருந்தும் ஒன்றை ஒன்று முன் செல்ல முற்பட்ட வேளை தனியார் பேருந்தானது எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது. இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளார். வவுனியா பொலிஸாரினால் இரண்டு பேருந்துகளும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை மேற்கொண்ளப்பட்டது. (அ-2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

1044

## செல்வம் வேண்டாமா?

...அவள் ஏழையாக இருந்தாலும், சிறுவயது முதல் செல்வத்திலும், சுகபோகங்களிலும் அபார ஈடுபாடு இருந்தது. அவளை சோமு என்ற வாலிபன் வரதட் சணை ஏதுமின்றி திருமணம் செய்து



கொள்ள விருமபினான். அவன் ஏழை என்பதால் அவனை மணம் செய்ய நிராகரித்துவிட்டாள். ஆனால் அவள் தந்தை அதற்கு சம்மதித்துவிட்டார். அதனால் வீட்டை விட்டு ஓடி வந்த அவள், ஆனந்தனிடம் தனக்கு புகலிடம் தருமாறு வேணடி னாள்.

அதற்கு சம்மதித்த ஆனந்தன, "நீலாம்பரி! ஒரு வருடம் வரை புதையலைப் பாதுகாத்த வாறு எனக்கு உதவி செய்து கொண்டு இருந்தால், உனக்கு அந்தப் பணம் கிடைக்க ஏற்பாடு செய்கிறேன்" என்று கூறினான். அவளும் அதற்குச் சம்மதித்தாள். ஒரு நாள் அவளை மனதார விரும்பிய சோமு அவளைத் தேடி ஆசிரமத்திற்கே வந்து விட்டான். தன்னைத் திருமணம செய்து கொள்ளும்படி மீண்டும் அவளை நச்சரித்தான்.

அதற்கு அவள், "ஆனந்தனை நீ கொன்று விட்டால். அந்தப் புதையலை நாம் எடுத்துக் கொண்டு திருமணம் புரிந்து மகிழ்ச்சியுடன் இருப்போம்" என்றாள். ஒருநாள் அவளை மணதார விரும்பிய சோமு அவளைத் தேடி ஆசிரமத் திற்கே வந்துவிட்டான். தன்னைத் திருமணம் செய்து கொள்ளும்படி மீண்டும் அவளை வற்புறுத்தினான். அதற்கு அவள், "ஆனந்தனை நீ கொன்றுவிட்டால. அந்தப் புதையலை நாம் எடுத்துக் கொண்டு திருமணம் புரிந்து மகி ழச்சியுடன் இருப்போம்" என்றாள்.

நீலாம்பரி பேசியதை ஆற்றில் நீராடச் சென்று திரும்பிய ஆனந்தன் கேட்டு திடுக்கிட்டான். உடனே அவள் முன் வந்து, "பணத்திற் காக உனக்குப்புகலிடம்தந்த என் னையே நீ கொல்ல எண்ணினாய்! அதனால நீ ராட்சஸியாக மாறு வாய்" என்று சாபம் கொடுக்க, நீலாம்பரி ராட்சஸியாக மாறி விட்டாள்.

அப்போது அங்கே வந்த பிரகாண்ட ரிஷி ஆனந்தனைப் பார்த்து, "நீலாம்பரிக்கு சாபம் கொடுத்த தனால உன் தவவலிமையை நீ இழந்து விட்டாய்!" என்றார்.

"சுவாமி! மனித குலத்தின் மீது நம்பிக்கை இழந்துவிட்டேன். என்னை உடனே சந்நியாசியாக மாற்றுங்கள்" என்று ஆனந்தன் வேண்டினான.

"சரவணனுக்கு நீ கொடுத்த வாக்கு என்னாவது? உனக்குப் பதிலாக வேறு யாரையாவது அவனிடம் வேலைக்கு அமர்த்து! உன்னால் சாபமிடப்பட்ட நீலா ம்பரிக்கு சாப விமோசனம் அளி! அதன்பிறகு சந்நியாசத்தைப் பற்றி யோசிக்கலாம்" என்றார் ரிஷி.

"நீங்கள் எனக்குச் சற்று உதவி செய்யக்கூடாதா?" என்று ஆனந்தன வேண்ட, அவர் "பணத்தின் மீதுள்ள ஆசையினால் தானே நீலாம்பரி உன்னைக் கொலை செய்யவும் துணிந்தாள். அதே பணத்தை துச்சமாகக் கருதி எவன் ஒருவன் தியாகம் செய் கிறானோ, அவன் மூலம் நீலா ம்பரிக்கு விமோசனம் அடைய, உன்னுடைய கடமையும் முழுமையடையும்" என்றார்.

மேற்கூறிய தன் வரலாற்றை விளக்கியபின், ராமநாதனை சரவணனிடம் அழைத்துச் செல்லவே தான்வந்ததாக ஆனந்தன் கூறினான. இதைக் கேட்டதும் ராமநாதன் மிகுந்த உற்சாகத்துடன் சரவணனிடம் வேலைக்கு அமர் ந்தான். பிறகு தான் அவனுக்கு அந்த வீட்டில் வேலை செய்வது எத்தனை கடினம் என்று புரிந்தது.

ஒருநாள், எஜமானி "இந்த கிராமத்தில் சந்திரா என்ற சமையற்காரி ஒருத்தி இருக்கிறாள். அவள் மிகப் பிரமாதமாக சமைப்பாள். அவளை எப்படியாவது இங்கு சமையல் செய்ய அழைத் துவா! முடியவில்லையெனில் உன்னை வேலையை விட்டு நீக்கி விடுவேன்" என்று பய முறுத்தினாள்.

ஆனால், சந்திரா மறுத்துவிட்டாள். ராமநாதன் விடாமல், "ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு எனக்கு ஆயிரம் பொன் கிடைக்கும். அதை உன்னோடு பகிர்ந்து கொள் வேன். தயவுசெய்து எனக்கு உதவி செய்!" என்று கெஞ்சினான. அவனைக் கண்டு இரக்கமுற்ற சந்திரா, "எனக்கு உன்னுடைய பணம்தேவையில்லை. உன்னுடைய நிலைமை பரிதாபமாக இருப்பதால் உனக்கு உதவி செய்ய ஒத்துக் கொள்கிறேன்" என்று கூறினாள்.



அவனுடன் சரவணன் வீட்டுக்கு வந்து சமையல் வேலை மட்டுமன்றி, மற்ற எல்லா வீட்டு வேலைகளிலும் ராமநாதனின் தோளாடு தோள் நின்று உதவி செய்தாள்.

நாளடைவில் பணத்தைப் பற்றிய அவன் கருத்து மாறியது. அவன் தன் வாழ்வில் சந்திராவை வாழ்க்கைத் துணைவியாக அடைந்தால் அதுவே பெரிய பொக்கிஷம் கிடைப் பது போல் என்று எண்ண ஆரம்பித்தான்.

ஐந்து ஆண்டுகள் சென்றபிறகு அவன் ஆனந்தனை அடைந்து, "உன் பொருட்டு, நான் அந்த வீட்டில ஐந்து ஆண்டுகள் வேலை செய்து முடித்துவிட்டேன்.

ஆனால் எனக்கு அந்த ஆயிரம் பொன் தேவையில்லை. அதை நீயே வைத்துக் கொள்! என் வாழ்க்கையின் மிகப் பெரிய செல்வம் சந்திரா ஒருத்தியே என்று உணருகிறேன்!" என்று ராமநாதன் கூறியதும், ஆனந்தன் ஆச்சரியப்பட்டான். அந்த சமயம் அங்கு வந்த பிரகாண்ட ரிஷி, ராமநாதனை மனதார வாழ்த்தினார்.

நீலாம்பரியும் அக்கணத்திலேயே சாப விமோசனம் பெற்று சுய உருவத்தைப் பெற்றாள்.

(முற்றும்)

01.2015
19

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1764 - ஜான் வில்க்ஸ் ஐக்கிய இராச்சியத்தின் மக்களவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்.
- 1806 -நன்னம்பிக்கை முனையை பிரித்தானியா பிடித்தது.
- 1839 - பிரித்தானிய கிழக்கிந்தியக் கம்பனி ஜேர்மனின் ஏடென் நகரைக் கைப்பற்றியது.
- 1862 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: மில் ஸ்பிரிங்ஸ் சண்டையில் அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பு தனது முதல் பெரிய தோல்வியை பெற்றது.
- 1899 - ஆங்கில-எகிப்திய சூடான் அமைக்கப்பட்டது.
- 1927 -பிரித்தானியா சீனாவுக்கு படைகளை அனுப்பியது.
- 1941 -இரண்டாம் உலகப் போர்: பிரித்தானியப் படை கள் இத்தாலி வசமிருந்த எரித்திரியாவைத்தாக்கினர்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியப் படை கள் பர்மாவை முற்றுகையிட்டனர்.
- 1949 - கூபா இசுரேலை கண்டுகொண்டது.
- 1966 - இந்திரா காந்தி இந்தியப் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1983 - நாசி போர்க் குற்றவாளி கிளவுஸ் பார்பி பொலிவியாவில் கைது செய்யப்பட்டான்.
- 1986 - முதற் கணனி நச்சுநிரலான பிரெயின் (c)Brain பரவத் தொடங்கியது.
- 1993 - வேதி ஆயுத உடன்படிக்கை (CWC) கை யொப்பமிடப்பட்டது.
- 1997 - 30 ஆண்டுகளுக்குப் பின்னர் யாசர் அரபாத் ஹெபரோன் திரும்பினார்.
- 2006 - புளூட்டோவுக்கான முதலாவது நியூ ஹரைசன்ஸ் என்ற விண்ணுளவியை நாசா விண்ணுக்கு ஏவியது.

**பிறப்புகள்**

- 1736 - ஜேம்ஸ் உவாட், கண்டுபிடிப்பாளர் (இ. 1819)
- 1807 - ராபர்ட் ஈ. லீ, அமெரிக்கப் பொறியியலாளர் (இ. 1870)
- 1809 - எட்கார் அலன் போ, அமெரிக்க எழுத்தாளர், கவிஞர் (இ. 1849)
- 1839 - பால் செசான், பிரெஞ்சு ஓவியர் (இ. 1906)
- 1912 - லியோனிட் கண்டரோவிச், நோபல் பரிசு பெற்ற இரசியப் பொருளியலாளர் (இ. 1986)
- 1933 - சீர்காழி எஸ். கோவிந்தராஜன், கர்நாடக, திரையிசைப் பாடகர் (இ. 1988)
- 1948 - வானம்பாடி யோகராஜ், ஈழத்து வில்லிசைக் கலைஞர் (இ. 1999)

**இறப்புகள்**

- 1905 - தேவேந்திரநாத் தாகூர், இந்தியப் பகுத்தறி வாளர் (பி. 1817)
- 1990 - ஓஷோ, இந்திய ஆன்மிகவாதி (பி.1931)

### ஓஷோ



ஓஷோ 1931 டிசெம்பர் 11 இல் மததிய பிரதேசத்தில் உள்ள குச்வாடா என்ற சிற்றூரில் பிறந்தார். ஓஷோவுடைய இயர் பெயர் ரஜ்னீஷ் சந்திர மோகன். சிறுவயதிலிருந்தே தியானத்தில் ஈடுபட்ட ஓஷோ தன்னுடைய இருபத்து ஒன்றாவது வயதில் அதாவது 1953 மார்ச் 21 இல் ஞானம் அடைந்தார். குச்வாடா ஓஷோவுடைய தாய் வழி தாத்தா, பாட்டி வாழ்ந்து வந்த ஊர். முதல் ஏழு வருடங்கள் அங்கேதான் வளர்ந்தார். ஓஷோவுடைய பெற் றோர்கள் கடர்வாடாவில் வசித்து வந்தார்கள். தாத்தா இறந்த பிறகு பாட்டியுடன் கடர்வாடா வந்துவிட்டார்.. 1956 இல் ஓஷோ தத்துவயியலில் முதல் வகுப்பு சிறப்பு நிலை தேர்ச்சி பெற்று, சாகர் பல்கலைகழகத்திடமிருந்து முதுகலை பட்டம் பெறுகிறார். அவர் தனது பட்டப் படிப்பில் அகில இந்திய அளவில் தங்கப்பதக்கம் பெற்ற மாணவனாவார். 1957 இல் ரெய்ப்பூரில் உள்ள சமஸ்கிருத கல்லூரியில் ஓஷோ பேராசிரியராக நியமனம் பெறுகிறார். 1958 இல் ஜபல்பூரில் உள்ள பல்கலைக்கழகத்தில் தத்துவ பேராசிரியராக நியமனம் பெற்ற ஓஷோ 1966 வரை அங்கேயே கல்வி கற்பிக்கிறார்.

1966 இல் ஒன்பது வருட பேராசிரியர் வேலையை விடுத்து, மனித குலத்தின் விழிப்புணர்வை உயர்த்துவதற்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்கிறார். 1970 ஜூலையில் மும்பாய்க்கு வந்த அவர் பகவான் ஸ்ரீ ரஜனீஷ் என்று அழைகப்பட்ட அவர் ஆன்மீக சாதகர்களுக்கு தீட்சை அளித்து சிஷ்யர்களாக்கினார். 1990 ஜனவரி 19 மாலை 5 மணிக்கு ஓஷோ தன் உடலை விட்டு நீங்கினார். அவருடைய ஒரே செய்தி தியானம் தான். அதைத்தான் அவர் தன் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டே வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு...

**உச்சகட்டம்**

படத்தின் இறுதிக்கட்டம்- உச்ச கட்டம் - அண்ணனை விட்டுப் பிரிந்து தன்னை மணக்கப்போகும் என்ஜினியரோடு செல்லும் வள்ளி, அண்ணன் காளியிடமே மீண்டும் ஓடி வருவாள். கட்டிப்பிடித்து அழுவாள். எனக்கு நீதான் முக்கியம் என்பதைத் தனது அழுகையாலே உணர்த்துவாள்.


அண்ணன் காளிக்கு (ரஜினிகாந்த்) பெருமை பிடிபடாது. தங்கையை அழைத்துக்கொண்டு மணமகனிடம் (சரத்பாபு) வருவார். உலகத்தில் அண்ணனே தனக்கு எல்லாம் என தன் தங்கை நிரூபித்து விட்ட மகிழ்ச்சியைக் கூறுவார். "இப்ப என் தங்கச்சியை உங்களுக்கு மனைவியாக்க நான் சம்மதிக்கிறேன். ஆனா இப்பவும் உங்களை எனக்குப் பிடிக்கலே சார்..." என்பார். அதுதான் காளியின் விசேட குணாதிசயம்.

வழக்கமான தமிழ் சினிமாக்களில் "காளி" போன்ற காரெக்டர் கடைசியில் என்ஜினியரிடம் சமரசமாய்ப் போய்விடுவது போலக் காட்டிவிடுவார்கள். இங்கேயோ தங்கையை மணக்கப்போகிறவனைப் பார்த்து, கடைசியில் கூட "இப்பவும் உங்களை எனக்குப் பிடிக்கலே சார்" என்கிறான்.

**சரத்பாபுவை காணோம்!**

இந்தக் காட்சியை படமாக்கும் போது, திடீரென சரத்பாபு காணாமல் போய்விட்டார். கடைசியில் அவரை மேட்டுப்பாளையம் ரெயில நிலையத்திலிருந்து இழுத்து வந்தார் தயாரிப்பாளர். "அது எப்படி, இப்பக்கூட என்னைப் பிடிக்கலைன்னு இந்த ஆள் சொல்லலாம்?" என்று என்னிடம் சரத்பாபு கோபப்பட்டபோது நான் சிரித்துக்கொண்டே சொன்னேன்: "சரத்... கதைப்படி, காட்சிப்படி காளி என்கிற காரெக்டர்தான் என்ஜினியரை வெறுக்கிறான் இப்படிக் கடைசி வரைக்கும் ஆனா, காளியா நடிக்கிற ரஜினிகாந்த் என்ஜினியரா நடிக்கிற சரத்பாபுவை வெறுக்கலே!" என்று விளக்கிய பிறகுதான், அவருக்கு "சினிமா வேறு, வாழ்க்கை வேறு" என்று புரிந்தது.

30



ரஜினியுடன் பிரமிளா சதுரங்கம் படத்தில்

## கதாநாயகனாக ரஜினி நடிக்க பட அதிபர் எதிர்ப்பு!

சரத்பாபு தனிப்பட்ட முறையில் ஒரு அற்புதமான மனிதர். அவரை "ஜெண்டில்மேன்" என்றுதான் குறிப்பிடுவேன். "முள்ளும் மலரும்" அவருக்கு ஆரம்பகட்டம். குழந்தை போல நடந்து கொண்டார்,

**பட அதிபர் ஆவேசம்**

படம் தயாராகி முடிந்தது. அதன் முதல் பிரதியைப் பார்த்துவிட்டு வெளியே வந்த பட அதிபர் வேணு செட்டியார், என்னைப் பார்த்ததும், "அடப்பாவி! என் தலையிலே மண்ணை அள்ளிப் போட்டுட்டியே! படத்துலே வசனமே இல்லை. அங்கே ஒண்ணு, இங்கே ஒண்ணு வருது! படமா எடுத்திருக்கே!" என்று என்னை ஆவேசமாய்த் திட்டித் தீர்த்து விட்டுப் போய்விட்டார்.

நான் சிறிதும் கோபப்படவில்லை. அவர் வழக்கமான கமர்ஷியல் புரொடிசர். அவர் எதிர்பார்த்தது, வழக்கமான சினிமா நாட்க பாணி வசனம். குறைந்த வசனங்களை நான் எழுதியிருந்ததால் அவருக்கு அப்படி கோபம் வந்தது.

இளையராஜா முதன் முதலாக பின்னணி இசையின் ஆழமான ஞானத்தை வெளிப்படுத்திய படம் "முள்ளும் மலரும்."

படம் வெளியானது. முதல் மூன்று வாரங்கள் படம் பார்த்தவர்கள் மௌனமாகவே கலைந்து சென்றார்கள். செட்டியாரோ "படம் அவ்வளவுதான். நம்ப கதை முடிஞ்சு போச்சு!" என்றார்.

நானும் நண்பர் ரஜினியும் பதை பதைக்கிறோம்... "இந்தப் பரீட்சார்த்த திரைக்கதை மக்களிடம் ஜெயிக்க வேண்டுமே" என்ற ஏக்கம் எனக்கு. தனது குணச்சித்திர நடிப்பிற்கு, இந்தப்படம் திருப்புமுனையாக அமைய வேணடுமே என்ற ஆதங்கம் ரஜினிக்கு.


"படத்திற்கு இன்னும் நன்றாய் பப்ளிசிட்டி பண்ணுங்கள் என்று செட்டியாரிடம் மன்றாடினோம். ஓடாத படத்திற்கும் பப்ளிசிட்டி தேவை இல்லை ஓடுகிற படத்திற்கும் பப்ளிசிட்டி தேவை இல்லை... அது தெரியுமா, உங்களுக்கு? என்றார் செட்டியார்.

அப்புறம் ஓர் அதிசயம் நிகழ்ந்தது. நான்காவது வாரத்திலிருந்து தியேட்டரில் திரண்டது கூட்டம். ஆரவாரம்... கைதட்டல், பிளாக்கில் டிக்கெட்... பாராட்டு மழை... நூறாவது நாள் வரை ஓயவில்லை.

(தொடரும்)

# கருவாச்சி காவியம்

## வைரமுத்து- 52



....வெடிச்சு விழுந்த பருத்திப் பஞ்சு காத்துல பறந்து போறது மாதிரி போறான் பய.

ஒரு சிங்கம் முயலத்துரத்துனா, சிங்கத்த விட வேகமா ஓடுமாம் முயலு.

ஏன்னா சிங்கம் துறத்துறது பசிக்காக; முயல் ஓடறது உசுருக்காக.

பசிக்காக ஓடறதவிட உசுருக்காக ஓடற ஓட்டம் வேகம் குடுக்குமா இல்லையா? கொண்ணவாயன் தப்பிச்சு ஓடியே போனான்.

ஆனாலும் கெடைக்காரன் ஒருத்தன் வீசி எறிஞ்ச வாங்கருவா கொண்ணவாயன் காதோரமா ஒரசிக்கிட்டே போய் விழுந்ததில எலும்பில்லாத அடிக்காது ஒரு ஓரமா அந்து போச்சு.

அவனுக்கு இடது காதுல இப்பவும் இருக்கிற ஒச்சம் காதறுத்த ஞாபகச் சின்னம்.

இப்படி எல்லா விடயத்திலயும் அரைக் கேணயனா இருந்த கொண்ணவாயன் ஒரே ஒரு விசயத்துல மட்டும் வெவராமா இருந்தான்.

தைப்பொங்க, தீபாவளிக்குச் சொந்த ஊருக்குப் போகலைன்னா கிறுக்கு முத்திப் போயிரும் அவனுக்கு.

பையில பலகாரம் வாங்குவான்; அப்பனுக்கு வேட்டித்துண்டு வாங்குவான்; அவனுக்கு யாரு வீட்லயாவது திங்கத் தர்ற அதிரசம், முறுக்கத் திங்காம ஒண்ணு சேப்பான்.

கடைசியா-

சுப்பஞ்செட்டியார் வீட்டுக்குப் போயிக் கைக்கு ஏழு மேனிக்குப் பதினலு வளவி வாங்குவான்.

அதை மட்டும் தனிப்பையில போட்டு முடிஞ்சு இடுப்புல சொருகிக்கிருவான்.



முடவன் கொம்புத் தேனுக்கு ஆசப்படலாமான்னு ஒரு பழமொழி சொல்லுவாக.

தப்பான பழமொழி அது.

முடவன் கொம்புத்தேன் எடுக்க முடியாதுன்னு சொல்லலாம்; ஆசப்படக் கூடாதுன்னு சொல்லலாமா?

ஆசப்படறதுல என்ன தப்பு? அவன் ஆசப்பட்டுட்டான்.

கொண்ணவாயனுக்கு ஒரு காதல் இருக்கு.

"யப்பா கட்டையா! நான் பெத்த மகனே! கேட்டியா...? மாசமா இருக்காளாம்டா ஒம் பழைய பொண்டாட்டி. அத்து அனாதிக் காட்ல விட்டும் கழுத்துல தாலி; வதுக்குல பிள்ள. தாலியக் கழத்தவும் மாட்டாளாம்; கருவக் கலைக்கவும் மாட்டாளாம்.

நாளைக்கிப் பிள்ளையைப் பெத்துக் கையில புடிச்சுட்டு வந்து இவதாண்டா ஒன் அப்பன்.. இதாண்டா ஒன் சொத்துன்னு வம்பு தும்பு பண்ணா என்ன பண்ணுவ?

வழி வழியா வந்த சொத்துக்கு வாரிசு வேணுமடா மகனே! இன்னொரு கல்யாணம் பண்ணிக்க.

நாளைக்கி வாராக செலம்பட்டி ஆளுக மாப்ளவீடு பாக்க. செவக்காட்டுப் புழுதியில உழுது வந்தவன் மாதிரி சிவீர்ன்னு வராம, குளிச்சு முடிச்சு வெள்ளையுஞ் சொள்ளையுமா வாடா மகனே!

சடையத்தேவர் வார்த்தைக்குச் சரி சொல்லிட்டான் கட்டையன்.

மாசமாயிருக்கிற ஒரு பொம்பளைக்குப் பத்து மாசமும் துன்பந்தானாம். அதுலயும் இந்த மொத அஞ்சு மாசமும் கடைசி ரெண்டு மாசமும் இருக்கே... வேணாமப்பா இந்தப் பொழப்புன்னு வெறுப்பே வந்திருமாம்.

கண்ட எடத்துல கால நீட்டிக் கட்டையச் சாய்க்கச் சொல்லுமாம். வயித்துல ஒண்ணும் இல்லேன்னாலும் வாந்தி வாந்தியா வருமாம்.

ஒரு சின்னப் பல்லு மொளைக்குது, அதுக்கே ஈறுவலிக்குதே... ஒடம்புக்குள்ள ஒரு உசுரே மொளைக்கிறபோது வலிக்காமப் போகுமா ஒரு பொம்பளைக்கு.


கருவாச்சி பாவம். எல்லாத்தையும் பல்லக் கடிச்சிக்கிட்டுப் பொறுத்துக்கிட்டா. ஆனா இந்தச் சோறு பொங்குற வாசனையும் தாளிக்கிற வாசனையும் கறிக்குழம்பு வாசனையும் வந்தாப் போதும் ஊர விட்டே ஓடிக் காட்டுல போயிக் குடியிருக்கலாமான்னு தோணுது அவளுக்கு. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ முகாம்களை அகற்றக் கோரிக்கை

## வடக்கு மாகாண புதிய ஆளுநரிடம் இலங்கை ஆசிரியர் சங்கம் முன்வைப்பு

**வடமாகாண பாடசாலைகளுக்கு அருகிலுள்ள இராணுவ முகாம்களை அகற்றுமாறு புதிய ஆளுநரான எச்.எம். ஜீ.எஸ்.பளிக்ஹக்காரவிடம் கோரிக்கை முன்வைத்துள்ளதாக ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**



இவ்விடயம் தொடர்பான அவர் மேலும் தெரிவிக்கையில், வட மாகாணத்திலுள்ள பாடசாலைகளுக்கு அருகில் பாடசாலைக்களுக்குச் செல்லும் வீதிகளில் இராணுவத்தினர் முகாமிட்டு தங்கியுள்ளனர். அத்துடன் பாடசாலை நடைபெறும். காலங்களில் ஆசிரியர்கள், மாணவர்களின் விபரங்கள் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் விபரங்கள் இராணுவத்தினரால் சேகரிக்கப்படுகின்றன.

இதனால் பல அசௌகரியங்களை பாடசாலை சமூகம் எதிர் நோக்கியுள்ளது.

குறிப்பாக யாழ்பல்கலைக்கழகத்திலும் இராணுவத் தலையீடு அதிகரித்து காணப்படுகின்றது. இதனால் மாணவர்கள் விரிவுரையாளர்களிடையே கற்றலுக்கான மனநிலை மழுக்கடிக்கபட்டுள்ளது.

இது தொடர்பில் புதிதாக பெறுப்பேற்றுள்ள ஆளுநர் கவனம் செலுத்தி வடக்கின் கல்வி இராணு வத்தினால் சீரழிக்கபடுவதனை தடுக்க வேண்டும் என அவர் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-5)

# பசில், விமல், நாமல் 830 இலட்சம் விமானப்படைக்கு செலுத்த வேண்டும்

(கொழும்பு)

கடந்த அரசாங்கத்தின் மிக முக்கிய அமைச்சர்களான பசில் ராஜபக்ஷ, விமல் வீரவன்ச, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் இலங்கை விமானப்படைக்கு 830 இலட்சம் ரூபா கடன் செலுத்த வேண் டியுள்ளதாகத் தெரிவிக்கபபடுகிறது.

கடந்த டிசெம்பர் மாதம் முதல் ஜனவரி மாதம் 8ஆம் திகதி வரையில உலங்குவானூர்திகள்மூலம்மேற்கொண்ட பயணங்களுக்காக இந்த பணம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான வானூர்திகள் மற்றும் உலங்கு வானூர்திகளைப் பயன்படுத்திக்கொள்ள கட்டணமொன்றை செலுத்த வேண்டியது அவசியமானது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் கடந்த டிசெம்பர் மாதம் முதல் ஜனவரி மாதம் 8ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் 39 தடவைகள் உலங்கு வானூர்திகளைப் பயன்படுத்தி பயணங்களை மேற்கொண்டுள்ளனர்.

எனினும், இந்தப் பயணங்களுக்கான எவ்வித கட்டணங்களையும் இதுவரையில் செலுத்தவில்லை எனவும் இதற்கான மொத்த நிலுவை 830 கோடி ரூபா எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதிகளவில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவே உலங்கு வானூர்திகளை பயன்படுத்திக் கொண்டுள்ளார்.

பெல் 412 மற்றும் எம்.ஐ 17 ரக உலங்கு வானூர்திகள் பயணங்களுக்காக பயன்படுத்தப்பட்டுள் ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல ராஜபக்ஷ மட்டும் 24 தடவைகள் உலங்கு வானூர்திகளைப் பயன்படுத்தி பயணங்களை மேற்கொண்டுள்ளனர்.

அம்பாந்தோட்டை, கன்னொருவ, மொனராகல, புத்தல, தங்காலை, கல்குடா, யாழ்ப்பாணம், மன்னார், அரலகங்கவில, வீரவில, அலுத்கம மற்றும் கந்தளாய் போன்ற இடங்களுக்கு பயணம் செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பயணங்களுக்காக பணம செலுத்துவதாக அறிவிக்கப்பட்ட போதிலும் இதுவரையில் கட்டணங்கள் செலுத்தப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

# பதவிக்கு பரிந்துரை செய்யுமாறு பலர் தொல்லை கொடுக்கின்றனர்

## சோபித தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

உயர் பதவிகளுக்காக பரிந்துரை செய்யுமாறு பலர் தொல்லை கொடுக்க ஆரம்பித்துள்ளதாக கோட்டே ஸ்ரீ நாக விஹாரையின் விஹாராதிபதி மாதுலுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

ஆளுநர், அமைச்சர், திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்களின் தலைவர் பதவிகளை பெற்றுக் கொள்ள பரிந்துரை செய்யுமாறு கோரி பலர் நாள்தோறும் தமது விஹாரை நோக்கிப் படையெடுத்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

விஹாரையை கூட்டி சுத்தம் செய்யும் நபர் கூட புதிய அரசாங்கத்தில் ஆளுநர் பதவியை பெற்றுத் தருமாறு கோரி வருவதாகவும் இதனால் தமக்கு பெரும் அசௌரியம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மனவருத்தத்துடன் தெரிவித்துள்ளார்.

ஊழல் மோசடிகளற்ற நல்லாட்சி ஒன்றை ஏற்படுத்த முயற்சித்து வருவதாகவும், தொழில் வாய்ப்பு வழங்கும் ஓர் முகவர் நிறுவனமாக தங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

# எட்டு வயது சிறுமிக்கு அரசின் வீரதீர விருது

ஆற்றில் தவறி விழுந்த பாட்டியைக் காப்பாற்றிய எட்டு வயது சிறுமி இந்தியாவின் மத்திய அரசின் வீரதீர விருதிற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

நாகாலாந்தின் தலைநகரமான கோஹிமாவில் உள்ள சிறுமி மோன்பெனி எஜீங். எட்டு வயதான இவர் வோகா கிராமத்தில் உள்ள அனுங்கா ஆற்றிற்கு தனது பாட்டியுடன் குளிக்கச் சென்றார். அப்போது ஆற்றில் கை கழுவிக் கொணடிருந்த பாட்டி திடீரென ஆற்றில் தவறி விழுந்தார். உடனே சாதுர்யமாக செயற்பட்ட அச்சிறுமி பாட்டியை பத்திரமாக மீட்டு கரைக்கு கொண்டு வந்தார். மேலும் அரு கிலுள்ள கிராமத்திற்குச் சென்று அங்கிருந்த மக்களிடம் நடந்ததைச் சொல்லி அழைத்து வந்து பாட் டியை மருத்துவமனையிலும் அனு மதித்தார் என்பது குறிப்பிடத் தக்கது. (இ-5)

# வேதசாட்சியான புனித செபஸ்ரீயார்

> இன்று கொண்டாடப்படும் புனித செபஸ்ரியாரின் பெரு விழாவை ஒட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

மங்களம் பாடுகின்ற மாகியம் பதியிலே சங்கமமாகினின்று பங்கின் பாதுகாவலராகவும் கிராமத்தின் பாதுகாவலராகவும் நோய் தீர்க்கும் மருத்துவனாகவும் திகழ்ந்து விருட்சமென வளர்ந்து ஒ ளி வீசிக் கொண்டிருக்கும் கத்தோலிக்க தாய்த்திருச்சபையின் புனித முத்துக்களில் ஒன்றாக திகழ்பவர் புனித செபஸ்ரியார்.

கி.பி.சுமார் 260 ஆம் ஆண்டளவில் பிரான்ஸ் நாட்டின் நர்போன் நகரில் வீரத்திருமகனாக பிறந்து இத்தாலியின் மிலான் தேசத்திலே கிறிஸ்தவ விழுமியங்கள் நிறைந்த இளைஞனாக வளர தொடங்கினார்.

இளம் வயதிலே துடிப்பு மிக்கவராயும் அறிவு ஞானம் பெற்றவராயும் விசேடமாக போர் நுட்பங்களின் சூட்சுமங்கள் தெரிந்தவராகவும் காணப்பட்டதால் உரோமப் பேரரசன் அவரை தனது படையில் சேர்த்துக் கொண்டான்.

இது வேத கலாபனைகள் நடந்து கொண்டிருந்த காலம். செபஸ்ரியாருக்கு சிறைக் கூடங்களுக்கு செல்லும் அதிகாரம் இருந்த படியால் சிறையிலே துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்ற கிறிஸ்தவர்களுக்கு ஆறுதல் கூற, அன்பைக் காட்ட சந்தர்ப்பம் மிகையாக கிடைத்தது. அதனைப் பயன்படுத்தி சிறைக்கூடங்களில்தன்விசுவாசப்பணியை ஆரம்பித்தார். சிறைக்கூடம் முழுவதும் கிறிஸ்தவர்கள் தான் கைதிகளாக இருந்தார்கள். பெண்கள், குழந்தைகள் என கிறிஸ்தவ குடும்ப கைதிகளும் துன்புறுத்தப்பட்டார்கள். அனைவரையும் அன்பாகப் பார்த்தார். உணவு ஊட்டி விட்டார். இறை விசுவாசத்திற்கு உரமிட்டார். கிறிஸ்துவில் நம்பிக்கை வையுங்கள் என்று முழக்கமிட்டார்.

கிறிஸ்துவின் பெயரால் நோய்களை குணமாக்கினார். சிறையில் இருந்த சோயேஸ் எனும் ஊமைப் பெண்ணுக்கு அவரின் வாயில் கிறிஸ்துவின் பெயரால் சிலுவை அடையாளம் வரைந்து அவளை பேசவும் வைத்தார்.

கடும் நோயால் அவதியுற்ற பேரரசன் கிரோமாசியுஸ் தன்நோய் குணமடைய செபஸ்ரியாரை கேட்டுக் கொள்ள செபஸ்ரியாரும் செபத்தின் மூலம் அவரை குணப்படுத்தினார். இதன் பொருட்டு இறை நம்பிக்கை கொண்ட பேரரசன் கிரோமாசியுஸ் ஞானஸ்ஞானம் பெற்று கத்தோலிக்கரானார்.

பேரரசன் தன் சிறையில் அடைப்பட்டு துன்பப்படும் கிறிஸ்தவர்களை உடனடியாக விடுதலை செய்து பகிரங்கமாக கிறிஸ்தவ வாழ்வை வாழ அனுமதி அளித்தார். மேலும் 1400 கிறிஸ்தவ அடிமைகளையும் விடுவித்து தானும் பதவியிறங்கினார்.

அப்போது தான் தீயவன் தியோக்கிலேசியனின் அதிகார ஆட்டம் ஆரம்பித்தது. படை வீரனான செபஸ்ரியாரின் சாதுர்யத்தையும் வீரத்தையும் நற்பண்புகளையும் கண்ட தியோக்கிலேசியன் தன் சேனைத் தளபதியாகவும் தன் விசேட மெய்ப் பாதுகாவலனாகவும் சேர்த்துக்கொண்டான். கி.பி.சுமார் 283 வேத கலாபனை பற்றி எரிந்தது. கொதிக்கும் எண்ணெய்க் கிடங்குகள் கிறிஸ்தவர்களுக்காய் காத்துக்கிடந்தது. அக்கினிச் சுவாலைகள் இரவு-பகலாய் ஓய்வில்லாமல் எரிந்தபடியும் கிறிஸ்தவர்களை விழுங்கிய படியும் கிடந்தது.



இவ்வாறான கொடுமைகளை தட்டிக்கேட்டு எங்களை காப்பாற்ற செபஸ்ரியாரே வேண்டும் என கிறிஸ்தவர்கள் திருச்சபைத்தலைவர் காயுஸ் பாப்புவிடம் இறைஞ்சினர். செபஸ்ரியாரும் அதற்கு இணங்கி அப் புனிதப்பணிக்கு தன்னை அர்ப்பணிக்க முன்வந்தார். ஆனால் பேரரசின் தளபதியாக இருந்து கொண்டே கிறிஸ்தவர்களை காப்பாற்றுமாறு [illegible] பாப்புவும் இன்னும் சில குருக்களும் அரண்மனை காவலன் ஒருவனின் வீட்டில் மறைவாக தங்கினர். அவர்களை தேடிக் கொலை செய்யுமாறு தியோக்கிலேசியன் உத்தரவு போட்டான். ஈற்றில் தன் மெய்ப் பாதுகாவலன் செபஸ்ரியார் ஒரு கிறிஸ்தவன் என்றும் எல்லோரின் மனமாற்றத்திற்கும் காரணம் அவர் தான் என்றும் அறிந்த தீயோக்கிலேசியன் அவரது பதவியை பறித்தான். செபஸ்ரியாரின் நல்ல குணங்களையும் அவரின் வீரத்தையும் கருதிய பேரரசன் உனக்கு மன்னிப்பும் மீண்டும் பதவியும் பெருங்கோடி செல்வமும் தருகிறேன் அந்த கிறிஸ்துவை மறந்து விட்டேன் என்று ஒரு வார்த்தை சொல் என்று கேட்டான். ஆனால்செபஸ்தியார்மறுத்துவிட்டார்.

கடும் கோபம் கொண்ட தியோகிளேசியன் இந்த கிறிஸ்து பிரியனை சாகும்வரை அடித்து கொல்லுமாறு கட்டளை பிறப்பித்தான்.

அதன்படியே சாகும் வரை அடித்தனர். இறந்து விட்டதாக எண்ணி ஒரு புதருக்குள் வீசிவிட்டு படையினர் சென்றனர். கிறிஸ்து அடியானை அடக்கம் செய்ய திருட்டுத்தனமாக இரவுவேளை வந்த ரேனாள் எனும் பெண் அவர் குற்றுயிராய் கிடப்பதை கண்டு தன் வீட்டுக்கு அழைத்து சென்று குணமாக்கினாள். கிறிஸ்தவர்கள் அவரை மன்னன் கண்ணில் படாமல் மறைத்து வைத்திருந்தும் அவர் கேட்காமல் வெளியில் வந்து மன்னன் செல்லும் வழியில் நின்று மமதை கொண்ட தியோக்கிளேசியனே உன் மகுடம் சரியப்போகிறது, அகந்தை அழியப் போகிறது என்று சத்தமிட தன்னால் சாகும்வரை அடிபட்ட செபஸ்ரியார் தான் என்பதை அடையாளம் கண்ட பேரரசன் அவரை பிடித்து கள்ளி மரத்தில் கட்டச் சொல்லி உத்தரவிட்டான்.

கொடுங்கோலனின் கோபம் தலைக்கேற அம்பினை எடுத்து ஒவ்வொன்றாக செபஸ்ரியாரின் ஒவ்வொரு உறுப்புக்களை நோக்கி எய்தான். ஒவ்வொன்றுக்கும் கிறிஸ்துவுக்காக கிறிஸ்துவுக்காக என்று சொல்லி செபஸ்ரியார் துடிப்பதைப் பார்த்து ரசித்தான். ஆறு அம்புகளை எய்தான் செபஸ்ரியார் துடித்தார் சாகவில்லை.


தியோக்கிளேசியன் செபஸ்ரியாரைப்பார்த்து கடைசியாக கேட்கின்றேன் கெஞ்சிக் கேட்கிறேன் அந்தக் கயவன் கிறிஸ்துவை மறந்துவிட்டேன் என ஒரு வார்த்தை சொல் உன்னை உரோமைப் பேரசின் அரசானாக்குகிறேன் என்றான். வலியை மறந்த செபஸ்ரியார் மெதுவாகச்சிரித்தபடி துண்டுகளாக என்னை வெட்டி கழுகளுக்கு இரையிட்டாலும் அந்தக் கோமகன் யேசுவையே விசுவசிப்பேன் என்று சொன்னதும் மன்னன் ஏழாவது அம்மை எய்தான் அது செபஸ்ரியாரின் நெற்றிப் பொட்டைப் பதம் பார்க்க எல்லாம் கிறிஸ்துவுக்காக என்று கூறி உயிர் விட்டார்.

அன்றிலிருந்து ஒவ்வொரு ஜனவரி 20 ஆம் திகதியும் திருச்சபையானது புனிதருக்கு விழா எடுத்து மகிமைப்படுத்தி வருகிறது. மேலும் சில ஆலயங்களில் புனிதரின் பிறந்த நாளான ஜூலை மாதம் 8 ஆம் திகதியிலும் புனிதருக்கு விழா எடுக்கப்படுகிறது.

அ.நிறோஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் அமைச்சர்கள் பலர் 100 நாள் திட்டத்திற்கு ஆதரவு



**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் புதிய அரசாங்கத்தின் 100 நாட்கள் வேலைத் திட்டத்துக்கு ஆதரவளிக்க எதிரணியிலுள்ள முன்னாள் அமைச்சர்கள் மற்றும் பாராளு மன்ற உறுப்பினர்கள் பலரும் முன்வந்துள்ளனர். குறிப்பாக கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபாலவிற்கு எதிராகச் செயற்பட்ட பலரும் இவ்வாறு புதிய அரசுடன் கைகோர்த்துச் செயற்பட விருப்பம் தெரிவித்துள்ளனர்.**

அதில் கட்சிகள் பலவற்றினதும் தலைவர்கள் உள்ளடங்குகின்றனர்.

முன்னாள் அமைச்சரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான ஆறுமுகன் தொண்டமான், முன்னாள் அமைச்சரும், ஈ.பி. டி.பி. கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா, தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ச, முன் னாள அமைச்சர் தினேஷ் குணவர்தன, முன்னாள் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ உட்பட பல தலைவர்களும் தமது விருப்பத்தை வெளியிட்டுள்ளனர்.

அரசியமைப்பில் மாற்றம், தேர்தல் சீர்திருத்தங்கள், வாழ்க்கைச் செலவு குறைப்பு, எண்ணெய் விலைகளின் குறைப்பு, தோட்டப்புற மக்களுககு வீட்டு வசதகள், வடபகுதிக்கு பல வேறு திட்டங்கள் போன்ற பல்வேறு நல்ல விடயங்கள் இந்த 100 நாட்கள் வேலைத்திட்டத்தில் உள் வாங்கப்பட்டுள்ளதால அதற்கு நாங்கள ஆதரவளிக்கவுள்ளோம் என அவர்கள் தெரிவித்துள்ளனர். (இ-5)

## பிரதம நீதியரசர் பதவி விலக வேண்டும்

நீதிமன்றம் மற்றும் தொழிற்றுறை கௌரவத்தை பாதுகாப்பதற்காக பதவியில் இருந்து விலகுமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸிடம் கோரியுள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய சட்டத்தரணிகள் சங்க தலைவர் உபுல் ஜயசூரிய இதனை தெரிவித்தார்.

தமது கோரிக்கைகள் அடங்கிய தகவல்களை பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம் நேற்றுமுன்தினம் முற்பகல் கையளித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

பிரதம நீதியரசர் பதவி விலக வேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்று சபை நேற்று முன்தினம் ஏகமனதாக தீர்மானித்ததாக சங்கத்தின் தலைவர் உபுல் ஜயசூரிய மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 250-260 | 270 | 240 |
| உருளைக்கிழங்கு | 60-80 | 100 | 80 |
| பச்சைமிளகாய் | 650 | 800 | 800 |
| தக்காளி | 180 | 200 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 |
| கோவா | 120 | 150 | 150 |
| கரட் | 160 | 200 | 180 |
| பூசணி | 35 | 60 | 50 |
| புடோல் | 100 | 200 | 120 |
| வாழைக்காய் | 80-90 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 50-100 | 120 | 90 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 80 |
| பாகற்காய் | 300 | 350 | 280 |
| வெண்டிக்காய் | 140 | 220 | 140 |
| கருணைக் கிழங்கு | — | 60 | 60 |
| பயற்றங்காய் | 180-200 | 280 | 220 |
| லீக்ஸ் | 200 | 400 | 300 |
| பீற்றூட் | — | 220 | — |
| கறிமிளகாய் | 250 | 400 | 400 |
| முருங்கைக்காய் | — | 800 | — |
| போஞ்சி | — | 350 | — |
| கத்தரிதம்புள்ள | — | 250 | — |
| கீரை - 1 பிடி | 15 | 20 | 30 |
| தேசிக்காய் | 50-60 | 100 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 40-50 | 50 | 40 |
| இராசவள்ளி | 110-120 | 140 | 120 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 257

டொறின் மன்மதநாயகம்




லக்கா கிக்கா




சரவணன் மீனாட்சி





நிவே நிவேதன்




தர்சி தர்சினி




சிவம் சக்தி




**நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவை தோற்கடித்தது யார்?

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் ஈட்டப்பட்ட வெற்றிக்கு பலரும் உரிமை கோரி வருவதைப்போலவே, நடந்துமுடிந்த ஜனாதிபதித் தேர்தலில், புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வெற்றிக்கும் தாமே மூல காரணமென்று பலரும் உரிமை கோரி வருகின்றனர். தமிழர்களும் முஸ்லிம்களும் இந்தத் தேர்தலில் தீர்மானிக்கும் சக்தியாக மாறியிருந்தனர் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

இங்கு தமிழர்கள் என்று கூறுவது, வடக்கு, கிழக்கு, மலையகம், கொழும்பு உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளிலுமுள்ள தமிழர்களையே சுட்டி நிற்கிறது. முஸ்லிம்கள் எனும் போது, அதுவும் கிழக்கை மட்டுப்படுத்தாமல், ஒட்டுமொத்த இலங்கையிலுள்ள முஸ்லிம்களையுமே சுட்டி நிற்கிறது. இந்தத் தேர்தலில் தாம் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளாலேயே தோல்வி கண்டதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ் மெதமுலானவில் கூறியிருக்கிறார்.

அதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிங்கள வாக்குகளால் வெற்றி பெறவில்லை என்றும் தமிழ், முஸ்லிம் வாக்குகளாலேயே வெற்றி பெற்றார் என்றும் கூறப்படுவதை ஜாதிக ஹெல உறுமய ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு 9 இலட்சம் சிங்கள பௌத்த வாக்குகளை தாம் பெற்றுக்கொடுத்துள்ளதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறியிருக்கிறார்.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ, தமிழ் வாக்குகளாலேயே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றதாக தெரிவித்துள்ளது. இன்னொரு பக்கத்தில், முஸ்லிம்கள் தரப்பிலோ 14 இலட்சம் முஸ்லிம் வாக்காளர்களில் 90 சதவீதமானோர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்தனர் என்று கூறப்படுகிறது.

மலையகக் கட்சிகள் ஏதும், அங்குள்ள தமிழர்களே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வெற்றியை தீர்மானித்தது என்று கூறியதாக இன்னமும் அறியவில்லை. ஆனால், அவர்களும் அதற்கு உரிமை கோரககூடியவர்களே என்பதை நுவரெலிய - மஸ்கெலிய தொகுதியில், 120,000 வாக்குகள வித்தியாசத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பெற்ற வெற்றியே உறுதிப்படுத்துகிறது. அவ்வாறாயின், மைத்திரிபாலவின் வெற்றியையும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தோல்வியையும் தீர்மானித்தது யார் என்ற கேள்வி எழுகிறது.

எல்லாத் தரப்பினரதும் ஒன்றிணைவே இந்த மிகப்பெரிய அரசியல் புரட்சிக்கான அடித்தளம் என்பதை எல்லோரும் மனதில் நிறுத்தவேண்டும். இது இலங்கைத்தீவுக்கு வெளிப்படையாக ஒரு பாடத்தை கற்றுக் கொடுத்திருக்கிறது. எல்லா இனத்தவர்களும் இணைந்து விட்டுக்கொடுப்புடன் செயற்பட்டால், அசைக்க முடியாதெனக் கருதப்படும் எதையும் அசைக்கவும் முடியும, சாதிக்கவும் முடியும் என்ற உண்மையை இது உணர்த்தியிருக்கிறது.

அதேவேளை, தர்க்க ரீதியாக தேர்தல் முடிவுகளை அலசுவதானால், சில சரி, பிழைகளை சுட்டிக்காட்டியேயாக வேண்டியது அவசியம். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை விட, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூடுதலாக பெற்றது சுமார் 449,072 வாக்குகளே. இந்த வாக்குகளுக்கே எல்லாத் தரப்பினரும் உரிமை கோர போட்டியிடுகின்றனர். ஆனால், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தத் தேர்தலில் சிங்களவர்கள் அதிகம் வாழும் 90 இற்கும் அதிகமான தொகுதிகளை கைப்பற்றியிருக்கிறார் என்பது முக்கிய விடயம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பொறுத்தவரையில், தமது சொந்த மாவட்டமான பொலன்னறுவை மாவட்டம் உள்ளிட்டவையில் வெற்றி பெற்ற எல்லா இடங்களுமே சிறுபான்மையினர் முழுமையாகவோ, கணிசமாகவோ வசிக்கின்ற பகுதிகள் என்பது தெளிவான உண்மை. அவர் வெற்றி பெற்ற 12 மாவட்டங்களில் தமிழ், முஸ்லிம்கள் அதிகளவில் வசிக்கும் வடக்கு, கிழக்கு மாவட்டங்களும் கண்டி, நுவரெலியா, புத்தளம் உள்ளிட்ட மாவட்டங்களும் அடங்கியுள்ளன. பொலன்னறுவையில் கூட முஸ்லிம்கள் கணிசமாக வசிக்கின்றனர்.

எனவே, சிங்கள மக்களின் வாக்குகளினால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றார் என்று ஒருபோதும் கூறமுடியாது. அவை மட்டும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வெற்றியை உறுதிப்படுத்தியிருக்கவில்லை. சிங்கள மக்களின் வாக்குகளால் மட்டும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றார் என்பதை தர்க்க ரீதியாக ஒருபோதும் நிரூபிக்க முடியாது. ஏனென்றால், தமிழ், முஸ்லிம் மக்களின் செல்வாக்குக்கு அப்பாற்பட்ட- பொலன்னறுவை தவிர்ந்த வேறெந்த மாவட்டத்திலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வெற்றி உறுதிப்படுத்தப்படவில்லை. எனவே, அவர் சிங்கள வாக்காளர்களால் மட்டும் தெரிவானவர் என்று ஒருபோதும் எந்தவொரு தரப்பினராலும் வாதிட முடியாது.

அதேவேளை, கிழக்கில் அம்பாறையிலும் மட்டக்களப்பிலும் கண்டி, காலி, களுத்துறை, கேகாலை, கொழும்பு உள்ளிட்ட மாவட்டங்களிலும் முஸ்லிம்களின் வாக்குகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வெற்றிக்கு கணிசமாக உதவியுள்ளன. முஸ்லிம்களின் வாக்குகள் செறிவாகவுள்ள கல்முனை, சம்மாந்துறை, மூதூர், மன்னார் உள்ளிட்ட தொகுதிகளில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கிட்டத்தட்ட 85 தொடக்கம் 90 சதவீத வாக்குகள் கிடைத்திருந்தன. எனவே, இந்தத் தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வெற்றிக்கு முஸ்லிம்களின் பங்கை ஒருபோதும் குறைத்து மதிப்பிடமுடியாது.

முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெற்ற சிங்கள பௌத்த அடிப்படைவாதிகளின் வன்முறைகள், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான உணர்வலைகளை ஏற்படுத்தியிருந்தன. அது முஸ்லிம் வாக்காளர்களை அதிகளவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பக்கம் சாய்வதற்கு முக்கிய காரணமாகியது. எனினும், ஒட்டுமொத்தளவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வெற்றிக்கு முஸ்லிம்கள் எந்தளவுக்கு பங்களித்துள்ளனர் என்று துல்லியமாக கணிப்பிடுவதில் சிக்கலுள்ளது. காரணம், அவர்கள் நாட்டில் பரந்து வாழும் ஒரு சமூகமாக இருப்பதால், பங்களிப்பை துல்லியமாக அளவிடுவது நடைமுறைச் சாத்தியமற்றது.

கிழக்கிலும்கூட, முஸ்லிம்கள் சில இடங்களில் மாத்திரம் செறிவாக வாழ்கின்ற நிலையில், தமிழர்களும் இணைந்தே வாழ்வதால், அதனை முற்றிலும் சரியானதொன்றாக எடுக்கமுடியாது. ஆனால், வடக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் பெரும்பான்மையாக தமிழர்களே உள்ள நிலையில், இந்தத் தேர்தல்களில் அவர்களின் பங்களிப்பை தெளிவாகவே அடையாளப்படுத்தக்கூடிய வாய்ப்புள்ளது.

வடமாகாணத்திலுள்ள தமிழர்கள், இந்தத் தேர்தலில் மிகத்தெளிவான ஆணையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அளித்துள்ளனர். வடக்கில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த் ராஜபக்ஷ எதிர்ப்பு அலை நிச்சயம் வீசுமென்று எதிர்பார்த்தவர்கள்கூட, அது இந்தளவுக்கு உச்சக்கட்டத்திலிருக்கும் என்பதை கணித்திருக்கவில்லை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வெற்றி, சர்வதேச ஊடகங்களுக்கு எந்தளவுக்கு நம்பமுடியாதொரு செய்தியாக உள்ளதோ, அதுபோலவே வடக்கில் அவருக்கு கிடைத்த வாக்குகளும் நம்பமுடியாத ஆச்சரியமே. வடமாகாணத்தை பொறுத்தவரையில், ஜனாதிபதி தேர்தல்களில் ஆர்வம் காட்டும் போக்கு ஒருபோதும் இருந்ததேயில்லை. ஓர் அந்நியத் தன்மையுடனேயே வடக்கிலுள்ள தமிழர்கள் வாக்களித்துவந்தனர். அதுவும் மிகக் குறைந்தளவானோரே தேர்தலில் பங்களிப்பது வழக்கம்.

வடக்கில் 1982 இல் 54 சதவீதம், 1988 இல் 18 சதவீதம், 1994 இல், 12.5 சதவீதம், 1999இல், 25 சதவீதம், 2005இல் 13 சதவீதம், 2010இல் 33 சதவீதம் என்று ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு இடம்பெற்றிருந்தது. ஆனால், அந்த நிலையை இந்தமுறை ஜனாதிபதித் தேர்தல் முற்றாகவே மாற்றியமைத்திருக்கிறது. இந்தத் தேர்தலில் 69 சதவீதத்துக்கும் அதிகமானோர் வடக்கில் வாக்களித்திருக்கின்றனர் என்பது இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் முக்கியமானதொரு விடயம்.



கடந்த 2013 ஆம் ஆண்டு நடந்த வடமாகாணசபைத் தேர்தலில்கூட இந்தளவுக்கு வாக்களிப்பு இடம்பெற்றிருக்கவில்லை என்பது ஆச்சரியத்துக்குரிய விடயம். அதாவது, மாகாணசபைத் தேர்தலை விடவும், முக்கியமானதாக வடக்கிலுள்ள மக்களால் ஜனாதிபதி தேர்தல் அணுகப்பட்டுள்ளது. தீவிர தமிழ்த் தேசியம் பேசுவோரால், அவ்வளவாக ஜீரணிக்க முடியாத விடயமாக இருக்கிறது. அதனாலேயே, வடமாகாணசபைத் தேர்தல் வாக்களிப்புடன் இதனை எவரும் ஒப்பிட முன்வரவில்லை. வடமாகாணசபைத் தேர்தலில் 67.5 சதவீதமான வாக்குகளே பதிவாகியிருந்தன. ஆனால், இந்த ஜனாதிபதித் தேர்தலில் கிட்டத்தட்ட ஒன்றரை சதவீத வாக்குகள் அதிகமாக அளிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, வடமாகாணசபைத் தேர்தலில் 485,813 வாக்குகள் பதிவு செய்யப்பட்ட அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் 534,430 வாக்குகள் வடமாகாணத்தில் அளிக்கப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட 50 ஆயிரம் பேர் வடமாகாணசபைத் தேர்தலை விட அதிகமாக வாக்களித்துள்ளனர். இதனை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்ப்பு அலை என்றும் கூறலாம். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவான அலை என்றும் கூறலாம். தேசிய அரசியல் பங்களிக்கும் வடக்கு மக்களின் ஆர்வம் என்றும் கூறலாம். அதனை அவரவர் விருப்பத்துக்குரிய தெரிவாக விட்டுவிடுகிறோம்.

நடுநிலையாக நோக்கினால், இந்த மூன்றினதும் கலவையே வடக்கின் வாக்களிப்பு வீத உயர்வுக்கு காரணம் என்பதை மறுக்க முடியாது. இதனை விட் இன்னொரு ஆச்சரியமான விடயமும் உள்ளது. வடமாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவளித்தவர்களை விடவும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளித்தவர்களின் எண்ணிக்கை அதிகமாகும்.

வடமாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 353,595 வாக்குகள் (78.48 சதவீதம்) கிடைத்திருந்தன. ஆனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வடமாகாணத்தில் கிடைத்த வாக்குகளின் எண்ணிக்கை 394,991 (76.5 சதவீதம்) ஆகும். இதற்கு வடமாகாணசபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட்ட அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் என்பன இம்முறை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளித்தமையும் ஒரு காரணம்.

முஸ்லிம் வாக்குகளை கழித்துப் பார்த்தால், வடமாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைத்த வாக்குகளுக்கு சற்றுக் குறைவாகவே, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வடக்கிலுள்ள தமிழர்கள் ஆதரவளித்துள்ளனர் என்பதை உணரலாம். அதாவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இணையாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களிக்க வடக்கிலுள்ள தமிழர்கள் முன்வந்தமையை, தெற்கிலுள்ள சிங்கள பௌத்த தேசியவாத சக்திகள் சாதகமானதொரு விடயமாகவே அணுக வேண்டும். ஏனென்றால், வடக்கிலுள்ள தமிழர்களை பிரிவினைவாதிகளாக சித்திரித்து, இனவாதம் பேசுவது அவர்களின் வழக்கம்.

இந்தத் தேர்தலில், அத்தகைய மோசமான கருத்துக்கள் அப்பட்டமாகவே பரப்பப்பட்டன. ஆனால், தேசிய அரசியலின் மீதுள்ள தமது நாட்டத்தை வடக்கிலுள்ள மக்களும் வெளிப்படுத்தியுள்ளனர். தேசிய அரசியலில் தமக்குள்ள பங்கையும் தாம் எந்தளவுக்கு தீர்மானிக்கும் சக்தியாக உள்ளனர் என்பதையும் அவர்கள் தெளிவான ஆணையின் மூலம் புலப்படுத்தியிருக்கிறார்கள்.

இது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்துக்கு தட்டிக்கழிக்க முடியாதொரு பொறுப்பாக மாறியிருக்கிறது. கடந்த காலங்களில், வடக்கு மக்கள் தமக்கு வாக்களிக்கவில்லை என்று கூறிக்கூறியே காலங்கடத்திவந்த ஆட்சியாளர்களே இருந்தனர். ஆனால், இப்போது வடக்கு மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அவர்களால் ஆதரிக்கப்பட்டவர் தான் ஆட்சியாளராக மாறியிருக்கிறார்.

இவ்வகையில், வடக்கிலுள்ள மக்களின் மீது, அவர்களின் பிரச்சினைகளின் மீது தனியான கவனம் செலுத்தப்பட வேண்டியது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தின் பொறுப்பாகும். இதனை ஒருபோதும் அவராலோ, அவரது அரசாங்கத்தினாலோ தட்டிக்கழிக்க முடியாது. வடக்கிலுள்ள மக்கள் தனிநாட்டை கோரவில்லை. அவ்வாறு கோரியிருந்தால், அவர்கள் இந்தளவுக்கு வாக்களிக்க முன்வந்திருக்க மாட்டார்கள். அவர்கள் நிலைமையை புரிந்துள்ளார்கள். உணர்ந்துளளார்கள். அதனால், யதார்த்தமாக தம்மை மாற்றிக்கொள்ளத் துணிந்திருக்கிறார்கள்.

அதற்காக, வடக்கில் தமிழ்த் தேசியவாதம் செத்துவிட்டதாகவோ, வலுவிழந்துவிட்டதாகவோ அர்த்தம் கொள்ள முடியாது. தமிழ்த தேசியவாதம் தமிழரின் தனித்தன்மையை உறுதிப்படுத்துவதற்கானதே தவிர, அது ஏனைய இனத்தவர்களை அச்சுறுத்துவதற்கானது அல்ல என்ற உண்மையை இந்தத் தேர்தல் உணர்த்தியிருக்கிறது. இது நல்லிணக்க முயற்சிகளில் முக்கியமான மைல்கல் என்றும் கூறலாம்.

சர்வதேச அளவில், இந்த வாக்களிப்பு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்துக்கு கூடுதல் அழுத்தங்களை கொடுக்கும். ஏனென்றால், தமிழ் மக்கள் தேசிய அரசியலில் தீர்மானிக்கும் சக்தியாக மாறியுள்ள நிலையில், அவர்களை அரவணைத்துச் செல்ல தெற்கிலுள்ள சக்திகள் தயாராக வேண்டும் என்ற அழுத்தங்களை இலங்கை அரசு எதிர்கொள்ளும். அத்தகைய அழுத்தங்களை எதிர்கொள்வதற்கு முன்னதாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கமே, தமிழர்களுடன் இணக்கப்பாட்டை உருவாக்கிக் கொள்ள முனைவது புத்திசாலித்தனமானது. அது நடக்குமா? நடப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பக்கத்திலுள்ள கடும் போக்காளர்கள் அனுமதிப்பார்களா?

-கே. சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தம்பியின் தோல்வியால் நாடு தப்பியது;அண்ணன்

## சமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

**தனது தம்பி மகிந்தவின் தோல்வியின் பின்னரே நாட்டில் இன்னும் கடவுள்கள் இருக்கின்றனர் என்பதை புரிந்து கொண்டதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபஷக்வின் சகோதரரும் சபாநாயகருமான சமல் ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார். ஸ்ரீஜயவர்தனபுரவில் ஊள்ள தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் கூடிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், எனது தம்பி அல்ல யார் செய்தாலும் தவறு தவறுதான். ஜனாதிபதி இம்முறை தேர்தலில் வெற்றி பெற்றிருந்தால் நாட்டிற்கு என்ன நடந்திருக்கும் என்பதை எண்ணிப்பார்க்க முடியாது. நாட்டில் இன்னும் கடவுள்களின் பார்வையும் அனுக்கிரமும் இருக்கின்றது. இதன் காரணமாகவே எனது தம்பி தோல்வியடைந்தார். ஜனாதிபதி தவறு செய்யும் போது அதனை சுட்டிக்காட்ட உங்களில் எவருக்கும் முதுகெலும்பு இருக்கவில்லை. கொடுப்பதை உண்டு விட்டு நடப்பதை வேடிக்கை பார்ப்பதை மாத்திரமே நீங்கள் செய்தீர்கள். மைத்திரி இப்படியான முதுகெலும்பு இருக்கும் மனிதன் என்று நாங்கள் யாரும் எண்ணியிருக்கவில்லை. தவறியேனும் மைத்திரி தோற்றுப் போயிருந்தால் தற்போது அவர் பொன்சேகாவை போல் சிறையில் இருந்திருப்பார். மைத்திரிக்கு மாத்திரமல்ல சந்திரிகாவுக்கும் வேலை கொடுக்க இவர்கள் திட்டமிட்டிருந்தனர். எனினும் நாட்டின் அதிர்ஷ்டம் அந்த திட்டம் நிறைவேறவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# சமல் ராஜபக்ஷவின் பதவியும் பறிபோகுமா?



இலங்கை அரசாங்கத்தின் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவை அப்பதவியில் இருந்து நீக்குவது தொடர்பில் புதிய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

புதிய சபாநாயகர் ஒருவரை நியமிப்பது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசாங்கம் ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால தலைமையில் நடந்த கூட்டம் ஒன்றிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

100 நாட்கள் வேலைத்திட்டம் முடிவில் நாடாளுமன்றம் கலைக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால ஏற்கனவே அறிவித்துள்ளார். இந் நிலையில் தனக்கு நம்பிக்கையான ஓருவரை நியமிக்க ஆர்வம கொணடிருப்பதாக கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த புதன்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், சபாநாயகர் சமல் ராஜபக்ஷவும் சந்தித்துப் பேசினர் என்றும் தெரிய வருகின்றது.

எது எவ்வாறாயினும் நாளை 20 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடவுள்ளது. இதன்போது புதிய சபாநாயகர் தொர்பான தகவல்கள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-5)

# சட்டத்தை மீறியோருக்கு எதிராக வழக்கு தொடுக்கப்படும்-மஹிந்த



தேர்தல் சட்டங்களை மீறிச் செயற்பட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட உள்ளதாக தேர்தலகள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல் சட்டங்ளை மீறிச் செயற்பட்ட நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலின் போது சட்டங்களை மீறிச் செயற்பட்ட மற்றும் வன்முறைகளில் ஈடுபட்ட அனைத்து நபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் எதிராக நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களும், அரசியல் கட்சிகளும் தேர்தல் ஆணையாளரிடம் கோரியிருந்தன.

இந்தக் கோரிக்கைகளுக்கு அமைவாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

தேர்தல் காலத்தில் செய்யப்பட்ட முறைப்பாடுகளை ஆராயும் பணிகள் முதலில் மேற்கொள்ளப்பட உள்ளது.

முறைப்பாடு செய்த பிரதிநிதிகள் நிறுவனங்களை அழைத்து பேச்சுவாரத்தை நடத்த தேர்தல்கள் ஆணையாளர் திட்டமிட்டுள்ளார். (இ-5)

# ஜனாதிபதி பொதுத் தேர்தலின் போது பொதுவானவராகவே செயற்படுவார்

எதிர்வரும் பொதுத்தேர்தல் பிரசாரங்களின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமது சொந்தக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரசாரங்களில் பங்கேற்கமாட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய அரசாங்கத்தின் 100 நாடகள்வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் அதிக அக்கறை கொண்டுள்ள அவர் பொதுத்தேர்தலின் போதும் தேசிய அரசாங்கத்தின் தலைவர் என்ற வகையில் செயற்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலின் போது தமது வெற்றிக்காக உழைத்த ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜாதிக ஹெல உறுமய என்பன வற்றின் நோக்கங்களுக்கு பிரச்சினை ஏற்படாதவாறு தமது செயற்பாடுகள் அமைய வேண்டும் என்று மைத்திரிபால கருதுகிறார்.

இந்தநிலையில் பொதுத்தேர்தல் பிரசாரங்களின் போது தாம் கட்சிக்காக தனிப்பட்ட ரீதியில் செயற்பட்டால் அது கட்சிகளுக்கிடையிலான நல்லிணக்கத்தை பாதிக்கும் என்று அவர் கருதுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# இன்று ஒரு தகவல்

## கொடுத்ததை வாங்கக் கூடாது

புதுக்கோட்டைக்குப் பக்கத்தில் மிதிலைப்பட்டி என்று ஒரு ஊர் இருந்தது.

அங்கே அழகிய சிற்றம்பலப் கவிராயர் என்ற ஒருவர் இருந்தார்.

ஒருநாள் அவர் கல்யாண வைபவம் ஒன்றில் கலந்து கொள்வதற்காக இன்னொரு ஊருக்குச் சென்றார்.

கல்யாணம் முடிந்ததும் ஊருக்குத் திரும்ப ஆயத்தமானார். ஒரு இரவு முழுவதும் பயணம் செய்தால் தான் இவரது ஊருக்கு போகலாம்.

ஒரு வண்டியை வாடகைக்குப் பிடித்தார். வண்டிக்காரனைப் பார்த்து " எவ்வளவு வாடகை?" என்று கேட்டார்.

"மூன்று ரூபாய் வாடகை கொடுங்கள்! ஊருக்குப் போய்ச்சேரும் பொழுது விடிந்துவிடும். அதனால் நாளைக்கு காலையில் சாப்பாடு கொடுங்கள் அதுபோதும்" என்றான்.

சரி என்று ஒத்துக்கொண்டார்.

வண்டியும் புறப்பட்டது. கவிராயர் அதில் நன்றாக நீட்டி நிமிர்ந்து படுத்துக் கொண்டார். நல்ல நிலா வெளிச்சம்.

வண்டிக்காரனும் ஆனந்தமாக தெம்மாங்கு பாடிக்கொண்டே போனான்.

கவிராயரும் சுவாரசியமாக அதைக் கேட்டுக் கொண்டே போகிறார்.

வண்டிக்காரன் பாட்டை நிறுத்திவிட்டு மெதுவாக கவிராயரிடம் பேச்சுக் கொடுத்தான்.

"நீங்கள் யார்? உங்களைப்பற்றி கொஞ்சம் சொன்னால் நான் கேட்டுக் கொண்டே வருவேன்!" என்றான்.

கவிராயரும் தனது கதையை சொல்ல ஆரம்பித்தார்.

"நான் இருக்கிறது மிதிலைப்பட்டி தான். எங்கள் முன்னோர்களெல்லாம் பெரிய வித்துவான்கள்.

ஆரம்பத்தில் அவர்கள் சேலத்துக்குப் பக்கத்தில் ஒரு ஊரில் இருந்தார்கள்.

அந்த காலத்தில் இந்தப் பக்கத்தில் வெங்களப்ப நாயக்கர் என்ற ஜமீன்தார் இருந்தார்.

அவர்தான் மிதிலைப்பட்டி கிராமத்தை எங்களிடம் கொடுத்தார். இப்பொழுது எங்களுக்கு ஜீவாதாரமாக இருப்பது அதுதான். இன்றைக்கு கஷ்டமில்லாமல் இருக்கிறோம் என்றால் அதற்குக் காரணம் வெங்களப்ப நாயக்கர் தான் என்று சொல்லிக் கொண்டு வந்தார்.

பொழுது விடிந்தது. மிதிலைப்பட்டி வந்து சேர்ந்தது கவிராயர் இறங்கினார்.

வீட்டு வேலைக்காரனைக் கூப்பிட்டு " வண்டிக்காரனுக்குப் பழையது கொண்டுவந்து கொடு" என்றார்.

அப்பொழுது வண்டிக்காரன் "ஐயா எனக்கு சாப்பாடு வேண்டாம். நான்போய் வருகிறேன். உத்தரவு கொடுங்கள்!" என்றான்.

" நீ ஊருக்குப் போய்ச் சேர்வதற்குள் ரொம்ப நேரமாகிவிடும் சாப்பிட்டுப் பொ! " என்றார்.

"எனக்குப் பசி இல்லை!" என்றான் அவன்.

"சரி..இந்தா வண்டி வாடகை!" என்று சொல்லி மூன்று ரூபாய் கொடுத்தார்.

"இது உங்களிடமே இருக்கட்டும். நான் வருகிறேன்" என்று கிளம்பினான் அவன்.

இன்னும் அதிகமாக வேண்டுமா?" என்றார் அவர்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை! நீங்கள்தவறாக நினைக்க கூடாது!" என்று சொல்லிவிட்டு கம்பீரமாக கிளம்பினான் அவன்.

"என்ன காரணம் என்றாவது சொல்லி விட்டுப்போ!" என்றார் கவிராயர் அப்பொழுது தான் வண்டிக்காரன் சொன்னான்.

"ஐயா நேற்று ராத்திரி உங்கள் முன்னோர்களைப் பற்றி சொல்லிக் கொண்டு வந்தீர்களே! அவர்களை ஆதரித்த வெங்களப்ப நாயக்கர் பரம்பரையிலே பிறந்தவன் தான் நான்!

ஏதோ என் தலைவிதி இப்பொழுது வண்டி ஓட்டிக்கொண்டிருக்கிறேன்! எங்கள் வீட்டுப் பெரியவர்கள் என்ன சொல்வார்கள் என்றால் என்ன தான் ஆனாலும் சரி... கொடுத்ததை மட்டும் வாங்கக்கூடாது!" என்று சொல்வார்கள். " எங்கள் முன்னோர்கள் உங்களுக்குக் கொடுத்ததிலிருந்து ஒரு சின்ன துரும்பைக் கூட திருப்பி வாங்குவதற்கு என் மனம் இடம் கொடுக்கவில்லை! மன்னித்துக் கொள்ளுங்கள்!

ஏதோ இந்த அளவுக்காவது நான் உங்களுக்கு உபயோகப்படுவது மாதிரி கடவுள் கருணை செய்தாரே! அது எனது பாக்கியம்!" என்று சொல்லிவிட்டு அந்த ஆள் போய்விட்டான்.

இது கற்பனைக் கதையில்லை! நிஜமாக நடந்தது! இந்த சம்பவத்தை அந்த கவிராயரே சொல்லியிருக்கிறார்.

இந்த குறிப்பை ஒரு புத்தகத்தில் பார்த்தேன்.

அதை என் நண்பரிடம் கொடுத்து படித்துவிட்டுக் கொடுங்கள் என்றேன்.

வாங்கியவர் திருப்பி அந்த புத்தகத்தை தரவேயில்லை ஒருநாள் "என்ன படித்து விட்டீர்களா?" என்றேன்.


"படித்துப் பார்த்தேன். வெங்களப்ப நாயக்கர் பரம்பரை மாதிரி நானும் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன்" என்றார்.

"என்ன அது? என்றேன்

" கொடுத்ததை திருப்பி வாங்கக்கூடாது என்பது அவர்களது கொள்கை. வாங்கியதை திருப்பிக் கொடுக்கக்கூடாது என்பது எனது கொள்கை!" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஜெயலலிதா

# மேல் முறையீடு செய்ய ஜெயலலிதாவிடம் பணம் இல்லையா?

**ஜெ**யலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கை விசாரித்த கர்நாடக தனி நீதிபதி மைக்கேல் டி. குன்ஹா, மிகவும் நிதானமாகவும் அமைதியாகவும் வழக்கறிஞர்களின் வாதங்களைக் கேட்பது வழக்கம்.

ஆனால், நீதிபதி குன்ஹா வழங்கிய தீர்ப்புக்கு எதிரான மேல்முறையீட்டு வழக்கை விசாரித்துவரும் தனி நீதிபதி குமாரசாமி, பல நேரங்களில் சிரித்தவாறு கேள்விகள் கேட்பதால் ஜெயா தரப்பு வழக்கறிஞர்கள் திகைத்துப் போகின்றனர்.

கடந்த வாரம், ஜெயலலிதா தரப்பு வழக்கறிஞர் குமார் தனி நீதிமன்றத்தில்...

**குமார்:** 1996 ஆம் ஆண்டு, சென்னை மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றத்தில் சுப்பிரமணியன் சுவாமி புகார் மனு அளித்தார். அதை விசாரித்த நீதிபதி ராமமூர்த்தி, இந்திய தண்டனைச் சட்டம் 202 இன் படி தமிழ்நாடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையின் ஏ.டி.ஜி.பியாக இருந்த லத்திகா சரணை விசாரித்து அறிக்கை தாக்கல் செய்ய ஆணையிட்டார். சென்னை செஷன்ஸ் கோர்ட் இந்த வழக்கை விசாரிக்க உத்தரவிட்டதே தவறு.

**நீதிபதி:** இதை எதிர்த்து ஏன் மேல் முறையீடுமனுசெய்யவில்லை? உங்கள் மனுதாரரிடம் பணம் இல்லையா?

(சிரித்துக்கொண்டே கேட்டார்)

**குமார்:** (மௌனம்)

**நீதிபதி:** தமிழ்நாடு ஊழல் மற்றும் கண்காணிப்புத் துறை அதிகாரிகள் புலன் விசாரணை செய்ய அனுமதி அளித்ததை எதிர்த்து உங்கள் தரப்பில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை விசாரணை நடத்தலாம் என்று கூறி உங்கள் மேல்முறையீட்டு மனுவைத் தள்ளுபடி செய்தது. அந்தத் தீர்ப்பின் நகலை நான் காட்டவா? ஏன் இப்படி உண்மையை மறைத்து சொல்கிறீர்கள்? காலையிலிருந்து மாலை வரை நீதிமன்ற நேரத்தையே வீணாக்கி விட்டீர்கள்.

**குமார்:** ஊழல் தடுப்புப் போலீசார் விசாரணையின்போது சட்ட விரோதமாகச் செயறபட்டுள்ளனர். குற்றம் சாட்டப்பட்டவர்களிடம் எந்தவொரு வாக்குமூலத்தையும் பெறாமல் குற்றம் சாட்டப்பட்டவர்கள் வீட்டில் இல்லாதபோது கட்டடங்களைச் சோதனையிட்டனர். என் மனுதாரர்கள் மீது குற்றம் சுமத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் வருமானத்தைக் குறைத்து மதிப்பிட்டும் செலவுகளை மிகைப்படுத்தியும் காண்பித்துள்ளனர். என் மனுதாரர்கள் எந்தவிதமான ஊழல்களிலும் ஈடுபடவில்லை.

# சிரித்துக் கொண்டே கேட்ட நீதிபதி குமாரசாமி

**நீதிபதி:** இதையெல்லாம் சிறப்பு நீதிமன்றத்தில் சொல்லவில்லையா?

**குமார்:** ஒவ்வொன்றையும் சென்னை அமர்வு நீதிமன்றத்திலும் பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்திலும் எடுத்துச் சொன்னோம். ஆனால், அதை அவர்கள் ஏற்கவில்லை.

**குமரேசன்:** (மிகவும் அழுத்தி) நீதிபதி சிவப்பா முன்னிலையில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு விசாரணைக்கு வந்தபோது ஜெயா தரப்பில் வழக்கறிஞர் கபில்சிபல் வாதிட்டார். ஆனால், அதை நீதிபதி சிவப்பா ஏற்றுக் கொள்ளவில்லை.

**நீதிபதி:** (தலையில் கையை வைத்துக் கொண்டு) 1996 இல் நடந்த வழக்கு 2014 இல் விசாரிக்கப்படுகிறது. வழக்கை விரைந்து முடிக்க வேண்டும். அனைவரும் ஒத்துழைப்பு தாருங்கள்.

**மூத்த வழக்கறிஞர்கள் ஆஜர்**

ஜெயலலிதா சொத்துக் குவிப்பு மேல்முறையீட்டு மனு மீதான விசாரணை கர்நாடக உயர் நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. ஜெயலலிதா தரப்பில் உச்ச நீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர் நாகேஸ்வர ராவ், பசந்த், குமார், மணிசங்கர், செந்தில் ஆகியோர் பெங்களூர் வந்தனர். அரசுத் தரப்பில் பவானி சிங், முருகேஷ் மராடி ஆகியோரும் அன்பழகன் தரப்பில் குமரேசன், சரவணன் ஆகியோரும் நீதிமன்றத்தில் ஆஜராயினர்.

கடந்த 12 ஆம் திகதி அன்று நீதிபதி குமாரசாமி காலை 10.30 இற்கு தமது இருக்கையில் அமர்ந்தார். அப்போது எழுந்து நின்ற குமார, ஏ-1 ஜெயலலிதாவுக்காக உச்ச நீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர் நாகேஸ்வரராவும், ஏ-2 சசிகலாவுக்காக கேரள உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி பசந்தும் வாதிடுவார்கள் என்று அறிமுகம் செய்து வைத்தார்.

இந்த வழக்கு பற்றி ஏற்கனவே குமார் முழுமையாக வாதிட்டு இருக்கிறார். அதில், சில பொயின்ட்களை மட்டும் நான் எடுத்துவைக்க வந்துள்ளேன் என்று தன் வாதத்தைத் தொடங்கினார் நாகேஸ்வரராவ். இவரோடு 25 வயதுக்குக் குறைவான 8 ஜூனியர் வழக்கறிஞர்கள் வந்திருந்தனர். நாகேஸ்வரராவுக்குத் தேவையான பொயின்ட்களை அவ்வப்போது பரபரப்பாக எடுத்துக் கொடுத்தனர்.

**குமார்:** ஐ.பி.சி 17, 18 இன் படி, ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர்தான் ஊழல் வழக்கை முழுமையாக விசாரணை நடத்தி எஃப்.ஐ.ஆர் பதிவு செய்ய வேண்டும். ஆனால், இந்த வழக்கைப் பொறுத்தவரை ஐ.ஜி பெருமாளே ஸ்டேஷன் இன் சார்ஜ் ஆகவும் புகார்தாரர் ஆகவும் இருந்து எஃப்.ஐ. ஆர் பதிவு செய்துள்ளார். அது தவறானது.



**நீதிபதி:** ஐ.ஜி எஃப்.ஐ. ஆர் பதிவு செய்யக் கூடாது என்று எந்தச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது?

**குமார்:** விசாரணை நடத்திய இன்ஸ்பெக்டர் தான் எஃப்.ஐ.ஆர் பதிவு செய்வது வழக்கம்.

**நீதிபதி:** சில நேரங்களில் ஐ.ஜி கூட எஃப்.ஐ. ஆர் பதிவு செய்யலாம்.

**குமார்:** தன் கீழ் பணி புரியும் அதிகாரி சரியாகப் பணிபுரியவில்லை என்றால், அனைத்து வேலைகளையும் அவரே செய்ய வேண்டும். இதுபோன்றஎத்தனையோ வழக்குகள் நாட்டில் நடந்துள்ளது. உச்சநீதி மன்றத்தில் ஹரியாணா மாநில முன்னாள் முதல்வர் பஜன்லால் வழக்கிலும் எஃப்.ஐ. ஆர் முறையாகப் பதிவு செய்யப்படாததால் வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது. இந்த வழக்கிலும் எஃப்.ஐ. ஆர் முறையா கப்பதிவு செய்யப்படவில்லை. என் மனுதாரர் ஜெயலலிதா மீது குற்றம் சுமத்த வேண்டும் என்ற நோக்கில் தனிக் கவனத்துடன் செயறபட்டனர். ஐ.பி.சி 17, 18 இன் படி ஊழல் வழக்கை விசாரிக்க நியமிக்கப்படும் அதிகாரி எஸ்.பி அந்தஸ்துக்கு இணையாக இருக்க வேணடும். ஆனால், இந்த வழக்கில தமிழக அரசால் நியமிக்கப்பட்ட நல்லம நாயுடு தமிழ்நாடு ஊழல் மற்றும் கண காணிப்புத் துறையின் டி.எஸ்.பியாக இருந்தார். அவரை இந்த வழக்கின் விசாரணை அதிகாரியாக நியமித்தது தவறு.

**நீதிபதி:** விசாரணைக் குழுவில் யாரைச் சேர்த்துக் கொள்வது என்பது அதிகாரி களின் சுதந்திரம். அதில் நாம் எப்படி கேள்வி கேட்க முடியும்?

**குமார்:** விதிமுறைகள் இருக்கும்போது அதை எப்படி மீறலாம்? மேலும், நல்லமநாயுடு தலைமையிலான விசாரணைக் குழு அன்றைய ஆளும் கட்சியின் நிர்ப்பந்தத்தால் உண்மைக்குப் புறம்பாக விசாரணை மேற்கொண்டு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது. அதன்பிறகு, நல்லம நாயுடு பணி ஓய்வு பெற்றார். 2006 இல் தி.மு.க ஆட்சிக்கு வந்த பிறகு மீண்டும் நல்லம நாயுடுக்கு "ஆபீஸர் ஆன் ஸ்பெஷல் டியூட்டி' என்ற பதவி உயர்வு கொடுக்கப்பட்டது. அவருக்குக்கீழ் 1 ஐ.ஜி, 1 எஸ்.பி, 2 டி.எஸ்.பி, 50 இன்ஸ்பெக் டர்கள், 150 காவலர்கள் கொண்ட ஒரு பெரும் படையையே அமைத்தனர். தமிழகத்தில் எவ்வளவோ வழக்குகள் இருக்கும்போது இந்த ஒரு வழக்குக்கு இவ்வளவு பெரும் படையை அமைத்ததைப் பார்க்கும்போது அரசியல் பழிவாங்கு நோக்கத்தில் செயற பட்டிருப்பது உறுதியாகிறது.

**நீதிபதி:** அப்போது சட்டசபையில் உங்கள் கட்சி எம.எல்.ஏக்கள் இல்லையா?


**குமார்:** (யோசிக்கிறார்)

சரவணன் (அன்பழகன் வழக்கறிஞர்): இருந்தார்கள்.

**குமார்:** ஆமாம். 4 எம்.எல். ஏக்கள் இருந்தனர். அப்போது, அதை எதர்க் கட்சி என்று சொல்ல முடியாது.

**குமார்:** நீங்கள் 1996 இல் பதிவு செய்த குற்றச்சாட்டு ஆவணங்களை தமிழிலிருந்து ஆங்கிலத்துக்கு மொழி பெயர்க்கச் சொல்லி ஆணையிட்டீர்கள். ஆனால், கர்நாடக மொழி பெயர்ப்புத் துறையில் அதற்கான ஆட்கள் இல்லை என்று ஆவணங்கள் திரும்பி வந்துவிட்டன.

**நீதிபதி:** மொழிபெயர்ப்புத் துறை இயக்குநருக்குப் பிடிவாரண்ட் பிறப்பிக்க வேண்டுமா? மொழிபெயர்ப்புத் துறையின் இயக்குநர் மாலை 3 மணிக்கு நேரில் ஆஜராகி சரியான விளக்கம் அளிக்க வேண்டும். ஆட்கள் இல்லாமல் எதற்காக தனியாக மொழிபெயர்ப்புத் துறை இருக்கிறது. அனைத்து மொழியிலும் உள்ள ஆவணங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பு செய்து கொடுப்பது அந்தத் துறையின் பணி.




**ஜூனியர் விகடன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலி எண்ணிக்கை அதிகரிப்பு

## 22 பேரின் சடலங்கள் மீட்பு



கிழக்கு சீனாவில் ஓடும் யாங்சே நதியில் படகு கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் 22 பேர் பலியானது உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஜியாங்ஸூ மாகாணத்தில் ஜாங் ஜியாகாங் என்ற பகுதிக்கு அருகில் சில பரிசோதனைகளை இந்தப் படகு மேற்கொண்டிருந்தபோது, கடந்த வியாழக்கிழமையன்று இந்த விபத்து நேரிட்டது. அப்போது இந்தப் படகில் 25 பேர் இருந்தனர்.

விபத்து நேரிட்டபோது, சிங்கப்பூரைச் சேர்ந்த நான்கு பேர், இந்தியாவைச் சேர்ந்த ஒருவர், மலேசியாவைச் சேர்ந்த இருவர், ஜப்பானைச் சேர்ந்த ஒருவர் என வெளிநாடுகளைச் சேர்ந்த எட்டுப் பேரும் படகில் இருந்தனர்.

படகில் இருந்தவர்களில் மூன்று பேர் மீட்கப்பட்டிருக்கும் நிலையில், மீதமிருக்கும் 22 பேர் உயிரிழந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட மூவரும் சீனாவைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

30 மீற்றர் நீளம் கொண்ட, வாங்ஷென்ஷ 67 என்ற இந்தப் படகு சிங்கப்பூரில் பதிவு செய்யப் பட்டிருந்தது. விபத்து நிகழ்ந்தபோது, படகில் அதன் உரிமையாளரும் சில பொறியியலாளர்களும் இருந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமையன்று மீட்கப் பட்ட வாங்ஷென்ஹூவா என்பவர், பிரதான இயந்திரத்தினை சோதனை செய்து கொண்டிருந்த போது, படகு திடீரென தலை கீழாகக் கவிழ்ந்ததாகத் தெரிவித்தார்.

இதையடுத்து, 20 வினாடிகளில் ஓட்டுனர் அறை முழுவதும் நீரால் நிரம்பிவிட்டதாக அவர் கூறினார். அங்கிருந்த ஹைட்ராலிக் பம்பை பிடித்துக்கொண்டு தான் உயிர் தப்பியதாகவும் அவர் கூறினார்.

ஜப்பானைச் சேர்ந்த பொறியியலாளர் ஒருவரையும் தான் பிடித்துக் கொள்ள முயன்றதாகவும் ஆனால், படகு மேலும் மேலும் மூழ்கவே அவர்கள் பிரிந்துவிட்டதாகவும் வாங் கூறினார்.

இந்தப் படகு கடந்த ஒக்டோபரில் சீனாவில் கட்டப்பட்டது. இந்தப் படகு எங்கே செல்லவிருந்தது என்ற விபரத்தை துறைமுக அதிகாரிகளுக்கு முறைப்படி தெரிவிக்கவில்லையென உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-5)

# ஜனாதிபதியின் தலைமை அதிகாரி தலைநகரில் வைத்து கடத்தப்பட்டார்

ஏமன் நாட்டில் அந்நாட்டு ஜனாதிபதி அப்த்ரபு மன்சூர் ஹதியின் தலைமை அதிகாரி கடத்தப்பட்டுள்ளார்.

அஹ்மத் ஆவாத் பின் முபாரக் என்ற அந்த அதிகாரியும் அவரது இரண்டு பாதுகாவலர்களும் நேற்று முன்தினம் சனிக்கிழமையன்று காலையில் கடத்தப்பட்டனர். தலைநகர் சனாவின் மையப் பகுதியில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

ஷியா ஹௌதி என்ற கலகக் குழுவினர்தான் இந்தக் கடத்தலில் ஈடுபட்டிருக்கக்கூடும் என ஏமன் அதிகாரிகள் கருதுகின்றனர். தலைநகரின் பெரும்பகுதி அவர்களது கட்டுப்பாட்டில்தான் இருந்து வருகிறது.

2011 ஆம் ஆண்டில் அப்போதைய அலி அப்துல்லா சலேவுக்கு எதிராக மக்கள் திரண்டெழுந்து நடத்திய போராட்டத்தின் முடிவில் அவர் பதவியிலிருந்து கீழிறங்கினார். அப்போதிலிருந்து ஏமனில் ஸ்திரமான அரசு இல்லை.

ஹௌதிகளுக்கும் சன்னி கலகக் குழுவினருக்கும் இடையில் நடக்கும் மோதலில் பல பொது மக்கள் கொல்லப்பட்டு வருகின்றனர்.

**கடத்தலுக்குக் காரணம் என்ன?**

ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது, புதிய அரசியல் சாசன வரைவு ஒன்றை பின் முபாரக் கொடுக்கவிருந்தார் என்றும் அதைத் தடுப்பதற்காகவே ஹௌதிக்கள் அவரைக் கடத்தியிருக்கலாம் என சிலர் கூறியதாக ரொய்ட்டர் செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

கடந்த ஆண்டு முபாரக்கை பிரதமராக நியமிக்க முயற்சிகள் நடந்தபோது, கலகப்படையினர் அதனைத் தடுத்து நிறுத்தினர்.

புதிய அரசியல் சாசனப்படி ஏமன, மத்திய அரசால் கட்டுப்படுத்தப்படும் பிராந்தியங்களாகப் பிரிக்கப்படவுள்ளது. இதனை ஹௌதிக்களும் தென் பகுதி பிரிவினை வாதிகளும் எதிர்த்து வருகின்றனர்.

ஈரானின் கைப்பாவையாக கலகக்காரர்கள் செயல்படுவதாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும, அவர்கள் அதனை மறுத்து வருகின்றனர்.

இதேவேளை பிரான்ஸில் சார்லி ஹப்டோ அலு வலகம் மீது நடத்தப் பட்ட தாக்குதலைத் திட்டமிட்டு, நிதியுதவி அளித்தது தாங்கள்தான் என ஏமனின அல் கொய்தா பிரிவு ஒரு வீடியோவை வெளியிட்டது. ஆனால, ஆதாரம் எதையும் அவர்கள் அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)




# பெல்ஜியத்தின் வீதிகளில் பாதுகாப்புப் படையினர்!

பெல்ஜியத்தின் வீதிகளில் பாதுகாப்பை பலப்படுத்துவதற்காக படையினர் குவிக்கப்பட்டு வருகின்றனர்.

பெல்ஜிய பொலிஸாரைக் கொல்வதற்கு இஸ்லாமிய தீவிரவாதிகள் போட்டிருந்த திட்டத்தை முறியடித்துள்ளதாக அதிகாரிகள் கூறியிருந்த நிலையிலேயே இந்த பாதுகாப்பு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உடனடியாக நடக்கவிருந்த தாக்குதல்களைத் தடுத்ததாகக் கூறுகின்ற பாதுகாப்பு துறையினர், அவற்றுடன் தொடர்புடைய 13 சந்தேகநபர்களை கைதுசெய்து விசாரணை நடத்தி வருவதாகவும் கூறுகின்றனர்.

கிழக்கு நகரான வேர்வியர்ஸில் நடந்த ஆயுதமோதல் ஒன்றை அடுத்து 5 பேர் மீது பயங்கரவாதக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

கடந்த வியாழனன்று நடந்த இந்தத் தாக்குதல்களில் இரண்டு ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர்.

பிரான்ஸிலும் வீதிகளில் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

ஒருவாரத்துக்கு முன்னர் பிரான்ஸில் நடந்த பயங்கரவாதத் தாக்குதல்களில் 17 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஒஸ்கார் தேர்வில் வெள்ளையர்களின் ஆதிக்கம் தொடர்பில் கடும்விமர்சனம்



உலகில் சிறந்த நடிகர், நடிகைகளுக்கான ஒஸ்கார் விருதுக்கான தெரிவுப்பட்டியலில் வெள்ளை இனத்தவர்கள் மட்டுமே இடம்பிடித்துள்ள நிலையில், எதிர்காலத்தில் ஒஸ்கார் விருதுக்கான பட்டியல்களில் வெவ்வேறு பின்னணிகளைக் கொண்டவர்கள் இடம்பெற வேண்டியதன் அவசியத்தை ஒஸ்கார் விருது வழங்கும் அமைப்பின் தலைவர் வலியுறுத்தியுள்ளார்.

பல்வேறுபட்ட கருத்துக்களையும், குரல்களையும் எதிரொலிப்பதில் ஒஸ்கார் அமைப்பு பெரும் முன்னேற்றங் களை கொண்டுவர முயற்சிப்பதாக அந்த அமைப்பின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதல் கறுப்பினத்தவரான செரில் புனே ஐசக்ஸ் தெரிவித்துள்ளார்.

சிறந்த நடிகர், நடிகை மற்றும் சிறந்த துணை நடிகர்களுக்கான விருதுகளுக்கான போட்டியில் இருக்கும் 20 பேருமே வெள்ளை இனத்தவர்களாகவுள்ளனர்.

இயக்கம் மற்றும் கதை வசனம் ஆகிய துறைகளுக்கான ஒஸ்காருக்கு ஒரு பெண் கூட தேர்வு செய்யப்படவில்லை.

ஹொலிவுட் திரைத்துறையினருக்கு கிடைக்கக் கூடிய மிகப் பெரும் அங்கீகாரமாக ஒஸ்கார் விருதுகள் கருதப்படுகின்றன. 2015 ஆம் ஆண்டுக்கான ஒஸ்கார் விருதுவிழா அடுத்த மாதம் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஜனாதிபதி பதவி விலகக்கோரி ஹைதியில் தொடர் போராட்டம்



ஹைதியில் ஜனாதிபதி மிச்செல் மார்ட்டெலி பதவிவிலகக் கோரி தலைநகர் போர்டா பிரின்சில் ஆயிரக்கணக்கானவர்கள் ஆர்ப்பாட்டங்களில் இறங்கியுள்ளனர்.

கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும் தண்ணீரைப் பீய்ச்சியும் பாதுகாப்பு படையினர் கூட்டத்தைக் கலைக்க முயன்று வருகின்றனர்.

எல்லோரும் ஏற்கக்கூடிய ஒரு அரசை அடுத்த 48 மணி நேரத்தில் அமைக்க எதிர்க்கட்சிகளுடன் பேசி, ஒரு ஒப்பந்தத்திற்கு வந்திருப்பதாகவும் அதனால் அமைதி காக்கும்படியும் மார்ட்டெலி கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் முடிந்ததையடுத்து கடந்த செவ்வாய்க்கிழமையன்று நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. அதனால், தற்போது ஹைதியில் இயங்கக் கூடிய அரசு எதுவுமில்லை.

நாட்டின் ஜனாதிபதியாக தொடர்ந்து செயற்படுவதற்காக மார்டெலி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி, அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தியிருப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கான நாடாளுமன்றத்துடன் ஒரு ஒப்பந்தத்தை எட்டியிருப்பதாக இரு வாரங்களுக்கு முன்பாக மார்டெலி அறிவித்தார்.

ஆனால் இழுபறி நீடித்தபடியே இருந்து வருகிறது.

**நாடாளுமன்றம் கலைப்பு**

இந்த அரசியல் நெருக்கடியை முடிவுக்குக் கொண்டுவர எதிர்க்கட்சிகள் ஒப்புக்கொண்டதாக, கடந்த திங்கட்கிழமையன்று மார்டெலி அறிவித்தார். ஆனால், அடுத்த சில மணி நேரங்களிலேயே எதிர்க்கட்சிகளுடன் எந்த ஒரு ஒப்பந்தமும் எட்டப்படாமல் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது.

நாடாளுமன்றத் தேர்தல்களை நடத்துவதில் தாமதம் ஏற்பட்டதால், ஹைதியில் அரசுக்கு எதிராகப் பல மாதங்களாகப் போராட்டம் நடந்து வருகிறது.

ஹைதியின் பிரதமராகஇருந்த லாரென்ட் லமோத் கடந்த டிசெம்பர் 14 ஆம் திகதியன்று இராஜினாமா செய்தார். அவருக்குப் பதிலாக பத்திரிகையாளராக இருந்த இவான் பால் பதவியேற்றார். இருந்தபோதும் மார்டெலி பதவிவிலக வேண்டுமெனக் கோரி போராட்டங்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன.

அந்நாட்டின் மேலவைக்கு நடக்க வேண்டிய தேர்தல்கள் 2012 ஆம் ஆண்டு மே மாதமே நடந்திருக்க வேண்டும். உள்ளூராட்சித் தேர்தல்கள் மூன்று ஆண்டுகளுககு முன்பே நடந்திருக்க வேண்டும்.


ஒக்டோபர் 26 ஆம் திகதி தேர்தல் நடத்தப்படுமென அறிவிக்கப்பட்டது. ஆனால், அரசுக்கும் மேலவை எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஒரு பகுதியினருக்கும் இடையில் தேர்தல் சட்டம் குறித்து உடன்பாடு எட்டப்படாததால், தேர்தல்கள் ஒத்திப் போடப்பட்டன.

இதேவேளை, 2010 ஆம் ஆண்டில் ஹைதியில் மிகப் பெரிய பேரழிவை ஏற்படுத்திய நிலநடுக்கம் ஏற்பட்டது. அதன நினைவு தினம் கடந்த திங்கட்கிழமையன்று அனுஷ்டிக்கப்பட்டது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீரங்கம் இடைத்தேர்தலில் ஆதரவளிக்கக் கோரிக்கை

ஸ்ரீரங்கம் தொகுதியில் நடைபெறவிருக்கும் இடைத் தேர்தலில் தி.மு.க. வேட்பாளருக்கு தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சியினரும் ஆதரவளிக்க வேண்டுமென தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி கோரிக்கை விடுத்துள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், அ.தி.மு.க. மேற்கொண்டுவரும் ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கு எச்சரிக்கை செய்யும் வகையில் அனைத்து எதிர்க்கட்சியினரும் வழங்கக் கூடிய உறுதியான ஆதரவோடு போட்டியிடுவது ஆக்கபூர்வமானதாக இருக்கும் எனக் கருதி தி.மு.க. இந்தத் தேர்தலில் போட்டியிடுவதாக கருணாநிதி குறிப்பிட்டுள்ளார். மேலும், தமிழகத்தில் முதலமைச்சர், தலைமைச் செயலர், காவல் துறைத் தலைவர் ஆகிய பதவிகளில் இரட்டை ஆட்சி முறை இருப்பதாகவும் சட்டம் ஒழுங்கு உள்ளிட்ட பிரச்சினைகளில் ஆரோக்கியமான விவாதங்களோ, முடிவுகளோ எடுக்கப்படாமல் அரசு நிர்வாகம் முடங்கிப் போயுள்ளதாகவும் கருணாநிதி தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)




# இலங். அகதிகள் முகாம்களில் சந்தேக நபர்களின் நடமாட்டம்

**விருதுநகர் மாவட்டத்தில் உள்ள இலங்கை அகதிகள் முகாம்களில் சந்தேகப்படும் நபர்களின் நடமாட்டம் இருந்தால் அது தொடர்பான தகவலை உடனடியாக மாவட்ட நிர்வாகத்திற்கு தெரிவிக்குமாறு தமிழக கடலோர பாதுகாப்பு படை தலைவர் கேசொக்கலிங்கம் தெரிவித்துள்ளார்.**

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள அகதிகள் முகாம் தொடர்பாக, நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்துள்ளார். அதிகாரிகள் இலங்கை அகதிகள் முகாமிற்கு அடிக்கடி சென்று ஆய்வு செய்வதோடு, அங்கு தங்கியிருப்பவர்களின் விபரங்கள் முழுவதையும் பதிவேடுகளில் சரிபார்க்க வேண்டும்.

எவ்வித முன்னறிவிப்பின்றி வெளிநாடுகளுக்கு விசைப்படகுகளில் தப்பிச் செல்வதால் ஏற்படும் பின்விளைவுகள் குறித்து அகதிகள் வட்டாட்சியர் விளக்கமாக எடுத்துரைக்க வேண்டும்.

அதேபோல், முகாம் பகுதிகளில் இரவு நேரங்களில் சந்தேகப்படும் நபர்கள் குறித்து கியூ பிரிவு பொலிஸார், தனிப்படை காவல் காவலர்கள் ஆகியோர் கண்காணித்து உடனே கடலோர பாதுகாப்பு காவல் துறை அலுவலகம், மாவட்ட வருவாய்த்துறை அலுவலகம், காவல் துறை, அந்தந்த பகுதியில் உள்ள காவல் நிலையங்களுக்கும் தகவல் தெரிவிக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ-5)

# அமெரிக்காவின் கோரிக்கையை முற்றாக நிராகரித்தது இந்தியா

இந்தியாவின் சுதந்திரதின விழாவின் போது 5கிலோ மீற்றர் சுற்றளவுக்கு விமானங்கள் பறக்க தடை விதிக்க வேண்டும் என்ற அமெரிக்காவின் கோரிக்கையை இந்தியா நிராகரித்துள்ளது.

டில்லியில் வருகிற 26ஆம் திகதி நடைபெறும் சுதந்திரதின விழாவில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ள உள்ளார். அவர் தனது மனைவி மிச்சேலுடன் 25ஆம் திகதி டில்லி வருகிறார். ஒபாமா வருகையையொட்டி டில்லியில் ஒரு மாதத்துக்கு முன்பே பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. சுதந்திர தின விழா நடைபெறும் ராஜபாதை டில்லி பொலிஸ் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஒபாமா கலந்து கொள்ளும் நேரத்தில் இராஜபாதையில் 5 கி.மீ. சுற்றளவுக்கு விமானங்கள் பறக்க தடை விதிக்க முடியுமா? என்று ஒபாமா பாதுகாப்பு அதிகாரிகள் மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்து இருந்தனர். இதை ஏற்க மத்திய அரசு மறுத்துவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)




# காஷ்மீர் எல்லையில் 2 தீவிரவாதிகள் கொலை

தீவிரவாதிகளை ஊடுருவ செய்வதற்காக இந்திய எல்லையில் காஷ்மீருக்குள் பாகிஸ்தான் இராணுவம் தினமும் அத்துமீறி தாக்குதல் நடத்தி வருகிறது. குடியிருப்பு பகுதிகள் மீதும் தாக்குதல் நடப்பதால் எல்லையில் வசிக்கும் ஆயிரக் கணக்கான மக்கள் வெளியேறி வருகிறார்கள். பாகிஸ்தானுக்கு இந்திய இராணுவம் தக்க பதிலடி கொடுத்து வருகிறது.

இருப்பினும் எல்லையில் பாகிஸ்தானின் அத்துமீறல் நீடிக்கிறது. இந்த நிலையில் வடக்கு காஷ்மீரில் சோபூர்நகரம் அருகே சைத்போரா கிராமத்துக்குள் 2 தீவிரவாதிகள் ஊடுருவினார்கள். அவர்கள் கிராம மக்களை மிரட்டி அங்குள்ள ஒரு வீட்டில் பதுங்கி இருந்தனர். தீவிரவாதிகள் பதுங்கல் பற்றி கிராம மக்கள் பொலிஸாருக்கு இரகசிய தகவல் கொடுத்தனர்.

இதையடுத்து பாதுகாப்பு படையினரும், பொலிஸாரும் அந்த கிராமத்துக்கு விரைந்தனர். அவர்கள் தீவிரவாதிகள் பதுங்கி இருந்த வீட்டை சுற்றி வளைத்தனர். அதிகாலையில் தீவிரவாதிகளை வீட்டுக்குள் வைத்து பாதுகாப்பு படையினர் பூட்டினார்கள். இதனால் உஷார் ஆன தீவிரவாதிகள் உள்ளே இருந்தவாறு பாதுகாப்பு படையினரை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர்.

உடனே பாதுகாப்பு படையினரும் திருப்பி சுட்டனர். இருதரப்புக்கும் அதிகாலையில் கடுமையான துப்பாக்கி சண்டை நீடித்தது. கடைசியில் பாதுகாப்பு படையினர் அதிரடியாக வீட்டுக்குள் புகுந்து 2 தீவிர வாதிகளையும் சுட்டுக் கொன்றனர். சில மணி நேரத்திலேயே பாதுகாப்பு படையினரின் தாக்குதல் முடிவுக்கு வந்தது. பொலிஸார் 2 தீவிரவாதிகளின் உடல்களையும் மீட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# தணிக்கை வாரிய விவகாரத்தை காங்கிரஸ் அரசியலாக்குகின்றது

## அருண் ஜேட்லி குற்றச்சாட்டு

மத்திய திரைப்படத் தணிக்கை வாரியத் தலைவர் லீலா சாம்சன் உட்பட 13 பேர் இராஜினாமா செய்துள்ள விவகாரம் காங்கிரஸாரால் அரசியலாக்கப்படுகிறது என்று மத்திய அமைச்சர் அருண் ஜேட்லி குற்றம் சாட்டியுள்ளார்.

தேரா சச்சா சவுதா தலைவர் ராம் ரஹீம் சிங் படமான மெசஞ்சர் ஆப் காட் திரைப்படத்தை திரையிட அனுமதி அளிக்கப்பட்ட விவகாரமே இப்போது பெரிய சர்ச்சைகளைக் கிளப்பியுள்ளது.

இந்நிலையில் அருண் ஜேட்லி தனது முகநூலில் கூறியிருப்பதாவது,

தேசிய ஜனநாயகக் கூட்டணி திரைப்பட சான்றிதழ் அளிக்கும் விவகாரத்தைப் பொறுத்தவரை தன்னை குறிப்பிடத்தக்க தொலைவில் வைத்துக் கொண்டுள்ளது.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி திரைப்பட தணிக்கை வாரியத்தை அரசியல்மயமாக்கியுள்ளது. நாங்கள் அவ்வாறு செயற்பட விரும்பவில்லை. ஐக்கிய முற்போக்கு கூட்டணியினால் நியமிக்கப்பட்டவர்கள் சாதாரண, தினசரி விவகாரத்தைக் கூட அரசியலாக்குவது வருந்தத்தக்கது.

திரைப்பட தணிக்கை வாரியம் தனது சட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் என்ன செய்ய முடியுமோ அதனைச் செய்துள்ளது. இது முறையான நடைமுறையின் ஒரு பகுதியே மாறாக வாரியத்தின் தன்னாட்சி மீதான தலையீடு எதுவும் கிடையாது.

திரைப்பட தணிக்கை வாரிய கூட்டங்கள் நடைபெறுவதில்லை என்று வெளியேறியவர்கள் கூறுவது என்பது சுய கண்டனமே. கூட்டங்களை அமைச்சரோ, செயலரோ கூட்டமுடியாது. வாரியத்தின் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்தான் கூட்டங்களைக் கூட்ட வேண்டும். கூட்டங்கள் நடைபெறவில்லை என்றால் அதற்கு பொறுப்பானவர்கள் தங்களிடமே குறை காண வேண்டியதுதான்.

திரைப்பட தணிக்கை வாரியத்தில் ஊழல் இருக்கிறது என்றால் ஐக்கிய முற்போக்கு கூட்டணி நியமித்த நபர்கள் தங்கள் மீதுதான் குற்றம்காண வேண்டும். ஒரு முறை கூட என்னிடம்அவர்கள் ஊழல் பற்றிய பிரச்சினைகளை எழுப்பவில்லை. செயலற்ற அதன் தலைவர் ஒரு முறை கூட அதனை எழுப்பவில்லை. திரைப்பட தணிகை வாரியத்தின் எந்த ஒரு உறுப்பினரையும் நான் சந்திக்கவும் இல்லை. அவர்களுடன் பேசவும் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் படையினரின் செயற்பாடு குறித்து அறிக்கை கோருகிறார் ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

**வடக்கில் பாதுகாப்பு படையினர் செயற்படும் விதம் பற்றிய அறிக்கை ஒன்றை தனக்கு வழங்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பீ.எம்.யூ.டி பஸ்நாயக்கவிற்கு உத்தரவிட்டுள்ளார்.**

வடக்கில் தற்போதைய பாதுகாப்பு நிலைமைகள், பாதுகாப்பு தரப்பினர் செயற்படும் விதம், முகாம்களின் எண்ணிக்கை, படையினர் மேற்கொண்டு வரும் பணிகள் உட்பட பல விடயங்கள் குறித்து அறிக்கை தருமாறு ஜனாதிபதி பணித்துள்ளார்.

அதேவேளை நாட்டில் பல்வேறு செயற்திட்டங்களில் சேவையாற்றி வரும் படையினர் தொடர்ந்தும் அந்தப் பணிகளில் ஈடுபட்டு வருவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் சுமார் 20 ஆயிரம் பேர் இராணுவத்தில் இணைத்து கொள்ளப்பட்டனர். எந்த காரணத்தை கொண்டும் படையினரின் எண்ணிக்கையை குறைக்கும் நோக்கம் கிடையாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயங்கள், முகாம்கள் அமைந்திருந்த பிரதேசங்கள் உட்பட சுமார் 20 ஆயிரம் ஏக்கர் நிலம் இராணுவத்தின் கீழ் இருந்து வந்தது.

இதில் சுமார் 18 ஆயிரம் ஏக்கருக்கும் மேல் வட பகுதி மக்களிடம் மீளகையளிக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## அபேவர்தன குடும்பத்தை புதிய அரசில் இணைக்க வேண்டாமென ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன மற்றும் தென் மாகாணசபை உறுப்பினர் பசந்த யாப்பா அபேவர்தன ஆகியோரை அரசாங்கத்தில் இணைத்துக்கொள்ளக் கூடாது எனக் கோரிக்கை விடுத்து, நேற்று மாத்தறை திஹகொட பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் சிலர் குறித்த நகரத்திலுள்ள உயரமான கட்டடத்தில் ஏறி உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை, முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன மற்றும் தென் மாகாணசபை உறுப்பினர் பசந்த யாப்பா அபேவர்தன ஆகியோரை அரசாங்கத்தில் இணைத்துக்கொள்ளக் கூடாது எனக் கோரிக்கை விடுத்து மாகந்துர மற்றும் ஊறுபொக்க பிரதேசங்களிலும் நேற்று முன்தினம் சனிக்கிழமை எதிர்ப்பு ஆர்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பித்தக்கது. (இ-5)

## இலங்கை இளைஞர்கள் ஜோர்தானில் உயிரிழப்பு

(கொழும்பு)

ஜோர்தானில் பணிபுரிந்த இரு இலங்கை இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர். இவர்கள் தங்கியிருந்த அறையில் மரணமடைந்த நிலையில் நேற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.


நிலவும் குளிருடனான காலநிலையை அடுத்து அவர்கள் வீட்டில் குளிர்காய நெருப்பினை பற்றவைத்தமையால் ஏற்பட்ட மூச்சுத்திணறலே உயிரிழப்புக்குக் காரணம் என தெரியவந்துள்ளது. இவ்வாறு பலியான இரு இளைஞர்களும் குருநாகல் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

இவர்களது சடலத்தை நாட்டுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் சுட்டிக் காட்டியுள்ளது. (இ-5)

## அரச புலனாய்வு சேவையின் பணிப்பாளர் இராஜினாமா!

அரச புலனாய்வுச் சேவையின் பணிப்பாளராகக் கடமையாற்றிய பிரதிப் பொலிஸ் மா அதிபர் சந்திரா வாகிஸ்ட தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். இதனையடுததுப் பதில் பணப்பாளராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எச். மார்சோம நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த அரசின் காலத்தில் அரசியல் கட்சி தலைவர்கள், செயற்பாட்டாளர்களின் தொலைபேசி அழைப்புகளை அரச புலனாய்வுச் சேவை பதிவு செய்து வந்தது. பதிவு செய்யும பணியில் ஈடுபட்ட நபரும் அந்த பணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். (இ-5)




## இலங்கை திரும்பும் சுனந்த தேசப்பிரிய

(கொழும்பு)

உயிராபத்துக் காரணமாக வெளிநாடுகளில் தஞ்சமடைந்துள்ள ஊடகவியலாளர்களை நாடு திரும்புமாறு புதிய அரசாங்கம் அண்மையில அழைப்பு விடுத்திருந்தது.

அரசாங்கத்தின் இந்த அழைப்பை ஏற்று நாடு திரும்பவுள்ளதாக ஜெனிவாவில் வாழ்ந்து வரும் ஊடகவியலாளர் சுனந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நிர்வாகம் ஊடகவியலாளர்களுக்கு எதிராக அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடாது என்று நம்பிக்கையுடன், கடந்த 5 வருடங்கள் வெளிநாட்டு அஞ்ஞாதவாசத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பப் தீர்மானித்துள்ளதாக தேசப்பிரிய கூறியுள்ளார்.

கடந்த காலங்களில் ஊடகவியலாளர்களுக்கு ஏற்பட்ட அடக்குமுறைகள் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என அழுத்தம் கொடுக்க வேண்டியதுதான் ஊடகவியலாளர்களின் கடமை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரச ஊடகங்கள் தொடர்பில் புதிய அரசாங்கம் இதுவரை கடைப்பிடித்த நடைமுறைகளை ஏற்றுக் கொள்ள முடியாது எனத் தெரிவித்துள்ள சுனந்த தேசப்பிரிய, கடந்த ஒரு வாரத்தில் மகிந்த ராஜபக்வுக்குப பதிலாக மைத்திரிபால சிறிசே னவின் செய்திகளை அரச ஊடகங் கள ஒளிப்பரப்பி வருவதாகக் சுட்டி க்காட்டியுள்ளார்.

நாடு திரும்பினாலும் போர்க் குற்றங்களுக்கு பொறுப்புக் கூறவேண்டியவர்களைத் தேடி தண்டிப்பது உட்பட பல மனித உரிமை தொடர்பான விடயங்கள் குறித்து நடத்தும் ஆர்ப்பாட்டங்களை நிறுத்தப் போவதில்லை எனவும் சுனந்த தேசப்பிரிய மேலும் தெரிவித்தள்ளார். (இ-5)

## தற்கொலைப்படை தாக்குல்; நைஜீரியாவில் 6 பேர் பலி!

நைஜீரியாவில் போகோஹராம் தீவிரவாதிகள் தொடர்ந்து பல்வேறு தாக்குதல் சம்பவங்களில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் இராணுவம் ஈடுபட்டு வருகிறது.

இந்தநிலையில் நைஜீரியாவின் வடகிழக்குப் பகுதியில் உள்ள காம்பே நகரில் மக்கள் அதிகம் கூடிய சந்தைப்பகுதி ஒன்றில் நேற்று முன்தினம் தற்கொலைப்படைத் தீவிரவாதி ஒருவர் தாக்குதல் நடத்தினார். இதல் அங்கு இருந்த அப்பாவிப் பொது மக்கள் 6 பேர் கொல்லப்பட்டனர். 10 பேர் படுகாயம் அடைந்தனர.

இந்தத் தாக்குதலுக்கு எந்தத் தீவிரவாத அமைப்பும் உடனடியாக பொறுப்பு ஏற்கவில்லை. படுகாயம் அடைந்தவர்களுக்குத் தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

தீவிரவாதிகளின் அச்சுறுத்தலுக்கு இடையே நைஜீரியாவில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 14ஆம திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுகிறது. இதற்கான தேர்தல் பிரசாரம் சூடுபிடித்துள்ளது. எதிர்க்கட்சியான அனைத்து முன்னணி காங்கிரஸ் (ஏ.பி.சி.) என்ற கட்சியின் அலுவலகம் நைஜர் டெல்டா பகுதியில் உள்ளது. நேற்று முன்தினம் இந்த அலுவலகம் மீது மர்மநபர்கள் சக்தி வாய்ந்த வெடிகுண்டுகளை வீசி எறிந்து விட்டு ஓடிவிட்டனர். இதில் அலுவலகம் தரைமட்டமானது. ஆனால் உயிரிழப்பு ஏற்படவில்லை. (இ-5)

## மகிந்தவுக்கு எதிராக மற்றொரு முறைப்பாடு

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது போலியான வாக்குசீட்டுக்களைச் செலுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி குறித்து அமைச்சர் ஹர்ச டி சில்வா தகவல்களை வெளியிட்டுள்ளார்.

இந்த வாக்குச்சீட்டுக்களை வாக்குப்பெட்டிகளில் செலுத்துவதற்காக தேரதல் அதிகாரிகளுக்குப் பணமும வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள 1053 வாக்குச் சாவடிகளில் உள்ள அதிகாரிகள் இவ்வாறான வாக்குசீட்டுக்களை வாக்குப் பெட்டிகளுக்குள் செலுத்தும் வகையில் தேர்தல் அதிகாரிகள் அதில் கையொப்பங்களை இட்டுள்ளனர்.

இந்த வாக்குச்சீட்டுக்கள் தேர்தலுக்கு முன்னரான 48 மணித்தியாலங்களுக்குள் விநியோகிக்கப் பட்டுள்ளன.

இதற்கு ஜனாதிபதி செயலகமே முழுமையான நிதிப்பங்களிப்பை செய்துள்ளதாக ஹர்ச குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்தநிலையில் இது குறித்து தாம் இலஞ்ச ஊழல்களுக்கு எதிரான ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)



மக்கள் திலகம் எம்.ஜீ.ஆரின் 98ஆவது பிறந்தநாள் நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழில் கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு வறுமைக்கோட்டுக்குட்பட்ட 100பேருக்கு யாழ்.எம்.ஜீ.ஆர் என அழைக்கப்படும் கோப்பாய் தெற்கை சேர்ந்த இராசையா சுந்தரலிங்கம் உடுபுடைவைகள் வழங்கினார். ஆண்களுக்கு சாரம் சேட்என்பனவும் பெண்களுக்கு சாரிகளும் வழங் கப்பட்டன. யாழ் எம்.ஜீ.ஆர்.இ.சுந்தரலிங்கம் கல்வியங்காடுசெங்குந்தா சந்தை வளாகத்தில் மக்கள் திலகம் எம்.ஜீ.ஆரின் சிலையொன்றை தனது சொந்த செலவில் அமைத்து சில மாதங்களுக்கு முன்னர் திறந்து வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேமக்காலை குடியிருப்பு பகுதியில் கழிவுகள் கொட்டப்படுகின்றன

**மன்னார் நகரசபையின் பகுதிக்குட்பட்ட இடங்களில் இருந்து அப்புறப்படுத்தப்படும் குப்பைகள் நீண்ட நாட்களாக மன்னார் பொது சேமக்காலைக்கு பின்புறமாக போடப்பட்டு எரியூட்டப்படுவதால் சிறுவர்கள் உட்பட பலரும் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகி வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.**

பாதிக்கப்பட்டோர் குற்றச்சாட்டு; மறுக்கிறது மன்னார் நகரசபை



இது தொடர்பில் அம் மக்கள் மேலும் தெரிவிக்கையில்.

மக்கள் குடியிருப்புக்கருகில் இந்த குப்பைகள் இவ்வாறு போடப்படுவதால் இப்பகுதியில் சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும் வகையில் துர்நாற்றம் வீசுவதுடன் பல்வேறுபட்ட சுகாதார சீர்கேடுகளுக்கும் இது ஏதுவாக அமைந்துள்ளது.

இந்தக் குப்பைபோடும் இடத்தை வேறு இடத்திற்கு மாற்றக்கோரி கிராம மக்கள் உட்பட இப்பகுதியில் அமைந்துள்ள பாடசாலை சமூகங்கள் மன்னார் நகர சபை உட்பட பல்வேறு அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு சென்றும் அது பலனளிக்கவில்லை.

ஆனால் தற்போது அப்பகுதியில் குப்பைகள் நிறைந்து குப்பை மேடாகியுள்ளது. இதனால் அந்த இடத்திலேயே குப்பைகள் நெடு நாட்களாக எரிக்கப்பட்டு வருகிறது. இதனால் ஏற்படும் புகை தலைமன்னார் பிரதான வீதியில் அமைந்துள்ள சிறுவர் முன்பள்ளி உட்பட புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை மாணவர்கள் மற்றும் அப் பகுதியிலுள்ள கிராம வாசிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

குறிப்பாக அப்பகுதியில் அமைந்துள்ள சிறுவர் முன்பள்ளியில் கல்வி கற்று வரும் சிறுவர்கள் மூச்சு திணறுலுக்கும் ஆளாகி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலை தொடருமானால் மேலும் சிறுவர்களின் சுகாதாரம் உட்பட கற்றல் நடவடிக்கைகளும் பெரும் தாக்கத்துக்கு உள்ளாகி வரும் என பாதிக்கப்பட்ட சிறுவர்கள், பாடசாலை சமூகங்கள் மற்றும் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர். எனவே சம்பந்தப்பட்ட அதிகா ரிகள் குறித்த பிரச்சினைக்கு உடன் தீர்வு ஒன்றை பெற்றுத்தருமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் மன்னார் நகர பிதா அ.ஞானப்பிரகாசம், நகர சபை உறுப்பினர் ரெ.குமரரேஸ் ஆகியோர் கருத்துத் தெரிவிக்கையில்,

மன்னார் நகர பகுதியில் சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்கள் கொட்டுவதற்கு ஏற்ற இடம் அமையாது 3 வருடங்களுக்கு மேலாக நகர சபையினர் திண்டாடி வந்தனர்.

இந்நிலையில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக நகர சபையினர் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக மன்னார் பிரதேச செயலகத்தினால் அப்பகுதியில் கழிவுப் பொருட்களைக் கொட்டுவதற்கு 5 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டது.

இக்காணியானது சேமக்காலையாகவும் இந்துக்களின் சடலம் எரியூட்டும் இடமாகவும் அமைந்துள்ள நிலையிலேயே கழிவுப் பொருட்களை எரியூட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.


அத்துடன் வழங்கப்பட்ட காணியில் மத்திய சுற்றாடல் அதிகார சபையினரால் ஒரு கட்டடம் அமைக்கப்பட்டு கொட்டப்படும் கழிவுப்பொருட்களில் இருந்து உக்கக்கூடியவுள்ள பொருட்களை பசளையாக்கும் திட்டம் நடைபெற்று வருகின்றது.

அப்பகுதியில் மட்டும்தான் கழிவுப் பொருட்களை கொட்டி பசளையாக்குவதற்குரிய இடமாகவுள்ளது.

தற்போது குறித்த சேமக்காலையை அண்மித்த பகுதியில் அதாவது மன்னார் நகர சபைக்கென ஒதுக்கப்பட்ட 5 ஏக்கர் காணியில் அபாத்தான முறையில் மக்கள் குடியேறியுள்ளனர்.

இவ்வாறு குடியேறிய மக்கள் மேற்படி இடர்பாடுகளை அனுசரித்தே செல்லவேண்டும். அல்லது அவர்களுக்கென சாத்தியமான இடங்களை அவர் தேடிச் செல்ல வேண்டும் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை குடியேறியுள்ள மக்களை பிறிதொரு இடத்தில் குடியேற்றுவதற்கான காணி ஒழுங்குகளை மன்னார் பிரதேச செயலகம் மேற்கொண்டு வருவதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர். (அ-2)




## சின்ன புதுக்குளம் பகுதியில் திருட்டு 50 ஆயிரம் ரூபா பணம் அபேஸ்

### ஓடு பிரித்து நுழைந்த திருடர்கள் கைவரிசை



(குருமன்காடு)

வீட்டின் ஓட்டைப்பிரித்து உள் நுழைந்த திருட்டுக்கும்பல் வீட்டைச் சல்லடை போட்டுத் தேடி அங்கு இருந்த 50 ஆயிரம் ரூபா பணத்தை சூறையாடிச் சென்றுள்ளது.

இந்த துணிகரத் திருட்டுச் சம்பவம் கடந்த 16 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் வவுனியா சின்னப் புதுக்குளம் உமாமகேஸ்வரன் வீதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது, வீட்டின் உரிமையாளர் குடும்பத்துடன் அன்றையதினம் வெளியே சென்று இரவு 7 மணியளவில் வீடு திரும்பி இருந்தார்.

அப்போது வீட்டின் ஓடுகள் கழற்றப்பட்டிருந்ததுடன் கதவுகளும் உடைக்கப்பட்டு அங்கிருந்த 50 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டிருந்தது.

இதனையடுத்து வீட்டின் உரிமையாளர் வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கினார்.

மறுநாள் காலை மோப்ப நாயுடன் வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (அ-2-250)

## விநாயகபுரம் அ.த.கவில் தரம் 11 வரை வகுப்புக்கள்

(மல்லாவி)

அரசாங்கத்தின் பின்தங்கிய பாடசாலை மாணவர்களின் கல்வி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள பின்தங்கிய பிரதேச பாடசாலையான மு/விநாயகர்புரம் அ.த.க.பாடசாலையில் தரம்-9 இலிருந்து தரம் 11 வரையிலான வகுப்புக்களை நடத்துவதற்கு வடமாகாண கல்வி அமைச்சின் அனுமதி கிடைக்கப்பெற்று வகுப்புக்கள் ஆரம்பித்து நடைபெற்று வருவதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் மாந்தை கிழக்கு கல்விக் கோட்டத்திலுள்ள பின்தங்கிய பாடசாலையான மு/விநாயகர்புரம் அ.த.க. பாடசாலை தரம்-9 வரையிலான மாணவர்கள் கல்வி பயில்வதற்கு மட்டும் இதுவரை காலமும் செயற்பட்டு வந்தது.

இதன்பின்னர் இங்கு கல்வி பயின்ற மாணவர்கள் பல மைல் தூரத்திற்கு அப்பாலுள்ள மல்லாவி மத்திய கல்லூரிக்கு அல்லது துணுக்காய் அ.த.க.பாடசாலைக்கு சென்று கல்வி கற்கும் நிலையே காணப்பட்டது.

இதனால் மாணவர்கள் பல்வேறு இடர்பாடுகளை எதிர்நோக்கியதுடன் இடைவிலகும் நிலையும் காணப்பட்டது.

இதனைக் கருத்தில் கொண்டு வடமாகாண கல்வி அமைச்சிற்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து இப்பாடசாலையில் க.பொ.த.(சா/த) வரை மாணவர்கள் கல்வி பயில்வதற்கு அனுமதிவழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தேவையேற்படும் இடத்து மேலும் ஆசிரியர்களை வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2-15)

## கால்கோள் விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் இவ் ஆண்டுக்கான தரம் ஒன்று மாணவர்களை பாடசாலை இணைத்துக் கொள்வதற்கான கால்கோள் விழா இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை அதிபர் அ.பங்கையற் செல்வன் தலைமையில் நடைபெறும்.

இக் கால்கோள் விழாவில் 200 புதிய மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலய கல்வி பணிமனையின் ஆரம்பக் கல்விப் பிரிவு சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பொ.விஜயநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ-2-277)

## உழுந்து செய்கையில் பாதிப்பு விவசாயிகள் சுட்டிக்காட்டு

### நிவாரணம் தருமாறும் கோரிக்கை

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் உழுந்து செய்கை மிக மோசமாக பாதிப்படைந்த நிலையில், தமக்கு நிவாரணங்களை பெற்றுத்தர வேண்டுமெனவும் விவசாய திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் விவசாயிகளால் உழுந்து செய்கை பிரதான சிறுதானிய செய்கையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், கடந்த மாதம் பெய்த தொடர்ச்சியான மழையின் காரணமாக உழுந்து செய்கை முற்றாக பாதிப்படைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்துடன் வெள்ளம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து இருந்தமையால், சிறந்த பராமரிப்பின்றி உழுந்து செய்கை பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளது. இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், உரிய நிவாரணங்களை பெற்றுத்தர உரிய அதிகாரிகளை விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர். (அ-2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடுத்து விட்ட அம்பு; சொல்லி விட்ட வார்த்தை திரும்ப வராது.
– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## புதிய ஆட்சிகளில் வலுப்படும் இலங்கை - இந்திய உறவு

தமிழ்ப் பண்பாட்டில் உரையாடுதல் அல்லது பேசுதல் என்பது மிகவும் முக்கியமான விடயம். இடம், பொருள், ஏவல் என்ற எல்லைகளை பேசுதலின் அடிப்படையாகக் கொள்ளுதல் வேண்டும் என்பது வரையறை.

எனினும் சிலருக்கு எங்கே பேசுகிறோம் எப்படிப் பேசுகிறோம் என்பது பற்றி எதுவும் தெரிவதில்லை. உசார் மடைத்தனமாக சிலர் வீறாப்பாய் கதைப்பர். அதுவே அவர்களுக்கு ஆபத்தாக அமைந்து விடுவதும் உண்டு. இடம், பொருள், ஏவல் அறியாமல் பேசுகின்ற பழக்கம் உடையவர்களை மக்கள் சமூகம் ஒருபோதும் கனம் பண்ணுவதில்லை.

இந்த வகையில் நம் நாட்டின் முன்னாள் ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷவிடமும் இடம், பொருள், ஏவல் என்ற எல்லையைக் கடைப்பிடிக்காத பேச்சு இருந்தது.

நானே! இந்த நாட்டின் ஜனாதிபதி என்ற இறுமாப்பில் உள்நாட்டில் அதட்டல் பேச்சைப் பேசிப் பழகிய மகிந்த ராஜபக்ஷ பழக்கதோசமாக ஐக்கிய நாடுகள் சபையிலும் அதே பாணியில் பேசுவார்.

சர்வதேசத் தலைவர்கள் பங்கு கொள்ளும் ஐ.நா சபையில் எத்தகைய ஒழுங்கு முறையில் பேச வேண்டும் என்று உணராமல், விடுதலைப் புலிகளைத் தோற்கடித்தவன் என்ற கர்வத்தோடு சர்வதேச சமூகத்தையும் வெருட்டும் பாங்கில் அவரின் பேச்சு அமைந்திருக்கும்.

மகிந்தவின் பேச்சைக் கேட்கும் உலகத் தலைவர்கள் உள்ளூர அவர் பற்றிய ஒரு மதிப்பீட்டை செய்து கொள்வராயினும் வெளிப்புறத்தில், நல்ல பேச்சு என்பது போல தம் உடல்மொழியைக் காட்டிக் கொள்வர்.

இதைப் பார்த்த மகிந்தவும் என்னை விட இந்த உலகில் எந்தத் தலைவனாலும் இப்படி ஒரு துணிச்சலான பேச்சை ஆற்ற முடியாது என்று நெஞ்சை நிமிர்த்திக் கொள்ள, போதாக்குறைக்கு இவரோடு கூடச் சென்ற பரிவாரங்கள்; பிரபு, உங்கள் பேச்சால் ஐ.நா சபையே அதிர்ந்து போயிற்று என்று புகழ் பாட, எப்படியும் பேசலாம் என்ற தொற்று நோய் மகிந்தவுக்கு மாற்ற முடியாத வியாதியாயிற்று.,

இதன் விளைவு அவரைச் சூழ்ந்து கொண்டு, இனிமேல் ஐ.நா சபைப் பக்கம் வராதே என்றாக்கி விட்டது.

ஆம், இலங்கையில் நடந்த ஆட்சி மாற்றத்தில் அமெரிக்கா மற்றும் இந்தியாவின் வகிபங்கு மிகவும் காத்திரமானது என்பது மறுக்க முடியாத உண்மை.

போரில் விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்கு இந்தியாவிடம் இருந்து பலமான உதவிகளைப் பெற்ற மகிந்த, போருக்குப் பின்னர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு இந்திய அரசு அழுத்தம் கொடுக்கும் என எதிர்பார்த்தார். இதில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக, சீனாவுடன் உறவு கொண்டு இலங்கைக்குள் சீனாவின் ஊடுருவலுக்கு இடம் கொடுத்தார். எனினும் இது விடயத்தில் மன்மோகன் சிங்–சோனியா காந்தி ஆட்சியில் இந்திய மத்திய அரசு மௌனமாக இருப்பதைத் தவிர வேறு எதனையும் செய்யவில்லை.

ஆனால் இப்போது இந்தியாவில் மோடி ஆட்சி. அண்டை நாடான இலங்கையில் சீனாவின் ஊடுருவலை பிரதமர் மோடி ஒரு போதும் அனுமதிக்க மாட்டார்.

எனவே சீனாவின் ஊடுருவலை வெட்டுவதற்கு ஒரே வழி மகிந்தவை வீட்டுக்கு அனுப்புவது. அந்தப் பணியை மிகப்பக்குவமாக அமெரிக்காவும் இந்தியாவும் செய்து முடித்தன.

இப்போது இலங்கையின் புதிய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இந்தியப் பயணத்தை மேற்கொண்டுள்ளார். தொடர்ந்து ஜனாதிபதி மைத்திரியும் இந்தியாவுக்குச் செல்வார். இதனை அடுத்து பிரதமர் நரேந்திர மோடி இலங்கை வருவார்.

ஆக, இலங்கை–இந்திய உறவு எதிர்காலத்தில் வலுப்படும். இந்த உறவின்வலிமை சீனாவை இலங்கையில் இருந்து அந்நியப்படுத்துவதோடு, இனப்பிரச்சினைக்கான தீர்விலும் முன்னேற்றம் காணும் என நம்பலாம்.

# ஜனவரி-9 இல் அலரிமாளிகைக்கு பிரசன்னமானோர் யார்?

## கமராக்களை ஆராயத் திட்டம்

(கொழும்பு)

ஜனவரி 9 ஆம் திகதியன்று ஜனாதிபதி தேர்தல் தினத்துக்கு அடுத்த நாள் அதிகாலை, அலரி மாளிகையில் யார்? யார் பிரசன்னமாகியிருந்தனர் என்பதை கண்டறியும் நோக்கில் அங்கிருந்து சிசிடிவி கமெராக்கள் பயன்படுத்தப்படவுள்ளன.

குற்றப்புலனாய்வு பிரிவினர் இந்த கமெராக்களின் படப்பிடிப்புக்களை ஆராயவுள்ளனர்.

அதேநேரம், அலரிமாளிகையில் குறித்த தினத்தில் மேற்கொள்ளப்பட்ட தொலைபேசி உள் மற்றும் வெளிவரும் அழைப்புக்கள் தொடர்பிலும் விசாரணைகள் நடத்தப்படவுள்ளன.

தேர்தலில் தோல்வி ஏற்படப் போவதை அறிந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இராணுவப்புரட்சி ஒன்றுக்கு திட்டமிட்டார்.

இதற்காக சட்டமா அதிபர் மற்றும் இராணுவ, பொலிஸ் தலைமைகளை அலரி மாளிகைக்கு அழைத்தார் என்று குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

எனினும் அவர்கள் அதற்கு உடன்பட வில்லை என்றும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த குற்றச்சாட்டை வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர குற்றப் புலனாய்வுத் துறையினரிடம் முறைப்பாடாக தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# முன்னாள் அமைச்சர் ஒருவருடைய மதுபானங்கள் பொலிஸாரால் மீட்பு

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் அமைச்சராக பதவி வகித்த ஒருவருக்கு சொந்தமான மதுபான போத்தல்கள் அடங்கிய கொள்கலன் மற்றும் இரண்டு லொறிகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்த மதுபான போத்தல்கள் சட்ட விரோதமான முறையில் தெமட்டகொடை பிரதேசத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. மதுபானம் வைக்கப்பட்டிருந்த கட்டிடத்தின் உரிமையாளர் உட்பட 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மதுபான போத்தல்களுடன் சாராயம் தயாரிக்க பயன்படுத்தப்படும் செயற்கை இரசாயனம் உள்ளிட்டவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

முன்னாள் அமைச்சர் தனது நண்பரிடம் இந்த கட்டிடத்தை வாடகைக்கு எடுத்திருந்ததாகவும் அங்கு மதுபானங்களை களஞ்சியப்படுத்த அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றிய மதுபானங்களின் பெறுமதி சுமார் ஒரு கோடி ரூபா என தெரிய வந்துள்ளது. களஞ்சியம் சீல் வைக்கப்பட்டுள்ளதுடன் நீதிமன்ற அனுமதியுடன் அதனை சோதனையிட பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ மதுபான வர்த்தகர் என்பதுடன் அவருக்கு சொந்தமான சாராய உற்பத்தி தொழிற்சாலை உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ)

# முன்னாள் பொலிஸ் மா அதிபர் அபிதாபிக்குப் பயணமானார்

(கொழும்பு)

முன்னாள் பொலிஸ் மா அதிபர் கலாநிதி மகிந்த பாலசூரிய அபுதாபிக்கு புறப்பட்டுச் சென்றுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக அவர் நேற்று அபுதாபி நோக்கி புறப்பட்டுச் சென்றதாக விமான அதிகாரிகள் தெரிவித்தனர்.


முக்கிய பிரமுகர்கள் செல்லும் வழியாக செல்லாது சாதாரண வழியில் விமான நிலையத்திற்குள் சென்ற அவர் ரொடான விமான சேவைக்கு சொந்தமான ஆர்.ஜி.402 என்ற விமானத்தில் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

மத்திய கிழக்கு நாடொன்றில் இலங்கையின் தூதுவராக பணியாற்றிய மகிந்த பாலசூரிய, கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நாட்டுக்கு அழைக்கப்பட்டு சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

ராஜபக்ஷ ஆதரவாளரான இவர் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய ஊழியர்களின் ஆர்ப்பாட்டம் மீது பொலிஸார் தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் பொறுப்பேற்று பொலிஸ் மா அதிபர் பதவியை ராஜினாமா செய்தார்.

இதனையடுத்து மகிந்த ராஜபக்ஷ அவரை தூதுவராக நியமித்தார். (எ)

# பொன்சேகாவுக்கு எம்.பி.பதவி?



ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயந்த கெட்டகொட தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை சரத் பொன்சேகாவுக்கு வழங்க இணக்கம் வெளியிட்டுள்ளார்.

சரத் பொன்சேகா விடுத்த கோரிக்கைக்கு அமைய தான் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்க தீர்மானித்ததாக கெட்டகொட குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை பொன்சேகாவுக்கு வழங்குவது குறித்து தேர்தல் ஆணையாளர் உறுதிப்படுத்திய பின்னர் பதவியை வழங்குவதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஜனநாயகக் கட்சியின் சார்பில் நாடாளுமன்றத்திற்கு சரத் பொன்சேகா தெரிவு செய்யப்பட்டதுடன் அவரது குடியுரிமை பறிக்கப்பட்டதை அடுத்து அவர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்தார்.

இதனையடுத்து ஜயந்த கெட்டகொட அந்த இடத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். (எ)

# ஹெரோயின் வழக்குகளை தூசி தட்டும் அமைச்சர்


கடந்த இரண்டு வருடங்களில் நடைபெற்ற ஹெரோயின் போதைப் பொருள் வழக்குகள் குறித்து மீண்டும் ஆராயுமாறு சட்டம் ஒழுங்கு அமைச்சர் ஜோன் அமரதுங்க பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

2012 ஆம் ஆண்டு கைப்பற்றப்பட்ட 260 கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருள் தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகள் குறித்து திருப்தியடைய முடியாது எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

260 கிலோ கிராம் ஹெரோயின் அடங்கிய கொள்கலனை விடுவிக்குமாறு முன்னாள் பிரதமர் டி.எம். ஜயரத்னவின் இணைப்புச் செயலாளர் சுங்க அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### மகளிரும் ஆன்மீகமும்




வாழ்க்கையானது ஆண், பெண் என்ற இருவரும் இணைந்து தான் நடைபெறுகின்றது. இந்த உலகில் எல்லோருக்குமே இந்த இரண்டு பேர் கூட்டுறவில் தான் பிறவி தோன்றுகின்றது. என்றாலும் கூட ஒரு சில காரணங்களால் உலகெங்குமே ஆண்கள் மேலோங்கவும் பெண்கள் கீழாக மதிக்கப் பெறவும் ஒரு சந்தர்ப்பம் இருந்தது.

காலத்தால் அந்தச்சந்தர்ப்பம் போனபிறகு கூட, வழக்கத்தை ஓட்டி, பழக்கத்தை ஓட்டி அதே ஆதிக்க மனப்பான்மை ஆண்களுக்கு ஏற்படுத்தித் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கிறது. ஒரு சமுதாயம் திருந்த வேண்டுமானால் இந்தக் குறைபாடுகள் நீங்கத்தான் வேண்டும். அந்தக்குறைபாடுகளை நீக்கிக் கொள்வதற்கு ஒரு சாரார் மட்டும்- ஆண்கள் மட்டுமோ, அல்லது பெண்கள் மட்டுமோ - முயன்றால் போதாது. இரண்டு பேர்களுமே அந்தக் குறைபாடுகளை உணர வேண்டும் அவற்றை முறையாகக் போக்கிக் கொள்கின்ற விருப்பம் அவர்களுக்கு வர வேண்டும்.

ஒரு குடும்பம் என்று எடுத்துக் கொண்டீர்களானால் அந்தக்குடும்பம் நலம் பெற வேண்டும், அந்தக் குடும்பத்திலே நல்ல குழந்தை பிறக்க வேண்டும், அந்தக்குழந்தை அறிவுடையவனாக, சமுதாயத்தில் பொறுப்புள்ள பிரஜையாக வாழ வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோலியை முறியடித்த அம்லா




ஒருநாள் போட்டிகளில் 114 இன்னிங்ஸ்களில் 5 ஆயிரம் ஓட்டங்களை எடுத்து சாதனையை வைத்திருந்த விராட் கோலியின் சாதனையை ஹஷிம் அம்லா முறியடித்துள்ளார்.

கிங்ஸ்மீட் டர்பனில் நடைபெற்ற மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான முதல் ஒரு நாள் போட்டியில் 66 பந்துகளில் 10 பவுண்டரிகளுடன் அம்லா 66 ஓட்டங்கள எடுத்தார்.

இந்த இன்னிங்ஸ் அவரது 101 ஆவது இன்னிங்ஸ், இதில் அவர் 5 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்து அதிவேக 5 ஆயிரம் ஓட்டங்கள் என்ற சாதனைக்கு சொந்தக்காரர் ஆனார்.

இது மட்டுமல்ல, ஒரு நாள போட்டிகளில் 2 ஆயிரம், 3 ஆயிரம், 4 ஆயிரம் ஓட்டங்களையும் குறைந்த இன்னிங்ஸ்களில் எடுத்த சாதனையும் அம்லாவுக்குரியதே. (க)

# கங்குலியின் நம்பிக்கையை நிறைவேற்றுமா இந்தியா?



இந்திய கிரிக்கெட் அணி உலககிண்ணத்தை தக்க வைக்க அதிக வாய்ப்பு இருப்பதாக முன்னாள அணித் தலைவர் சௌரவ கங்குலி தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவில் பங்கேற்ற பின், கங்குலி பேசியதாவது, இந்தியா உலகக்கிண்ணத்தை வெல்ல வாய்ப்புள்ளது.

விளம்பரத்துக்காக இதைச சொல்லவில்லை. ஒரு நாள் தொடர் என்று வந்து விட்டால் இந்தியாவுக்கு வெற்றி வாய்ப்பு என்பது உறுதி. இந்திய அணி வலுவான துடுப்பாட்ட வரிசையைப் பெற்றுள்ளது.

அதோடு, டெஸ்ட் தொடருக்கும், ஒரு நாள் தொடருக்கும் வித்தியாசம் உள்ளது. டெஸ்ட் போட்டிகளை விட ஒரு நாள் ஆட்டங்களில் பந்து வீச்சாளர்களின் பணிச் சுமை குறைவு. ஏற்கனவே சொன்னதைப் போல, தற்போதைய இந்திய அணி உலகக் கிணணத்தை வெல்ல வாய்ப்புள்ளது என்று கூறியுள்ளார். (க)

# இங்கிலாந்து அணியில் சங்கா




இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் சங்கக்காரா இங்கிலாந்தின் சர்ரே கவுன்டி கிளப்புடனான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளார்.

சங்கக்காரா டெஸ்ட் அரங்கில் முதல் இடத்தில் உள்ளார். ஒருநாள் போட்டியிலும் தூள் கிளப்பும் இவர், உலகக்கிண்ணப் போட்டிகளோடு சர்வதேச ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறவுள்ளார்.

இந்நிலையில் உள்ளூர் போட்டிகளில் விளையாட அவருக்கு அதிக நேரம் இருப்பதால் இங்கிலாந்தின் கவுன்டி கிளப்பான சர்ரேவுடன் ஒப்பந்தம் செய்துள்ளார்.


இது குறித்து சர்ரே இயக்குநர் செட்டிவார்ட் கூறுகையில்,

சங்கக்காரா நட்சத்திர வீரராக மட்டுமல்லாமல், ஒரு சிறந்த மனிதராகவும் இருக்கிறார்.

டெஸ்ட் தரவரிசையில் உலகின் நம்பர்வன் வீரராக இருக்கும் சங்கக்காராவுடன் உள்ளூர் வீரர்கள் இணைந்து செயற்பட வேண்டியது முக்கியமான ஒன்று எனத் தெரிவித்துள்ளார். (க)

# ஆஸி ஓபன் டென்னிஸ் அட்டவணை அறிவிப்பு

இந்த ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டியான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி மெல்பேரனில் இன்று முதல் பெப்ரவரி முதலாம் திகதி வரை நடக்கிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடப்பு சம்பியன் வாவ்ரிங்கா (சுவிட்சர்லாந்து), உலக தர வரிசையில் முதலிடத்தில் இருக்கும் ஜோகோவிச் (செர்பியா), ரோஜர் பெடரர் (சுவிட் சர்லாந்து), ரபெல் நடால் (ஸ்பெயின்) உடபட 32 வீரர்கள் களத்தில் உள்ளனர்.



சம்பியன் பட்ட ரேசில் மேற் குறிப்பிட்ட 4 பேரும் முன்னணியில் இருக்கின்றனர். பெண்கள் ஒற்றையர் பிரிவில் நடப்பு சம்பியன் லீ நா (சீனா) ஓய்வு பெற்று விட்டதால் பங்கேற்கவில்லை.

உலக தர வரிசையில் முதலிடத்தில் இருக்கும் செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா), மரியா ஷரபோவா (ரஷ்யா), சிமோனா ஹாலெப் (ருமேனியா), கரோலின் வோஸ்னியாக்கி (டென்மார்க்), விக்டோரியா அஸரென்கா (பெலாரஸ்) ஆகியோர் இடையே பட்டத்தை வெல்ல கடும் போட்டி நிலவும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இந்த நிலையில் அவுஸ்திரேலிய ஓபன் போட்டியில் யார், யாருடன் மோதுவது என்பதை முடிவு செய்யும் சமநிலை (குலுக்கல்) நேற்று முன்தினம் நடந்தது. இதன் அடிப்படையில் போட்டி அட்டவணை வெளியிடப்பட்டு இருககிறது. இதில் ஜோகோவிச்சுக்கு எளிதான சுற்று கிடைத்து இருக்கிறது.


முதல் சுற்றில் தகுதி சுற்று வீரரை எதிர்கொள்ளும் ஜோகோவிச், கால் இறுதி வரை உலக தர வரிசையில் 10இற்குள் இருக்கும் வீரர்களை சந்திக்க வேண்டியது வராது. கால் இறுதியில் செர்வ் செய்வதில் கில்லாடியான மிலோச் ரானிச்சை (கனடா) சந்திக்க நேரிடலாம். நடப்பு சம்பியனான வாவ்ரிங்கா கடுமையான பிரிவில் சிக்கி இருக்கிறார்.

முதல் சுற்றில் 99 ஆம் நிலை வீரர் மார்செல்லை (துருக்கி) சந்திக்க இருக்கும் வாவ்ரிங்கா, 4 ஆவது சுற்றுக்குள் 16ஆம் நிலை வீரர் பாபியா போக்னியுடன் (இத்தாலி) மோத வேண்டி இருக்கலாம். கால் இறுதியில் அமெரிக்க ஓபன் இறுதிப் போட்டிக்கு முன்னேறிய ஜப்பான் வீரர் நிஷிகோரியுடன் மோதக் கூடும்.

ரபெல் நடால் முதல் சுற்றில் ரஷ்ய வீரர் மிகைஸ் யூஸனியின் சவாலை சந்தித்தாலும், அவர் அதனை கடந்து விட்டால் மற்றபடி அதிக கடினம் இருக்காது. பெடரர், ஆண்டி முர்ரே ஆகியோருக்கும் கடினமான பிரிவு தான் கிடைத்து இருக்கின்றது.

அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்சுக்கு கால் இறுதி வரை கடினமான எதிராளி இல்லை. கால் இறுதி யில் கரோலின் வோஸ்னியாக்கை சந்திக்க வாய்ப்பு இருக்கிறது. ஷரபோவா முதல் சுற்றில் தகுதி சுற்று வீராங்கனையை சந்திக்கிறார். (க)

# மனதை கொள்ளையடித்த கெய்ல்



மேற்கிந்திய தீவுகள் அணியின் அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல் ஒரே வார்த்தையில் தனது ரசிகையின் மனதை கொளளை கொண்டார். தென்னாபிரிக்காவுக்கு எதிரான இருப்பது-20 தொடரில் பட்டையை கிளப்பிய கிறிஸ் கெய்ல், தென்னா பிரிக்காவை புரட்டி எடுத்தார். 3 போட்டிகளிலும் அதிரடி ஆட்டத்தை காட்டி தொடர் நாயகன விருதையும் தட்டிச் சென்றார்.

இந்நிலையில் அவரது ரசிகை ஒருவர் கிறிஸ் கெய்லுக்கு பரிசளித்து அவரை வாழ்த்தினார். பின்னர் உங்களை மறுபடி சந்தித்ததல் மிக்க மகிழ்ச்சி என்று கூறினார்.

இதனையடுத்து சிரித்த முகததுடன், அழகான பெண்களுடன புகைப்படம் எடுத்துக் கொள்வது என்பது எப்போதும் அழகு தான் எனக் கூறி தனது ரசிகையை வெட்கத்தில் முகம் சிவக்க வைத்தார் கெய்ல். (க)

# இந்திய அணிக்கு மீண்டும் திரும்புவேன்; சூதாட்ட புகாரில் சிக்கிய ஸ்ரீசாந்த்



மீண்டும் இந்திய அணிக்கு திரும்புவேன் என்று சூதாட்ட புகாரில் சிக்கிய ஸ்ரீசாந்த் கூறியுள்ளார்.

2013 ஆம் ஆண்டு நடந்த ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியின் போது சூதாட்டத்தில் ஈடுபட்டதாக ராஜஸ்தான்ரோயல்ஸ் அணி வீரர்கள் ஸ்ரீசாந்த், சண்டிலா அங்கித் சவான் ஆகியோர் சிக்கினர். இதனால் அவர்களுக்கு தடை விதிக்கப் பட்டது. ஐ.பி.எல். சூதாட்ட வழக்கு தற்போது நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. இந்நிலையல் நீதிமன்றத்தில் நடந்த விசாரணையின் போது, ஸ்ரீசாந்த் ஏன் கைது செய்யபபட்டார்.

அவருக்கு எதிரான ஆதாரம் எஙகே என்று கேள்வி எழுப்பபப்பட்டது. இது குறித்து ஸ்ரீசாந்த் கூறியதாவது,

நீதிமன்றத்தில் நடந்த விசாரணையை அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். என் மீது தவறு இல்லை என்று பல முறை கூறினேன். அதிஷ்டவசமாக என் பெற்றோர், மனைவி குடும்பத்தினர், நணபர்கள் நம்பினார்கள். என்மீது யாரும் குற்றம் சாட்டவில்லை. விரைவில் இந்திய அணிக்கு திரும்பி மீண்டும் விளையாடுவேன் என்று கூறியுள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 பந்துகளில் சதம் குவித்தார் டி வில்லியர்ஸ் சாதனைகள் பல படைத்து தென்னாபிரிக்கா வெற்றி

தென்னாபிரிக்காவின் ஸ்ரைலிஷ் துடுப்பாட்ட வீரர் டி வில்லியர்ஸ் 31 பந்துகளில் சதம் குவித்து உலக சாதனை புத்தகத்தில் தனது பெயரை பதிவு செய்ய, மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான போட்டியில் தென்னாபிரிக்க அணி 148 ஓட்டங்களால் அமோக வெற்றி பெற்றது.

பல்வேறு உலக சாதனைகளுக்கு சொந்தமான ஜொகன்னஸ்பேர்க் வொண்டரஸ் ஆடுகளத்தில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.




இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய தென்னாபிரிக்க அணி, தனது ஒருநாள் கிரிக்கெட் சரித்திரத்தில் மூன்று துடுப்பாட்ட வீரர்கள் சதம் குவித்து அசத்த 50 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மட்டுமே இழந்து 439 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பில் றொஸ்ஸோ 128 (கன்னிச் சதம்), அம்லா 153*, அணித் தலைவர் டி வில்லியர்ஸ் 149 (44 பந். 9 பவுண். 16 சிக்ஸ்) ஓட்டங்கள் எடுத்தனர்.

440 ஓட்டங்கள் என்ற கடின வெற்றியிலக்கை நோக்கி களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு அதிரடி மன்னன் கிறிஸ் ஹெய்லின் (19) விரைவான வெளியேற்றம் தோல்வியையும் உறுதிப்படுத்த,

மேற்கிந்தியத் தீவுகள் அணியால் 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 291 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது.

துடுப்பாட்டத்தில் டுவைன் ஸ்மித் 64, அணித் தலைவர் ராம்டீன் 57 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பில் மோர்கல், பிலாண்டர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக சாதனைகள் பல படைத்த தென்னாபிரிக்க அணித் தலைவர் டி வில்லியர்ஸ் தெரிவானார்.

போட்டியில் படைக்கப்பட்ட சாதனைகள் சுருக்கமாக:

***அதிவேக சதம்***

டி வில்லியர்ஸ் (தெ.ஆ) 31 பந். எதிர் மே.தீ. ஜெகன்னஸ்பேர்க் 2015, கோரி அண்டர்சன் (நியு) 36 பந். எதிர் மே.தீ (குயின்ஸ்ரவுண் 2014

***அதிவேக அரைசதம்***

டி வில்லியர்ஸ் (தெ.ஆ) 16 பந்.எதிர் மே.தீ. ஜெகன்னஸ்பேர்க் 2015, ஜெயசூர்ய (இலங்) 17 பந். எதிர் பாக். சிங்கப்பூர் 1996

***16 சிக்ஸர்கள்***

இப்போட்டியில் 16 சிக்ஸர்களை விளாசிய டி வில்லியர்ஸ் இந்தியாவின் ரோஹித் சர்மாவுடன் (16 சிக்ஸ் எதிர் ஆஸி பெங்களூர் 2013) முதலிடத்தை பகிர்ந்து கொண்டார்.

தவறிய சாதனை

***மொத்த ஓட்ட எண்ணிக்கை***

இலங்கை 443/9 எதிர் நெதர்லாந்து 2006, தென்னாபிரிக்கா 439/2 மே.தீ 2015.

# ஆஸியின் வெற்றிக்கு மீண்டும் வழிவகுத்த ஸ்ராக்

மீண்டும் ஒருமுறை மிட்சல் ஸ்ராக்கின் அசத்தலான பந்துவீச்சு தொடர கார்ல்ரன் மிட் மும்முனை தொடரில் இந்திய அணிக்கு எதிரான போட்டியில் அவுஸ்திரேலிய அணி 6 பந்துகள் மீதமிருக்கையில் 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இரு அணியினதும் ஆரம்ப வீரர்கள் (ரோகித் சர்மா இந்., ஆரோன் பின்ஞ் ஆஸி) சிறப்பாக துடுப்பெடுத்தாடிய போதிலும், இரு அணிக்கும் இடையில் வேறுபட்டவராக மிட்சல் ஸ்ராக் தென்பட்டார். மீண்டும் ஒருமுறை போட்டியின் வெற்றியாளராக செயற்பட்ட அவர் அவுஸ்திரேலிய மண்ணில் 2ஆவது சிறந்த பந்துவீச்சையும் பதிவு செய்ததுடன் அணியின் வெற்றியில் முக்கிய பங்கு வகித்தார். (அகார்கர் இந். 6/42 எதிரணி ஆஸி - 2004 மெல்பேர்ன்)

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி அங்கு மும்முனைத் தொடரில் பங்குபற்றுகிறது. இதில் 3ஆவது அணியாக இங்கிலாந்து அணி பங்குபற்றுகிறது.

இத்தொடரின் 2ஆவது போட்டி அவுஸ்திரேலிய - இந்திய அணிகளுக்கு இடையில் மெல்பேர்னில் நேற்று நடைபெற்றது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, ரோஹித் சர்மாவின் அபார சதத்தின் (138) உதவியுடன் 50 ஓவர்களின் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 267 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் அசத்திய ஸ்ராக் 43 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

268 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி, ஆரோன் பின்ஞ் அசத்தலான (94) துடுப்பாட்டத்தினால் 49 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை (269) அடைந்தது.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பில் யாதவ் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

போட்டியின் ஆட்டநாயகனாக ஆஸியின் ஸ்ராக் தெரிவானார்.

இவ்வெற்றி மூலம் 4 புள்ளிகளை பெற்றுக் கொண்ட அவுஸ்திரேலிய அணி புள்ளிப் பட்டியலில் 9 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது.

இத்தொடரின் 3ஆவது போட்டி இங்கிலாந்து - இந்திய அணிகளுக்கு இடையில் நாளை பிரிஸ்பேர்னில் ஆரம்பமாகிறது.



## அரச பணத்தில்...

வானொலிகளில் விளம்பரங்கள் செய்வதற்காக 330 மில்லியன் ரூபாயையும், எல்லா நாளிதழ்களிலும் முழுப்பக்க விளம்பரங்களை பிரசுரிப்பதற்காக 700 மில்லியன் ரூபாயையும் மகிந்த ராஜபக்ஷ செலவிட்டிருந்தார்.

இத்தொகையில் விளம்பரங்களை தயாரிப்பதற்கான செலவு உள்ளடக்கப்படவில்லை. இதனடிப்படையில் தனியே விளம்பரங்களுக்காக மகிந்த ராஜபக்ஷ செலவு செய்த மொத்த தொகை 2.03 பில்லியன் ரூபாயாகும்.

அரசாங்கத்தின் நிதியே இவ்வாறு செலவிடப்பட்டது. ஜனாதிபதி செயலகம் மற்றும் அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியே இந்த விளம்பரச் செலவுகளுக்காக பயன்படுத்தப்பட்டது.

அதேவேளை, விளம்பரங்களை தயாரிப்பதற்கான செலவை உள்ளடக்கிய விளம்பரச் செலவுகள் இதைவிடவும் அதிகமாகவே இருக்கும் என்று நிதி அமைச்சின் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன், உள்ளூர் ஊடகங்களில் மட்டுமன்றி வெளிநாட்டு தமிழ், ஆங்கில மற்றும் சிங்கள இணைய ஊடகங்களிலும் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக விளம்பரங்கள் செய்யப்பட்டிருந்தன. இந்தியாவின் தமிழகத்தில் இருந்து வெளியாகும் நாளிதழ்களின் இணையங்களிலும் கூட மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டிருந்தன.

அதேவேளை, ஜனாதிபதி தேர்தலில் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன 676 மில்லியன் ரூபாயை விளம்பரங்களுக்காக செலவிட்டிருந்தார் என இவ்வூடகம் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது. (எ)

## இடைக்கால...

அரச ஊழியர்களுக்கு 5000 ரூபா சம்பளம் வரும் ஜனவரி 30 தொடக்கம் அதிகரிக்கப்படும். மறைமுகவரிகள் நீக்கப்படும். சமுர்த்திப் பயனாளிகளுக்கு 200 ரூபா அதிகரிக்கப்படும். பல்கலைக்கழக மாணவர்களுக்கான "மகாபொல" புலமைப்பரிசில் அதிகரிக்கப்படும், ஓய்வூதியர்களுக்கு 3500 ரூபா ஓய்வூதிய இடைக்காலக் கொடுப்பனவும் வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை அரசாங்கத்தின 100 நாள் திட்டங்களுக்கு 89 ஆயிரம் கோடி ரூபா தேவைப்படும் என எதிர்க்கட்சிகளில் ஒன்றான பவித்திரு ஹெல உறுமயவின் தலைவர் கம்மன்பில தெரிவித்தார். (எ)

## கே.பியை...

செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் பொறுப்பாளராக செயற்பட்டு வருகின்றார்.

ஆனால் அவரிடம் பல கப்பல்களும், தங்க நகைகளும், நூற்றுக் கணக்கான வங்கி கணக்குகள் உள்ளிட்ட பல வியாபாரங்களும் இருக்கின்றன.

இவற்றில் இருந்து மகிந்த ராஜபக்ஷவும், கோத்தபாய ராஜபக்ஷவும் அனுகூலகங்களை அனுபவித்ததன் பின்னர், அவருக்கு சொகுசான வாழ்க்கையை ஏற்படுத்தி கொடுத்திருக்கின்றனர். நியாயப்படி அவரிடம் உள்ள சொத்துக்கள் அரசுடமையாக்கப்பட்டிருக்க வேண்டும்.

இந்த நிலையிலேலேயே அவரை கைது செய்து, சட்ட நடவடிக்கை எடுக்க கோரி இந்த மனுவை தாக்கல் செய்யவுள்ளதாக ஜே.வி.பி தெரிவித்துள்ளது. (எ)

## மோடியை...

பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. முன்னைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் சீனாவுடனான நெருங்கிய உறவுகள் தொடர்பில் புதுடில்லி கவலை கொண்டிருந்த நிலையில், மங்கள சமரவீரவின் பயணம் இருநாட்டுக்கும் இடையிலான நல்லுறவை மேம்படுத்தும என எதிர்பார்க்கப்படுகின்றது. (எ)

## இருதரப்பு விவகாரம்...

புதுடில்லியில் நேற்று பிற்பகல் சுமார் 12.30 மணியளவில் ஆரம்பமான இந்தச் சந்திப்பில் அரசியல் தீர்வு, மீனவர்கள் விவகாரம் மற்றும் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து விவாதிக்கப்பட்டுள்ளதுடன், புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இந்தியப் பயணம் குறித்தும் ஆலோசனைகள் இடம் பெற்றதாகவும் கூறப்படுகிறது.

இச்சந்திப்பில், இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ்"டன் வெளிவிவகாரச் செயலாளர் சுஜாதா சிங், இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கான மேலதிகச் செயலாளர் சுசித்ராதுரை, வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சையத் அக்பருதீன் மற்றும் இலங்கைக்கான தூதுவர் வை. கே.சின்ஹா உள்ளிட்ட அதிகாரிகளும் பங்கேற்றிருந்தனர்.

அதேவேளை, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமர்வீரவுடன் புதுடில்லிக்கான இலங்கைத் தூதுவர் சுதர்சன் செனிவிரத்ன உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் இந்தியாவின் ஆதரவைப் பெறுவதற்கு புதிய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர முயற்சிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜின் அழைப்பை ஏற்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர மூன்று நாள் அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொண்டு நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை புதுடில்லிக்கு விஜயம் செய்தார்.

இதனிடையே, புதுடில்லி புறப்படுவதற்கு முன்னதாக கொழும்பில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட வெளிவிவகார அமைச்சர் மங்கள் சமரவீர, "இலங்கை சீனாவுடன் எப்போதும் நல்லுறவைக் கொண்டுள்ளது. ஆனால் அது அயல் நாடுகளுடனான உறவுகளைக் கெடுப்பதாக அமையக் கூடாது.

நான் வெளிவிவகார அமைச்சராக பதவியேற்றவுடன் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜிடம் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. அவர் எனது பழைய நண்பர். 1990களில் நாம் இருவரும் தொலைத் தொடர்பு அமைச்சர்களாக இருந்தோம்.

அவர் என்னை ஞாயிற்றுக்கிழமை (நேற்று) மதிய போசனத்துக்கு வருமாறு அழைத்த போது, அந்த அழைப்பை உடனே நான் ஏற்றுக கொண்டேன். இது ஒரு தனிப்பட்ட அழைப்பாக முன்னர் இருந்த போதிலும், தற்போது அது அதிகாரபூர்வ பயணமாகியுள்ளது.

எனது இந்த பயணத்தின் போது இரு நாடுகளுக்கும் இடையில் பல ஆண்டுகளாகத் தொடரும் உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் பல்வேறு இருதரப்பு விவகாரங்கள் குறித்து விவாதிக்கப்படும் என்று மங்கள சமரவீர மேலும் தெரிவித்திருந்தார்.

இதனிடையே, ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் இந்தியாவின் ஆதரவைப் பெறுவதற்கு கொழும்பு முயற்சிகளை மேற்கொள்ளும் என இந்திய வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆயினும், மனிதவுரிமை நிலைமைகளில் ஏற்படும் முன்னேற்றங்கள் மற்றும் அரசியல் தீர்வு போன்ற விடயங்களைப் பொறுத்தே இலங்கைக்கு ஆதரவு வழங்குவது குறித்த முடிவு தங்கியிருப்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, புதுடில்லியில் இருந்து இன்று மாலை கொழும்பு திரும்பவுள்ள மங்கள சமரவீர, தன்னுடன் வெளிவிவகார அமைச்சின் எந்த அதிகாரியையும் அழைத்துச் செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## கோவில்...

ளையார் கோவில் கேணிக்கு அருகாமையில் நேற்று மாலை முதல் மோட்டார் சைக்கிள் ஒன்றும் ரீ சேர்ட் ஒன்றும் அநாதரவாக இருப்பதை பார்த்த அப் பகுதி மக்கள் பருத்தித்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

அத்தகவலை அடுத்து அங்கு சென்ற பொலிஸார் கடற்படையின் உதவியுடன் கேணி குள்ளிலிருந்து சடலத்தை மீட்டுள்ளனர்.

குறித்த இளைஞர் மேலும் இருவருடன் அப்பகுதிக்கு குளிக்க வந்ததாகவும் அவர்கள் இருவரும் தலைமறைவாகியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலத்தில் காயங்கள் காணப்படுவதால் குறித்த நபர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகம் கொண்ட பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருபது கொள்...

20 கொள்கலன்களில் இவ்வாறு ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பொருட்டு மிதக்கும் ஆயுத களஞ்சியமாக இந்த கப்பலில் ஆயுதங்கள் இருந்ததாகவும் இதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி அளிக்கப்பட்டிருந்ததாகவும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

எனினும் இது தொடர்பில் பிரதி பொலிஸ் அதிகாரி ஒருவரின் தலைமையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ ஊடக பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதேவேளை பிலியந்தலைப் பகுதியில் வீடொன்றில் இருந்து பதிவு செய்யப்படாத லம்போகினி ரக பந்தய வாகனம் ஒன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த வாகனம் தனது நண்பருக்குச் சொந்தமானது என்று பொலிஸாருக்கு கூறியுள்ள குறித்த வீட்டின் உரிமையாளர், அதற்குரிய ஆவணத்தை வழங்கவில்லை. இந்த வாகனம மகிந்த ராஜபக்சவின் புதல்வர்களால் பயன்படுத்தப்பட்ட வேகப் பந்தய வாகனங்களில் ஒன்று எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மகிந்த ராஜபக்ச மற்றும் நாமல் ராஜபக்ச ஆகியோரின் உருவப்படங்கள் பொறித்த 68ஆயிரம் சுவர் மணிக்கூடுகளை பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர்.

சபுகஸ்கந்த மாபிம பகுதியில் உள்ள களஞ்சியம் ஒன்றில் சந்தேகத்துக்குரிய முறையில் பொருட்கள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக கிடைத்த தகவலை அடுத்து, நீதிமன்ற உத்தரவின் பேரில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது இந்த சுவர் மணிக்கூடுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தக் களஞ்சியசாலையை மாதம் ஒன்றுக்கு 1.5 மில்லியன் ரூபாய் வாடகைக்கு துறைமுக அதிகாரசபைக்கு வழங்கியிருப்பதாக அதன் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இதனிடையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் கட்டுப்பாட்டின் கீழிருந்த அலரி மாளிகையில் பெருந்தொகைப் பணம் மற்றும் நகைகள் கடந்த வெள்ளிக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பேலியகொடை பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த தகவல்களை அடுத்தே இந்த கொள்கலன்கள் இரண்டும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். பேலியகொடை-நீர்கொழும்பு வீதியிலுள்ள ஓரிடத்தில் வைத்தே இவ்விரு கொள்கலன்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. அவ்விரு கொள்கலன்களிலும் ஆடைகள், மர தளபாடங்கள் மற்றும் நினைவுச்சின்னங்கள் இருந்துள்ளன.

அந்த கொள்கலன்களுடன் சென்ற அதிகாரிகளிடம் இதுதொடர்பில் விசாரணை நடத்தியபோது, அது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவருடைய குடும்பத்தின் தனிப்பட்ட பொருட்கள் என்றும் தெரிவித்துள்ளனர். (எ-11)


### வீடுகள் வாடகைக்கு

**இலக்கம் 41, பலாலி வீதி, யாழ்ப்பாணம்**
மற்றும்
**இலக்கம் 51, பலாலி வீதி, யாழ்ப்பாணம்**

என்னும் முகவரிகளில் உள்ள வீடுகள் வாடகைக்கு உண்டு.
நிறுவனங்கள் அல்லது அரச ஊழியர்கள் விரும்பத்தக்கது.
(9183)

தொலைபேசி இலக்கம்:-
**0765930239, 0765930248**


## பிரதம வேட்பாள...

கப்பட்டுள்ளது.

புதிய அரசாங்கத்தின் 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நிறைவேற்று அதிகாரங்கள் குறைககப்பட்ட பின்னர் அவர் கட்சியின் பிரதம மந்திரி வேட்பாளராக போட்டியிடாமல் ஜனாதிபதி பதவியை நீடிப்பார்.

அதேநேரம் முன்னர் கூறப்பட்டதைப் போன்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பிரதம மந்திரி பதவிக்காக போட்டியிடமாட்டார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தநிலையில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி இந்த தடவை தமது சொந்த கை சின்னத்திலேயே போட்டியிடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-1)

## பாது...

அத்துடன் குறைந்தது ஐந்து டிபெண்டர் வாகனங்கள் குறித்த அமைச்சர்களின் பயணங்களின் போது பாதுகாப்பு வழங்கிச் செல்வது நடைமுறையில் உள்ளது. எனினும் மைத்திரி ஆட்சியில் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள ருவண் விஜேவர்த்தன, தனக்கான விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளை மறுத்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குரிய சாதாரண பொலிஸ் பாதுகாப்பே தனக்குப் போதுமானது என்று தெரிவித்துள்ளார்.

அத்துடன் பாதுகாப்பு அமைச்சுக்குரிய டிபெண்டர் வாகனங்களின் பாதுகாப்பும் தனக்குத் தேவையற்றது என்றும் அவர் ஒதுக்கியுள்ளார். (எ-1)


Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ்
பொதி விநியோக சேவை
விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION
MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு -
021 753 8330, 0777 151 101
(C-9864)



### பதவி வெற்றிடம்

**பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

- ♦ கணனி பக்க வடிவமைப்பாளர் – அனுபவமுள்ளவர்கள் மட்டும் (இருபாலாரும்)
- ♦ ஒப்புநோக்குநர் (பெண்கள்)
- ♦ அலுவலகச் செய்தியாளர்கள் – உள்ளகம், வெளியகம் (இருபாலாரும்)
- ♦ களஞ்சியக் காப்பாளர் (ஆண்கள்)

**தகைமை :- வயது 25இற்கு மேல்**
**கல்வித்தரம் :- க.பொ.த உயர்தரத்தில் சித்தி**

*யாழ்.நகருக்கு அண்மையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.*

**தகுதியானவர்கள் 21.01.2015 புதன்கிழமை அன்று பிற்பகல் 03.30 மணிக்கு**

**இல.3, 2-ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**

**எனும் முகவரியில் அமைந்துள்ள வலம்புரி அலுவலகத்திற்கு சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பப் படிவத்துடன் நேரில் வரவும்.**

- முகாமையாளர்
வலம்புரி



### மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



உயர்திரு.
**தி.சிறீஸ்கந்தராசா J.P**
(இலங்கை வங்கி வாடிக்கையாளர் சேவை முகாமையாளர்) யாழ்ப்பாணம்

நல்லூர் வன்னியசிங்கம் பொதுப்பணி மன்றத் தலைவர், அகில இலங்கை சமாதான நீதவான், சமூக திலகம் உயர்திரு.திருநாவுக்கரசு சிறீஸ்கந்தராசா அவர்கள் யாழ்ப்பாணம் இலங்கை வங்கியில் வாடிக்கையாளர் சேவை முகாமையாளராக 34 வருடங்கள் சேவை செய்து இன்று ஓய்வுபெறுகிறார்.

இவர் நல்லூர் மக்கள் சனசமூக நிலைய ஸ்தாபன உறுப்பினரும் நல்லூர் சங்கிலியன் மன்ற முன்னாள் தலைவரும், நல்லூர் சட்டநாதர் ஆலய முன்னாள் செயலாளரும், பொருளாளரும், யாழ்.செங்குந்த இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க முன்னாள் செயலாளரும், செங்குந்த இந்துக் கல்லூரியின் கனடா பழைய மாணவர் சங்க இணைப்பாளரும், நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலய அபிவிருத்திக் குழுவின் கனடா பழைய மாணவர் சங்க இணைப்பாளரும், இலங்கை வங்கி ஊழியர் சங்க பொதுக்குழு உறுப்பினரும், இலங்கை வங்கி ஊழியர் சங்க யாழ்.மாவட்ட நீண்டநாள் செயலாளரும் ஆவார்.

இன்று இவரின் 60வது பிறந்ததின வாழ்த்தைத் தெரிவிப்பதோடு இவர் தனது குடும்பத்தாருடன் சகல சௌபாக்கியங்களையும் பெற்று மேலும் சமூக சேவைகளை மேற்கொள்ள வேண்டுமென எல்லாம் வல்ல நல்லைநாயகி உடன்உறையும் நல்லைநாத சுவாமியை வேண்டி வாழ்த்துகின்றோம்.

செங்குந்த சந்தை
அருகாமை, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
19.01.2015

**வன்னியசிங்கம் பொதுப்பணி மன்றத்தினர்**
(9184)



### ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af



- வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் ஒரே சர்வதேச நிறுவனம்.
- உலகம் முழுவதும் 1040+ கிளைகள்.
- INTERNATIONAL DIPLOMAS.
- ஆசிரியர்கள்: யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்)

தைமாத வகுப்புகளுக்கு உடன் அழையுங்கள்

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்



### மாபெரும் புத்தக கண்காட்சியும் மலிவு விற்பனையும்

**இடம் :- யாழ் புத்தகசாலை** (மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்)
(305,307,309 ஞானம்ஸ் ஹோட்டல் அருகாமை)
(பெற்றோர், ஆசிரியர், மாணவர்கள் வேண்டுகோளிற்கிணங்க)

**காலம்:-29.12.2014 முதல் 15.02.2015 வரை**
**நேரம்:- காலை 8.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை**
(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)

பிரபல இந்திய எழுத்தாளர்களின் நூல்கள், 2015 ஆம் ஆண்டிற்கான புதிய பாடத்திட்டத்திற்கான நூல்கள், சர்வதேச பாடசாலை புத்தகங்கள் CIMA புத்தகங்கள்

**English & Tamil Medium**

தரம் 10 க்கு உரிய தமிழ் மொழியும் இலக்கியமும் (ஆசிரியர் திருநாவுக்கரசு), English Literature புத்தகங்களும் வெளிவந்துவிட்டது பெற்றுக்கொள்ளலாம்.

அனைத்து புத்தகங்களுக்கும் 20% கழிவு, அப்பியாசப் புத்தகங்கள் 30% தொடக்கம் 40% கழிவு, பாடசாலை உபகரணங்களுக்கு 10% கழிவும்.

**யாழ். புத்தகசாலை**

**305, 307, 309 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.**
(C-9867) (ஞானம்ஸ் ஹோட்டல் அருகாமையில்)

**தொடர்புகளுக்கு:-0778349507, 0214545552**



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.01.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org